
கோகுலம்

GOKULAM

மார்ச் 84 ரூ.2







கோகுலம்

மலர்—2 இதழ்—2

1984 மார்ச் மாத இதழ்

கௌரவ ஆசிரியர்:

அழ. வள்ளியப்பா

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
- பாரதியார்

தனிப்பிரதி ரூ. 2/- ஆண்டுச் சந்தா ரூ. 24/-

அன்புள்ள சிறுவர் சிறுமியர்க்கு

கோகுலம்

'கருணை விழிகள்'

'வில் விஜயன்'

இரண்டையும் பாராட்டி, தினந்தோறும் ஏராளமான கடிதங்கள் வருகின்றன.

இதயத்தால் பாராட்டுகிறவர்கள் ஆயிரக் கணக்கில் இருக்கலாம். ஆயினும், அவர்களில் எழுதி அனுப்புகிறவர்கள் நூற்றுக் கணக்கிலேதான் இருப்பார்கள். எல்லாராலும் எழுதி அனுப்ப முடிவதில்லை. பாராட்டுகின்ற எல்லாருக்குமே நன்றி.


இந்த இதழிலும் ஒரு வண்ணப் படக்கதை இடம் பெற்றிருக்கிறது. வில் விஜயனைப் போலவே இந்த பாக்கியவான் போளாஜியும் உங்களின் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிப்பார் என்று நம்புகிறோம்!

'மாலி — ஜாலி' கார்ட்டூன் அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து வந்து உங்களின் ஆனந்தத்தை அதிகப்படுத்தப் போகிறது! 'பள்ளியில் நடந்தது' பகுதியும் அடுத்த இதழில் ஆரம்பமாகிறது.

உங்களுக்காக அரும்பணி ஆற்றியவர்கள் இளமைப் பருவத்தில் எப்படி இருந்தார்கள்? என்னென்ன செய்தார்கள்? அந்தக் காலத்துச் சூழ்நிலைகள் எப்படி இருந்தன? இவற்றையெல்லாம் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டாமா? 93 வயது எழுத்தாளர், தாம் துள்ளித் திரிந்த பருவத்தைப் பற்றி எழுதியிருக்கிறார்; படித்துப் பயன் பெறுங்கள்.

அழ. வள்ளியப்பா





இந்த இதழ் எழுத்தாளர்கள்

வே. சபாநாயகம்



சிவல்புரி சிங்காரம்



மு. நாராயணன்



மதிஒளி



விமலா ரகுநாதன்



பொன்மலை சந்துரு



எதிர்ப்பக்கம்:

ஸ்ரீ சங்கரானந்தேந்திர சரஸ்வதி சுவாமிகள்

இரண்டாவது அட்டையில்:

காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசாரிய சுவாமிகள்

மூன்றாவது அட்டையில் :

ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

புகைப்படங்கள்: ஏ.எஸ். அன்புக்கரசு

நான்காவது அட்டையில்:

'ஸ்கிப்பிங்' ஆடநினைத்திடும்
சிறுமிக்கு என்ன தயக்கமோ?

புகைப்படம்: எம். நடராஜன்



சப்பை மூக்கு ராஜா

மதி ஒளி

ஓர் ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவருக்கு மூக்கு சப்பையாக இருந்தது. அவர் ராஜாவாக ஆனதிலிருந்து மூக்குக் கவலையே அவருக்குப் பெரும் கவலையாகப் போய்விட்டது. தம்முடைய மூக்கு எப்படியாவது வளர்ந்து எல்லோரையும் போல இருக்கவேண்டுமென்று ஆசைப்பட்டார். அதற்காக மந்திரம், மாயம் எல்லாம் பண்ணிப் பார்த்தார். கண்ட கண்ட மருந்துகளையெல்லாம் சாப்பிட்டுப் பார்த்தார். ஒன்றும் பிரயோசனப்படவில்லை.

சதா மூக்கைப் பற்றிய கவலையினால், நாட்டைக்கூட அவர் சரியாகக் கவனிக்கவில்லை. ஒருநாள் தம் மந்திரியை அழைத்துக் கோட்டை வாசலிலே ஓர் அறிவிப்பை எழுதி வைக்கச் சொன்னார்.

''ராஜாவின் மூக்கை அவருக்குத் திருப்திப்படும் வகையில் வளரச் செய்ய வேண்டும். அதற்கு யார் வேண்டுமானாலும் முயற்சி செய்யலாம். ஆனால், ஏழு நாட்களுக்குள் கொஞ்சம்கூடப் பலன் தெரியாவிட்டால், அவர்கள் சிறையில் அடைக்கப்படுவார்கள்'' என்று, கொட்டை எழுத்துக்களில் எழுதிக் கோட்டை வாயிலில் வைத்தார் மந்திரி.

நாட்கள் நகர்ந்தன. ராஜாவின் மூக்கு சப்பையாகவே இருந்தது. அந்த ஊரில் வசித்துவந்த பாலன் என்ற சிறுவன், ஒருநாள் இந்த அறிவிப்பை வாசித்தான். கொஞ்சநேரம் யோசித்தான். சட்டென்று ஒரு யோசனை அவனுக்குத் தோன்றியது. மறுநாள், தன் ஓலைப் பெட்டியை எடுத்துக்கொண்டு ராஜாவைப் போய்ப் பார்த்தான். தான் அவரது மூக்கைச் சரிபண்ண வந்திருப்பதாகச்சொன்னான்.

ராஜாவும் அவன் சொல்படி எல்லோரையும் அங்கிருந்து போகச் சொல்லிவிட்டு, கண்களைத் துணியினால் இறுகக் கட்டிக்கொண்டு கட்டிலில் படுத்தார். பாலன் தன் ஓலைப்பெட்டியைத் திறந்து உள்ளேயிருந்த தேன் மெழுகை எடுத்தான். ராஜாவின் உடல் நிறத்திற்கேற்ப, சிறிது வர்ணம் கலந்தான். பின்பு மெழுகுக் கலவையில் மூக்கு செய்தான். பின்பு அதை விளக்கில் சூடு காட்டி, ராஜாவின் சப்பை மூக்கின் மேல் வைத்தான். சூடு பொறுக்காமல் ராஜா ''ஹா'' என்று கத்தினார்.

''சத்தம் போடாதீர்கள் அரசே! வாரத்திற்கு ஒருமுறை நான் இந்த மாதிரி வைத்தியம் செய்வேன். நீங்கள் ஆயுள் உள்ள மட்டும் இந்த வைத்தியத்தைச் செய்து கொள்ள வேண்டும். என்னைத் தவிர வேறு யாருக்கும் இந்த வைத்தியம் தெரியாது!'' என்றான் பாலன்.

சிறிது நேரம் கழித்து ராஜா கண்ணைத் திறந்தார். தன் மூக்கைத் தொட்டுப் பார்த்தார். பிறகு, கண்ணாடியில் பார்த்தார். அவருக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. பாலனை அழைத்துக்கொண்டு ராஜ சபைக்கு வந்தார். அங்கே இருந்தவர்கள் எல்லாரும் ராஜாவின் மூக்கைப் பார்த்து சந்தோஷப் பட்டார்கள்.

பிறகு ராஜாவிடம் பாலன் ரகசியமாகச் சொன்னான்: ''அரசே! உங்களுக்கு மூக்கு நழுவுவது போல் சில சமயம் தோன்றும். அப்பொழுது தாமதிக்காமல் என்னைக் கூப்பிட்டு அனுப்புங்கள். வேறெதுவும் நீங்கள் செய்யக் கூடாது!'' என்றான்.

''உன்னை நான் எதற்காகக் கூப்பிட்டு அனுப்ப வேண்டும்? தேவையில்லை. நீ என்கூடவே எப்பொழுதும் இந்த அரண்மனையிலேயேதான் இருக்கவேண்டும். இது என் கட்டளை'' என்றார் ராஜா.

பாலன் வேண்டாமென்று சொல்வான்? அரண்மனையிலேயே சுகமாக, ஆனந்தமாக இருந்தான். மூக்கைப் பற்றிக் கவலைப்படாமல், நாட்டு நலத்தை அரசர் கவனிக்க வழி செய்து விட்டான்!

வளரும் வயதில் குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்



காம்ப்ளான்®

ஒன்றில்தான் அவர்களுக்கு அன்றாடம் தேவைப்படும் 23 ஊட்டச் சத்துக்கள் அடங்கியுள்ளன

வளரும் குழந்தைகளுக்கென்றே சிறப்பான சில தேவைகள் உள்ளன—வளரும் வயதிலே உடம்புக்குத் தேவைப்படும் மிகச் சிறந்த புரதம், 22 மூலாதார ஊட்டச்சத்துக்கள்—அளிக்கிறது காம்ப்ளான். மறவாதீர், டாக்டர்களின் சிபாரிசு பெற்ற, திட்டமிட்ட உணவு காம்ப்ளான.

காம்ப்ளான் கிடைக்கிறது இனிய சுவைகளில்:
சாக்கலேட், ஏலக்காய்—குங்குமப்பூ மற்றும் ஸ்ட்ரபெர்ரி—
மற்றும் சாதாரகத்திலும் கூட.


GLC.6-2012 TM


திட்டமிட்ட பரிபூரண உணவு

காம்ப்ளான்®

இலவசம்! 32 பக்கங்கள் கொண்ட கைப்புத்தகம். "குடும்பத்திற்கான பரிபூரண ஊட்டச் சத்துணவு வழிகாட்டி" 50 பைசா தபால் தலை இணைத்து இம் முகவரிக்கு எழுதிப் பெறுக: தபால் பை நம்பர் 19118, (Comp) பம்பாய் 400 025.


திருக்குறள் புதிர்





மேலே உள்ள இரு படங்களும், இரு குறள்களை நினைவுபடுத்துகின்றன. எந்த எந்தத் திருக்குறள் என்று தெரிகிறதா? ஒரு தாளில் இரு குறள்களையும் எழுதிக்கொண்டு, அவை சரியாக உள்ளனவா என்று 24—ஆம் பக்கத்தைப் பார்த்து முடிவு செய்யுங்கள்.

பிழையில்லாமல் தமிழ் எழுதுவோம்



தாத்தா வந்தார்

தணிகை உலகநாதன்

திங்கட்கிழமை, உச்சிவேளை. கடிகாரத்தில் 'டிங், டிங்' என்று மணி பன்னிரண்டு அடித்தது. மதுரைக்குச் சென்றிருந்த தாத்தா குதிரை வண்டியிலிருந்து இறங்கினார். பாவை ஆசையாக அவர் கையைப் பிடித்து, வீட்டிற்குள் அழைத்துப் போனாள். தாத்தா, கூடத்தில் இருந்த சாய்வு நாற்காலியில் 'அப்பாடா!' என்று அமர்ந்தார்.

வெயிலில் களைத்துவந்த தாத்தாவுக்குத் தாகம் அதிகமாக இருப்பதை அறிந்த பாவை, ''தாத்தா, மிகவும் களைப்பாக இருக்கிறீர்கள். உங்களுக்குப் **பச்சைத் தண்ணீரோ, அல்லது வெந்நீர்த் தண்ணீரோ** கொண்டு வரட்டுமா? தண்ணீர் சாப்பிட்ட பிறகு உணவு சாப்பிடலாம்'' என்றாள்.

பாவையின் பேச்சில் பிழைகள் இருப்பதைக் கண்ட தாத்தா சிரித்தார். அவற்றைப் பக்குவமாகச் சுட்டிக் காட்டினார்.

''பாவை, உன் அன்பே அன்பு! சரி, பச்சைத் தண்ணீர் கொண்டு வா, பார்க்கலாம்'' என்றார்.

பாவை சமையலறைக்கு ஓடிப் போய் ஒரு குவளையில் தண்ணீர் கொண்டுவந்து தாத்தாவிடம் நீட்டினாள்.

''என்ன இது பாவை! நான் கேட்டது ஒன்று; நீ கொடுப்பது வேறொன்று.''

''தாத்தா! நீங்கள் கேட்ட பச்சைத் தண்ணீரைத்தான் கொண்டு வந்தேன். தெரியவில்லையா?''

''இல்லை. நீ கொண்டு வந்தது பச்சை நிறமாக இல்லையே என்றுதான் யோசிக்கிறேன்.''

''என்ன தாத்தா, வேடிக்கை! குளிர்ந்த நீரைத்தானே கொண்டு வந்திருக்கிறேன். இது பச்சைத் தண்ணீர்தானே?''

''உம். இது **தண்ணீர்!** நான் கேட்டது பச்சைத் தண்ணீர்தானே?''

''எனக்கு ஒன்றுமே புரியவில்லை, தாத்தா! எதற்கும் முதலில் இதைச் சாப்பிடுங்கள். களைப்புத் தீரட்டும். பிறகு பேசலாம்.''

''பாவை! தண்ணீர் என்றாலே போதும். தண்மை + நீர் = தண்ணீர். குளிர்ந்த நீர் என்பது பொருள். அதையேன் பச்சைத் தண்ணீர் என்று கூற வேண்டும்?''

''நல்லதுதான். இனி அப்படியே சொல்லுவேன்.''

''அது மட்டுமில்லை. வெந்நீர்த் தண்ணீர் என்று சொன்னாய். வெம்மை + நீர் = வெந்நீர். சூடான நீர் என்பது பொருள். வெந்நீர் என்றாலே போதும். அதை வெந்நீர்த் தண்ணீர் என்று சொல்லலாமா?''

''அப்பாடா! என்ன அருமையான விளக்கம். தாத்தா என்றால் தாத்தா. எங்கள் அ ரு மை யா ன தமிழ்த் தாத்தா.''

''பாவை, இன்னொன்றும் சொல்கிறேன், கேள். தண்ணீரோ **அல்லது** வெந்நீரோ என்று கூற வேண்டியதில்லை. தண்ணீரோ, வெந்நீரோ என்று சொல்வதே சரி. இரண்டு சொற்களிலும் வரும் 'ஓ' என்னும் எழுத்தே **அல்லது** என்பதைக் குறிக்கிறது. தண்ணீர் அல்லது வெந்நீர் என்று சொல்வதில் பிழையில்லை.''

''அடடா! வேடிக்கையாகவே என் தவற்றை எடுத்துக் கூறி விட்டீர்கள்!''

''பாவை, மற்றொன்றையும் நீ தெரிந்து கொள்வதில் தவறு இல்லை.''

''என்ன அது?''

''தண்ணீர் **குடிக்கிறீர்களா?** என்று கேட்கலாமே தவிரத் தண்ணீர் **சாப்பிடுகிறீர்களா?** என்று கேட்க வேண்டுவதில்லை. உணவு சாப்பிடலாம் என்று சொன்னாயே, அது சரி. ஆனால், குடிக்கும் பொருள்களாகிய காஃபி, தண்ணீர், வெந்நீர் போன்றவற்றைக் 'குடிக்கிறீர்களா?' என்றே கூறலாம்; 'சாப்பிடுகிறீர்களா?' என்பது தவறு.''

''ரொம்ப நன்றி, தாத்தா. வாருங்கள், உணவு சாப்பிடலாம்.''

'' 'ரொம்ப' என்பது கொச்சை மொழி. அதையும் **நிரம்ப** என்றே சொல்லிப் பழகு. பசி எடுக்கிறது. வா, சாப்பிடலாம்.''

கேள்வி இங்கே; பதில் எங்கே?

1. வீரச் செயல் புரிந்த சிறுவர் சிறுமியருக்கு ஆண்டுதோறும் விருதுகள் வழங்கி வருகிறார்களே, இப்படி இதுவரை எத்தனை பேர் விருது பெற்றிருக்கிறார்கள்? அவர்களில் சிறுவர் எத்தனை? சிறுமியர் எத்தனை?
2. சில கடிதங்களின் அடியிலே N. B. என்று போட்டு ஏதேனும் எழுதப்பட்டிருக்கும். N. B. என்றால் என்ன?
3. ஆரம்பப்பள்ளி ஆசிரியராயிருந்த ஒருவர், இத்தாலி தேசத்தின் சர்வாதிகாரியானார். அவர் யார்?
4. அமெரிக்காவில் 'காங்கிரஸ்மேன்' என்றால் யார்?
5. வரிக்குதிரை ஒரே ஒரு கண்டத்தில் மட்டுமே வாழ்கிறது. அது எந்தக் கண்டம்?
6. ஸ்டெயின்லஸ் ஸ்டீல் —அதாவது எவர் சில்வரைக் கண்டுபிடித்தவர் யார்?
7. இந்தியாவுக்கு முதன்முதலா முந்திரி மரத்தைக் கொண்டு வந்த வெளி நாட்டார் யார்? எப்போது?
8. பூமியில் ஒரு சிறுவனுடைய எடை 48 கிலோ கிராம். சந்திரமண்டலத்தில் அவனது எடை எத்தனை கிலோ கிராமாக இருக்கும்?
9. கம்பர் எழுதிய இராமாயணம் 'கம்ப ராமாயணம்.' துளசிதாசர் இந்தியில் எழுதிய இராமாயணத்தின் பெயர் என்ன?
10. கல்கத்தாவில் உள்ளது எந்த வகைத் துறைமுகம்? கடல் துறைமுகமா, ஆற்றுத் துறைமுகமா? ஏரித்துறை முகமா?
11. நம் தேசத்தில் முதல் முதலாக ஏவுகணைத் தளம் எங்கே நிறுவப்பட்டது? எந்த ஆண்டில்?
12. மிருதங்கம் முற்காலத்தில் எதனால் செய்யப்பட்டது?
13. பிரெஞ்சு வீராங்கனை ஜோன் ஆஃப் ஆர்க் தீயிட்டுக் கொல்லப்பட்ட போது அவள்வயது என்ன?
14. மகாத்மா காந்தியின் அஸ்தி அடங்கிய சமாதியை நடுவே வைத்து ஒரு மண்டபம் கட்டப்பட்டுள்ளது. அவர் பிறந்த அக்டோபர் 2—ம் தேதி சூரியஒளி அந்தச் சமாதி மீது படும்படியாக மிகவும் திறமையாகக் கட்டியிருக்கிறார்கள். அது எந்த ஊரில்?
15. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தேசியப் பறவை எது?



16. உலகப் புகழ்பெற்ற ஒரு விஞ்ஞானி சிறுவராயிருந்த போது எடுக்கப்பட்டது இந்தப் படம். அந்த விஞ்ஞானி யார்?
17. 'ஏ', 'பி', 'சி' என்ற வைட்டமின்களில் ஒன்று ஆப்பிள், பால், முட்டையின் மஞ்சள் கரு, கைக்குத்தல் அரிசி ஆகியவற்றிலிருந்து கிடைக்கிறது. அது எந்த வைட்டமின்?

பதில் இங்கே!

1. 250 பேர்: சிறுவர்: 198, சிறுமியர்: 52
2. NOTA BENE என்ற லத்தீன் சொற்களின் சுருக்கம்தான் N. B. — அதாவது NOTE WELL நன்கு கவனிக்கவும் என்று பொருள்.
3. முசோலினி.
4. நம் தேசத்துப் பார்லிமெண்ட் உறுப்பினர் போல, அமெரிக்காவிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினரை 'காங்கிரஸ் மேன்', என்று அழைக்கிறார்கள்.
5. ஆப்பிரிக்கக் கண்டம்.
6. ஹென்றி பிரியர்லே.
7. போர்ச்சுகீசியர் — சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பு.
8. கிட்டத்தட்ட 7.5 கிலோ கிராம் (16%).
9. ராம் சரித மானஸ்.
10. ஆற்றுத் துறைமுகம்.
11. கேரளாவிலுள்ள தும்பா என்னும் இடத்தில் — 1963—ல்.
12. மண்ணினால்.
13. பத்தொன்பது.
14. கன்னியாகுமரியில்.
15. கழுகு.
16. தாமஸ் ஆல்வா எடிசன்,
17. வைட்டமின்—'பி'

கருணை விழிகள்

ஆர். பொன்னம்மாள்



முன்கதைச் சுருக்கம்

மோகனுக்கு அப்பா, அம்மா இல்லை. பாட்டிதான் அவனை வளர்த்து வருகிறாள். பாட்டிக்கு உடல்நிலை சரியில்லாததால், 6—வது வகுப்புடன் படிப்பை நிறுத்திவிட்டுச் சுண்டல் முறுக்கு விற்றும், பேப்பர் போட்டும், பிள்ளைகளைப் பள்ளிகளில் கொண்டு போய் விட்டும் சம்பாதித்துப் பாட்டியுடன் காலம் தள்ளி வருகிறான். பாட்டி அவனுக்கு நல்ல நல்ல கதைகளையும் அறிவுரைகளையும் கூறி நல்லபடியாக வளர்த்து வருகிறாள்.

ஒருநாள் பஸ்ஸில் ஒரு சிறுவன் ஒரு பெரியவரின் பையிலிருந்து திருடும்போது மோகன் அவனைக் கையும் களவுமாகப் பிடிக்க, ரூ. 7500/- காப்பாற்றப்படுகிறது. ஆயினும், திருட முயன்ற கபாலி என்ற அந்தச் சிறுவன் தப்பி ஓடிவிடுகிறான். பெரியவர் மோகனுக்குக் கொடுத்த ரூபாயை மறுத்து விடுகிறான். அவர் தமது முகவரியைக் கொடுத்து, உதவி தேவையான போது வரச் சொல்லுகிறார்.

கடற்கரையில் சுண்டல் விற்கும்போது கபாலி மோகனை அடையாளம் கண்டு கொண்டு, தன் நண்பர்களுடன் பலமாகத் தாக்கிக் காயப்படுத்துகிறான். பாட்டி காயங்களுக்கு மருந்து போட்டு, மோகனின் தாத்தா தேசவிடுதலைப் போரில் ஈடுபட்டுத் தடியடி பட்டதைச் சொல்லி ஆறுதல் அளிக்கிறாள்.

ஒருநாள் மார்க்கெட்டிலிருந்து வந்த மோகன் வழியிலே ஒரு நாய் ஒரு சிறுவனைத் தாக்கிக் கடித்துக் குதறுவதைக் காண்கிறான். தன் கையிலிருந்த மாமிசப் பொட்டலத்தை நாயின் முன் எறிய, நாய் அச்சிறுவனை விட்டுவிட்டு மாமிசத்தை குறி பார்க்கிறது. அச்சிறுவன் வேறு யாருமல்ல; கபாலியேதான்!

ரிக்ஷாவில் கபாலியை ஏற்றிச் சென்று ஆஸ்பத்திரியில் சேர்த்து அவன் குணம் பெற உதவுகிறான். தன்னால் நன்கு அடிபட்ட மோகனே தனக்கு இவ்வளவு தூரம் உதவியது கண்டு கபாலி மனம் மாறுகிறான். தனக்குத் தெரிந்த ஒரு டீக்கடையில் கபாலிக்கு வேலை வாங்கித் தருவதாகச் சொல்கிறான் மோகன்.

இதற்கிடையில் செட்டியார் வீட்டில் மேஜைமேல் வைத்திருந்த வைர நெக்லஸ் காணாமல் போய்விடுகிறது. அந்த வீட்டு மகேஷைப் பள்ளிக்கு வழக்கமாக அழைத்துச் செல்லும் மோகன் மீது சப் – இன்ஸ்பெக்டர் சந்தேகப்பட்டு விசாரிக்கிறார்.

மேலே படியுங்கள்.

②

மோகனைப் பார்த்து இன்ஸ்பெக்டர் மேலும் கேட்டார்:

''நடுவிலே வேறே யாராவது வந்தாங்களா?''

''யாரும் வரல்லேங்க.''

''நல்லா யோசிச்சுச் சொல்லு?''

மோகன் சிறிது நேரம் யோசித்தான். ''யாரும் வரல்லியே! நான் தான் படிக்கட்டிலே உட்கார்ந்திருந்தேனே!'' என்றான்.

''சரி, நீ நடுவிலே பெட்டியைத் திறந்து பார்த்தியா?''

''இல்லீங்க. சத்தியமா அதுலே என்ன இருந்ததுன்னுகூட எனக்குத் தெரியாதுங்க.''

தோட்டக்காரன், வேலைக்காரி அஞ்சலையை அழைத்து வந்ததும் இன்ஸ்பெக்டர் அவள் பக்கம் திரும்பினார். ''ஏம்மா, நீ மோகன் வர்ரப்போ உள்ளேதானே இருந்தாய்?'' என்று கேட்டார்.

''ஐயோ சாமி... இன்னிக்கின்னு எங்க வீட்டுக்காரரு குடிச்சுட்டு வந்து ஒரே ரகளை பண்ணிட்டாரு. இல்லாட்டிப் போனல், எட்டு எட்டரைக்கெல்லாம் வேலையை முடிச்சிட்டுப் போயிருப்பேனே...! அம்மா திட்டு வாங்கன்னு தெரியும்... என்ன பண்றது? பள்ளிக்கூடத்துக்கு மகேஷை மோகன் அழைச்சிட்டுப் போன பிறகு தாங்க நான் பரக்கப் பரக்க ஓடியாந்தேன்! வந்தமா, வேலையைப் பார்த்தமான்னு கெடக்கையிலே, மேசை மேலே இருக்கிறதையா கண்டேன்!'' அஞ்சலை நீள நெடுகப் பதில் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

''சலவைத் தொழிலாளி சவரிமுத்துவை, டிரைவர் அழைத்து வந்தார். ''இந்த அம்மா பாத்திரம் துலக்கிக்கிட்டிருந்தாங்க. அப்பத்தான் நான் வந்தேனுங்க. அவங்க பாத்திரம் தேய்க்கிறதுக்குள்ளே நான் அழுக்குத் துணி எடுத்துக்கிட்டுப் போயாச்சுங்க''—சவரிமுத்து தானகவே குறுக்கிட்டுப் பேசினன்.

மீண்டும் இன்ஸ்பெக்டர் மோகனைப் பார்த்து, ''தம்பி, எடுத்திருந்தால் கொடுத்து விடு... அது சரி, நீ யாரிடத்திலே கொடுத்து வைத்திருக்கிறாய்?... அந்த நெக்லஸ் பூரா வெள்ளைக் கல்லா...? நீலமும், சிவப்பும் கலந்திருந்ததா...?'' என்று கேள்வி மேல் கேள்வியாக அடுக்கினர். ஐயோ, மோகனுக்குத் தலையே வெடித்துச் சிதறிவிடும் போலிருந்தது!

''நான்தான் அதைப் பார்க்கவே இல்லையே! எனக்கு எப்படித் தெரியும்?'' என்ருன் மோகன்.

''சரி, நீ போ. எப்போது வேண்டுமானலும் உன்னைக் கூப்பிடுவோம்! ஸ்டேஷனுக்கு வர வேண்டும்'' என்ற மிரட்டலோடு மோகனை வெளியே விட்டார் இன்ஸ்பெக்டர்.

பளிங்கும், மொசைக்கும் இழைத்துக் கட்டிய செட்டியார் பங்களாவே சிறைச்சாலை மாதிரி இருந்தது மோகனுக்கு.

இதே ஆச்சி எத்தனை தடவை... ''டேய், மோகன்... ஒரு கதை சொல்லுடா... உன் கிட்டேதான் மகேஷ் ஒழுங்காச் சாப்பிடுறன்... ஒழுங்கா ஸ்கூலுக்குக் கிளம்புறன்... ரெண்டு நாளா நீ வரலியா... பள்ளிக்கூடம் போக மாட்டேன்னிட்டான்'' என்று பாராட்டி இருக்கிருங்க!

சே, என்ன உலகம்! ஒருநாள் போற்றும் வாய் மறுநாள் மண்ணை வாரித் தூற்றுகிறதே! 'வீட்டில் பாட்டி காத்திருப்பாளே... சீக்கிரம் போக வேண்டுமே!' என்ற உணர்வே இல்லை மோகனுக்கு!

* * *

வீட்டுக்குள் வந்த மோகன் பாட்டியின் அருகில் போய் உட்கார்ந்தான்.

''பாட்டி...'' என்று மெதுவாக அழைத்தான்.

''என்னடா கண்ணு, செட்டியார் வீட்டிலேயிருந்து ஆள் வந்ததே! என்ன விஷயம்?'' என்று பாட்டி கேட்டாள்.

''செட்டியார் ஒரு நெக்லஸை விலை கொடுத்து வாங்கி வீட்டுக்கு அனுப்பியிருக்கிருர்! என் போதாத காலம்.... நான் மகேஷை ஸ்கூலுக்கு அழைச்சிட்டுப் போவதற்குக் காத்திருந்த நேரத்திலே, ஒரு ஆள் நீலப் பெட்டியிலே அதைக் கொண்டுவந்து ஆச்சியிடம் கொடுத்தார். அதைக் காணுமாம்..! இன்ஸ்பெக்டர் என்னைக் கூப்பிட்டு விசாரித்தார்.... நான் எடுத்திருந்தால்தானே! இல்லையென்று சொன்னேன். திரும்பி வரும் வழியிலே ராமுவும், வாசுவும் நான்தான் திருடினதாகச் சொல்லி என்னைக் கேலி பண்ணினுங்க.'' மோகனின் கண்கள் கலங்கின.

''பைத்தியம்! கண்ணைத் துடைச்சுக்கோ! சோதனைகள்தான் ஒரு மனுஷனை உயர்ந்தவனுக்குகிறது! கஷ்டம் ஏற்படும் போது நிமிர்ந்து நிற்கணும்... அதிலேயும் நீ புத்திசாலி ஆச்சே... அப்பா சொல்லைக் காப்பாத்தறதுக்காக ராமர் காட்டுக்குப் போக லேன்னு ராமாயணமே இல்லே! பஞ்ச பாண்டவர்கள் படாத கஷ்டமா? நளன் எத்தனை கஷ்டப்பட்டான்! எத்தனையோ சின்னப் பசங்க இருந்திருக்காங்க! துருவனையும், பிரகலாதனையும் மட்டும் புராணங்கள் புகழ்ந்து பேச என்ன காரணம்? பொறுமை, விடா முயற்சி, தளராத மனசு... நாம் தப்பு செய்யாதபோது நம் மீது பழி சுமத்தினல், அது நிரந்தரமில்லே! தப்புச் செய்யாத போது ஏன் பயப்படணும்...? குலைக்கிற நாய்களை லட்சியம் பண்ணப்படாது. சரி, சரி, சாப்பிட வா.''

பாட்டி தட்டை எடுத்துச் சாதம் போட்டாள்.

''சோற்றை அளையாதே... சாப்பிடு.'' கண்டிப்பான அன்பு கட்டளையானது.

''பசிக்கிறது... ஆனால், உள்ளே சோறு இறங்க மாட்டேங்குது... நம்மை ஏன் கடவுள் சோதிக்கணும்?''

''நாம நல்லவங்களா இருக்கறதாலே! சிப்பிக்குள்ளே இருக்கிற முத்தை எடுத்துத் தங்கத்திலே பதிக்கிறோம்... வெறும் சிப்பி கவனிப்பாரற்றுக் கிடக்கிறது... சந்தனத்திலே யிருந்து வாசனை வருவதால்தானே அரைபடுது...? உண்மை வெளிப்படும் போது நீ உசந்து நிற்பாய்...''

மோகன் மௌனமாகச் சாப்பிட்டான்.

''பாட்டி, இன்னிக்கு நான் பீச்சுக்குப் போகமாட்டேன்!''

''சரி.''

''ஏன்னு கேட்கலியே?''

''தெரியுமே... உன் சினேகிதக்காரப் பசங்க கேலி பண்ணுவாங்க. அதை நினேச்சு பயம்...''

''சுண்டல் வீணாப் போகுமே...!'' பாட்டி சிரித்தாள்.

''சர்க்கஸ் கம்பெனி முதலாளி, பார்க்க வந்தவன் கடன் வாங்கிண்டு வந்திருக்கானேன்னு கவலேப்பட்ட மாதிரி இருக்கு... தினம் வியாபாரம் பண்ணி என்னத்தைக் கண்டோம்...! நானே தள்ளாதவ... அதிலேயும் காலு வேற வீங்கிக் கிடக்கு.... கோடி வீட்டு குப்புசாமி, அறுபதாங் கல்யாணத்துக்குக் கதம்ப சாதம் பண்ணி எல்லோருக்கும் விநியோகிச்சாரே, அது மாதிரி நாமும் இன்னேக்குச் சுண்டலே மற்றவங்களுக்குத் தானம் பண்ணுவோமே...!''

மோகன் பாட்டியைத் தீர்க்கமாகப் பார்த்தான்.

''பாட்டி... ராமுவோட அம்மா, அவன் ஒரு வேலே செய்யலேன்னு, 'அடிப்பேன், உதைப்பேன், அப்பாகிட்டே சொல்லுவேன்'னு மிரட்டுவாங்க. அப்படி நீ மிரட்டவும் மாட்டேங்கிறே! சீதாவோட அம்மா, 'என் கண்ணுல்லே, ராசாத்தி இல்லே.... நாம சாப்பிட வேண்டாமா...? இதைச் செய்துடும்மா'ன்னு கெஞ்சுவாங்க. அப்படியும் நீ சொல்றதில்லே... ஏன் பாட்டி.... நான் எது சொன்னாலும் சரிங்கிறியே...!''

பாட்டி மறுபடி புன்னகைத்தாள்.

''மோகன்... நீ ராமுவைப் போல் துஷ்டனில்லே... தவிர, உனக்கு அப்பா அம்மா எல்லாமே நான்தான்..... நான் கோவிச்சா நீ எங்கே போவே? நீயோ பொறுப்புணர்ந்த பிள்ளை! ஏதோ ஒரு சலிப்பிலே, என்னேக்கோ ஒரு நாள் நீ அலுத்துக்கறதும், அந்த ராமு தினம் ஏமாத்தறதும் ஒண்ணாயிடுமா? மிரட்டினா பயந்து செய்வியே தவிர பாசம் குறைஞ்சுடும். சீதா மாதிரி நீ கர்வி இல்லே, கொஞ்சிக் கெஞ்சி வேலே வாங்க...! நீயாவே பல வழியிலேயும் உழைக்கிறப்போ கெஞ்சி வேலே வாங்க வேண்டிய அவசியம் எனக்கு இருந்ததில்லே...! நீ கெஞ்சணுமின்னு ஆசைப்பட்டா.....?''

''வேணும் பாட்டி'' இப்போ மோகன் சிரித்தான். ''சுண்டலே ரெடி பண்ணு...''

அப்போது பக்கத்து வீட்டு அம்மாள் ஓடிவந்து, ''மோகன், டீக்கடையிலே ஒரே கலாட்டாப்பா.... நீ சேர்ந்து விட்டியே ஒரு பையன் - கபாலின்னு... அவன் டீ கிளாஸாலே கடைக்காரனே அடிச்சிட்டான்''என்று ஒலிபரப்பினாள்.

மோகன் ஒரு விநாடி பிரமித்து மறுவிநாடி சுதாரித்துக் கொண்டு எழுந்தான். டீக்கடையை நோக்கி ஓடினான், என்ன நடந்தது என்பதைத் தெரிந்து கொள்ள.

* * *

இரவு மணி ஒன்பது. ''யாரையுமே காணோம்! இனி எங்கே வியாபாரம் நடக்கப் போகுது?'' என்று நினைத்தபடி மோகன் கடற்கரையை விட்டுப் புறப்பட்டான். சிறிது நேரத்தில் தயங்கித் தயங்கி ஓர் உருவம் வந்தது. அது கபாலி தான் என்று தூரத்திலேயே அடையாளம் கண்டு கொண்டான் மோகன்.

இருவரும் ஒருவரை ஒருவர் நெருங்கினர். 'ஆனால், எதுவும் பேசாமல் மணலில் அமர்ந்தனர்.

திடீரென்று மோகனின் கைகளேப் பிடித்துக் கொண்டான் கபாலி.

''என்ன நடந்ததுன்னு கேட்கலியே?''


''சொல்லு'' என்றான் மோகன்.

''அந்தக் கடைக்காரன் ரொம்ப மோசம்பா... சுத்தக் கருமி... உடைஞ்ச கிளாஸிலே டீ கொண்டு போகச் சொல்றான். வாடிக்கைக்காரங்க கீறல் கிளாஸிலே கொண்டு வந்தால்,கிளாஸை உடைச்சிடுவோம்னு மிரட்டறாங்க. அப்படி அவங்க உடைச்சிட்டா 'காசு வசூலிச்சிட்டு வா'ன்னு

விரட்டுறான். ஒரு தடவை பழ வண்டிக்காரனுடைய மூஞ்சி மேலே கொதிக்கிற கூழை ஊத்திட்டான்பா... என்ன, பேசாமே இருக்கிறே?''

''சொல்லு.''

''காலையிலே ஒரு பன் தருவான்.... ராத்திரியும் வீட்டுக்குப் போகையிலே ஒண்ணு தருவான்... அன்னிக்கு முதல் நான் போட்ட வடை, போண்டாவெல்லாம் மீந்து போச்சு. அதைத் தின்னுடாங்கிறான். இவனுக்கு நஷ்டமானால் நானா அகப்பட்டேன்! அப்படியும் உன் முகத்தை நெனைச்சுப் பொறுமையாகத்தான் இருந்தேன்.... ஈ விழுந்திடுச்சுன்னு ஒருத்தன் கூழை வெச்சிட்டுப் போயிட்டான்.... அதை என்னைக் குடிங்கிறான்...மாட்டேன்னுசொன்னால், ''டேய், நீங்களெல்லாம் குடி



யிருக்கிற குடிசைக்கிட்டே சாக்கடைதானே ஓடுது...? அங்கே மொய்க்கிற ஈ மட்டும் குளிச்சு சுத்தமாயிருக்கான்னு கிண்டலாப் பேசுறான்..... என்ன கொழுப்பு..! அதான்... கோபத்திலே அவன் மூஞ்சியைப் பார்த்துக் கிளாஸை எறிஞ்சிட்டேன்... என்ன, ஒண்ணும் சொல்ல மாட்டேங்கறே?''

''நான் சொல்றதுக்கு என்ன இருக்கு?''

''இப்படிச் சொன்னா எப்படி? அவன் செய்தது நியாயமுன்னு படுதா உனக்கு?''

''நான் அநியாயம்னு சொன்னால் மட்டும் என்ன ஆகப்போகிறது? தீராக் கோபம் போராய் முடியுமென்று எழுதி வைத்தவர்கள் முட்டாள்களில்லையே..!''

''மோகன்... அப்படிச் சொல்லாதே... நான் செய்தது தப்புன்னா ரெண்டு அடி கொடு... வாங்கிக்கிறேன்... மனசிலே இருக்கிறதைப் பட்டுனு போட்டு உடை...''

சில நாட்களுக்கு முன் தன்னைமணலில் போட்டுப் புரட்டி எடுத்த கபாலியா

இப்படிப் பணிவாய் நயந்து கெஞ்சுகிறான் என்று மோகனுக்கு ஆச்சரியமாக இருந்தது!

''கபாலி... உங்க குடும்பம் பெரிசு.. எல்லாரும் வயிறாரச் சாப்பிடணுமின்னு, பாடு பட்டாத்தான் முடியும். இப்ப என்னை எடுத்துக்கோ... சுண்டல் மீந்து போனால், அதைத்தான் சாப்பிட்டு வயிற்றை நிரப்புவேன்..... சாதம் இருந்தால், தண்ணீர் ஊற்றி அடுத்த நாளைக்கின்னு வைச்சுக்குவேன். ஏன்? இதுலே தொழிலாளியும் நான்தான்... முதலாளியும் நான்தானே... மீந்து போன போண்டா வடையைத் திங்கறதிலே என்ன கேவலம்? அப்படிப்பட்ட சமயங்களிலே உன் முதலாக அதை நினைச்சுக்கோ... இப்போ கடைக்காரரை அடிச்சுட்டுத் தலைமறைவா இருக்கிறியே... பசிக்கலையா? நிம்மதியா யிருக்கியா?

''நாலு நாளைக்கு முன்னாலேகூட உன் அம்மா என்னைப் பார்த்தபோது, 'தம்பி, இப்பத்தான் கபாலியைப் பத்தி நிம்மதியாயிருக்கேன். உழைச்சு நாலு துட்டுச் சம்பாதிக்கிறான்'னு பெருமையாய்ச் சொன்னாங்க... அதுக்குள்ளே அந்த எண்ணத்துலே மண் அடிச்சுட்டயே! கபாலி, டீக்கடைக்காரர் செய்ததையெல்லாம் சரி என்று நான் சொல்லமாட்டேன். ஆனாலும், வேலை கற்றுக் கொள்கிறவரை பொறுமையாக இரு... அப்படியும் பிடிக்கல்லே.. விலகிடு... கை நீட்டலாமா? நான் உன்னை அங்கே சேர்த்து விடுகிற போது என்ன சொன்னாய் எங்கிட்டே...? எவ்வளவு வாக்குறுதி தந்தாய்! சரி, போகட்டும், இப்போ சுண்டல் சாப்பிடறியா... விற்காத சுண்டலை வீட்டுக்குத்தான் கொண்டுபோறேன்..... மணி ஒன்பதரையாச்சே... இனிமேல் யார் வாங்குவா? நானும் சாப்பிடறேன்... இந்தா'' ஒரு கை சுண்டலை அவனுக்குக் கொடுத்துத் தானும் தின்றான் மோகன்.

''நீ டீக்கடைக்குப் போனியா? அந்த டீக்கடைக்காரன் எப்படி இருக்கான்?'' என்று தயங்கித் தயங்கி கேட்டான் கபாலி.

''தகவல் தெரிஞ்சதும், ஓடிப் போய்ப் பார்த்தேன்... நல்லவேளை... கண் தப்பிச்சுது... நெற்றியிலே பெரிய பிளாஸ்திரி... உனக்காக நான் அவரிடத்திலே மன்னிப்புக் கேட்டேன்!''

''என்ன, நீ மன்னிப்புக் கேட்டியா! மோகன், நீயாயிருந்தா என்ன செய்திருப்பே? ஈ விழுந்த டீயைக் குடிப்பியா?''

மோகன் சிரித்தான்.

''மாட்டேன்... வேறே டீயும் வேண்டாமென்று சும்மா இருந்துடுவேன். டீ குடிச்சால் வயித்தைப் புரட்டுதுன்னு சொல்லி டீ குடிக்கறதையே விட்டிடுவேன்.''

கபாலி கண்ணீர் விட்டான்.

''மோகன், நீ அபூர்வப் பிறவிடா.. உன் மனசு யாருக்கும் வராது.... நாளையிலேருந்து சுண்டல் கொஞ்சம் கூடக் கொண்டா... நானும் விற்கறேன்...''

''முதல்லே வியாபாரத்துக்குப் பொறுமை வேணும்... உனக்குச் சுத்தமா அது கிடையாது... சில பேர், 'பொட்டலம் 25 காசா! 20 காசுக்குத் தரப்படாதா'ன்னு கேட்பாங்க. உடனே, 'பட்டாணி என்ன விலை, தேங்காய் என்ன விலை, எரிகூலி என்னாச்சு?' என்றெல்லாம் எகிறக்கூடாது... கெட்டிக்காரத்தனமாக் கொஞ்சம் குறைச்சு, பொட்டலத்தைச் சிறுசாக்கி விலையாக்கிடணும். அஞ்சு காசு மிச்சம்னு அவங்களுக்கு ஒரு அல்ப திருப்தி! மறுநாளும் நம்மளைக் கூப்பிடுவாங்க... கேட்ட விலையைக் கொடுக்கறவங்களுக்கு ஏமாத்தாமே நியாயமாத் தரணும்... சாம்பிள் சுண்டல் கேப்பாங்க... நிறைய மாங்காய் போட்டிருக்கியா...? நல்லா வெந்துருக்கா...? உப்பு, காரமெல்லாம் சரியாயிருக்குமா?' என்றெல்லாம் கேப்பாங்க.''

''கால் ரூபாய்க்கு இத்தனை 'கேள்வியா?''

''என்ன செய்வது? தலையிலே கூடையைத் தூக்கிட்டமே! சில பேர் சாம்பிளைச் சாப்பிட்டுட்டு 'உப்பு சப்பேயில்லே... பட்டாணி பல்லை உடைக்குது'ன்னு முகத்துக்கு நேரேயே குற்றமும் சொல்லுவாங்க... நீ கூடையாலே அவங்க முகத்திலே இடிச்சால் என்ன ஆகும்? ரகளைதான்! நம்ம பேர் ரிப்பேராயிடும்...''

''மாட்டேன் மோகன்... நிச்சயமா அப்படியெல்லாம் செய்ய மாட்டேன்!''

''அப்போ டீக்கடையிலேயே பொறுமையா இருந்திருக்கலாமே...''

''சும்மா அதையே சொல்லிக் காட்டாதே... நடந்ததை மன்னிச்சுடு... மறந்துடு. உன்கிட்டே நடந்ததைச் சொல்லி யோசனை கேட்காதது தப்புன்னு இப்போ படுது... என்ன பண்றது? முட்டிக்கிட்ட பிறகு குனிகிற புத்தி...''

''சரி, மணியாச்சு... நாளைக்குப் பார்க்கலாம்.''மோகன் புறப்பட்டான்.

''அப்போ நாளைக்கு...?''

''பார்க்கலாம்.''

''அப்படிச் சொல்லாதே... நான் விற்கிறதுக்கும் சேர்த்துச் சுண்டல் கட்டாயம் கொண்டு வரணும்.''

* * *

அன்று மகாளய அமாவாசை. எங்கு பார்த்தாலும் ஜனக்கூட்டம். கடற்கரை 'ஜே ஜே' என்றிருந்தது.

ஒரு தாய் தன் ஐந்து வயது மகனைப் பற்றிக் கணவனிடம் கூறுகிறாள்: ''இவனை வீட்டிலேயே விட்டு விட்டு வந்திருக்கணும்.... என்ன பாடு படுத்துகிறான்!''

ஒரு கணவர் தம் மனைவியிடம் கூறுகிறார்: ''என்ன நீ... சின்னக் குழந்தையாட்டம் இப்படிப் பயப்படறே....! அலையிலே நிக்கறதுக்கா இவ்வளவு தூரம் வந்தோம்..? முழங்கால் ஆழம் கூட இல்லே!''

இப்படி இன்னும் பல குரல்கள்:

''அப்பா, அலை ரொம்ப ஜோர், இல்லே?''

''ரொம்பக் குளிருது மாமி''.

''உடம்பெல்லாம் உப்பு நசநசன்னு இருக்கே... வீட்டிலே போய்க் குளிக்கலாமில்லியா?''

''மகாளயமின்னா என்ன அர்த்தம்?''

''கவிஞர்களுக்கெல்லாம் இங்கே வந்தால் கற்பனை வருமென்பார்களே, உண்மையா?''

''கடல் குளியல் உடம்புக்கு ரொம்ப நல்லதாக்கும்!''

''சாஸ்திரிகளே.... சீக்கிரம் முடியுங்கோ... எனக்கு எட்டுமணிக்கு ஒரு மகாநாட்டுக்குப் போகணும்!''

தினம் கபாலி எருமையாக அமிழ்ந்து கிடக்கும் இந்த இடத்துக்கு இன்று இவ்வளவு மவுசா.....!

எத்தனை குரல்கள்! எத்தனை ரகங்கள்! ரசனைகளில்தான் எத்தனை விதங்கள்! அவசரக் கோலங்கள்! அனுபவமின்மைகள்! ஓரமாக நின்று கபாலி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். இரண்டு கண்கள் போதாதென்று தோன்றியது! அவனுக்கே தனது மாற்றத்தை எண்ணிப் பெருமையாக இருந்தது! முன்னேயெல்லாம் யார் ஏமாந்தவர் என்றுதான் அவன் கண்கள் அலையும்! 'ரசனையாவது...? அப்படியென்றால் கிலோ என்ன விலே?' என்று கேட்பான். எல்லாம் மோகனின் நட்பால் ஏற்பட்ட லாபங்கள்!

இந்த உலகமே அவனைக் கெட்டவனென்றாலும் அக்கறையில்லை.... மோகன் மட்டும் அவனைத் தப்பாக நினைக்கக் கூடாது... அவன் உறவு கெடக் கூடாது.... அவனை ஒரு நாள் பார்க்காவிட்டாலும் எதையோ இழந்து விட்டது போல் மனம் பறக்கிறதே! ஏன் இப்படி? மோகனின் அன்பு சுயநலமற்றது; களங்கமில்லாதது...

திடீரென்று குரல்!

''ஐயோ... யாராவது காப்பாத்துங்களேன்! என் குழந்தை.... என் கண்மணி.....''

கூக்குரல் வந்த பக்கம் பார்த்தான். மறு விநாடி கடலில் குதித்தான். கைகளை எட்டிப் போட்டு நீந்தினான். அதோ அந்தப் பச்சைப் பாவாடை.... அடாடா... பெரிய அலை வந்து அந்தப் பெண்ணை அப்புறமும் இவனை இப்புறமுமாகத் தள்ளித் தூரத்தை அதிகப்படுத்தி விட்டதே. ஆனாலும் துவண்டு போகாமல் கபாலி மீண்டும் முயன்றான்.

அவன் எண்ணமெல்லாம் சாயங்காலம் மோகனைச் சந்திக்கும்போது அவனிடம் இதைச் சொல்லி அவனது பாராட்டைப் பெற வேண்டும் என்பதே... அசுர வேகத்தோடு கைகளை விசிப்போட்டான்... அவன் பிடிகளில் ஏதோ ஒன்று அகப்பட்டது. மெல்லிசாக இருந்த அதைப் பிடித்திழுத்தான்...கையோடுவந்துவிட்டது! அந்த அவதியிலும் அதை டிராயர் பைக்குள் பத்திரப் படுத்திக் கொண்டான். தொடர்ந்து முயன்றான்... அந்தப் பெண் தண்ணீரைக் குடித்து ஒருவேளை செத்துப் போனால்... முயற்சி பயனற்றுப் போகுமே! இந்த எண்ணம் அவன் காலுக்கு வேகத்தைத் தந்தது... கையிலே பாவாடை சிக்கியது.... ஊஹூம், இது உறுதியில்லை... அவிழ்ந்து விடலாம் அல்லது கிழிந்து விடலாம். இன்னும் ஒரு மூச்சு... தம் பிடித்து... இந்த முறை சிக்கியது பின்னல்... கெட்டியாகப் பற்றி இழுத்து, அச்சிறுமியை முதுகிலே சுமந்தபடி கரையை நோக்கிக் கைகளை வீசிப் போட்டான்!

கரைக்கு வந்ததும் சிறுமிக்கு முதல் உதவி அளிக்கப்பட்டது. சிறிதுநேரத்தில் அவள் கண்களைத் திறந்து பார்த்தாள். ''அப்பா!'' என்று மெல்ல அழைத்தாள். அவளுடைய அப்பாவுக்கு ஒரே ஆனந்தம்! அந்தப் பெண்ணை டாக்டர் வீட்டுக்குக் காரில்

கொண்டு போக ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள்.

அந்த நேரத்திலும் பெண்ணின் தந்தை, தலையிலிருந்து ஈரம் சொட்டச் சொட்டக் கை சளைத்து நின்ற கபாலியின் அருகில் வந்தார்.

''தம்பீ, உனக்கு என்ன கொடுத்தாலும் ஈடாகாது. இது என் விசிட்டிங் கார்டு. எப்போது, என்ன உதவி வேண்டுமென்றாலும் தயங்காமல் வா... என் உயிருக்கு உயிரான மகளையே மீட்டுக் கொடுத்திருக்கிறாய்... எத்தனை தடவை நன்றி சொன்னாலும் அது அலங்காரமாகத்தான் இருக்கும்.... தயவு செய்து இதை வாங்கிக்கோ.. தப்பாக நினைத்து விடாதே! நீ வாங்கிக் கொண்டால்தான் எனக்கு ஒரு திருப்தி'' அவர் இரண்டு நூறு ரூபாய் நோட்டுக்களையும், விசிட்டிங் கார்டையும் நீட்டினார்.

''எனக்கு நீஞ்சத் தெரியும்... உங்க மகளை அலை இழுத்துட்டுப் போகுது... நீங்க தவியாய்த் தவிக்கிறீங்க... வேடிக்கை பார்த்துக்கிட்டிருந்தா நான் மனுசனா? ரூபாய் வேண்டாங்க'' என்றான் கபாலி. அவர் மிகவும் வற்புறுத்தி அவன் கையில் திணித்துவிட்டுப் போனார்.

* * *

அன்று மாலையில் மோகனைக் கடற்கரையில் கண்டதும், ''மோகன், உனக்கு ஒரு சந்தோஷமான விஷயம் சொல்லப் போகிறேன்'' என்றான் கபாலி.

''என்ன விஷயம் சொல்லு, சொல்லு!'' என்று ஆவலாகக் கேட்டான் மோகன். காலையில் கடலிலே பாய்ந்து சென்று சிறுமியைக் காப்பாற்றியதை விவரமாகக் கூறினான் கபாலி.



கபாலியின் இரு கைகளையும் பிடித்துக் கொண்டு மோகன் மிகவும் பாராட்டினான். பிறகு, ''நானும் ஒரு நல்ல செய்தி கொண்டு வந்திருக்கிறேன்'' என்றான் மோகன்.

''அது என்ன செய்தி? சொல்லு, சொல்லு'' எனக் கபாலி தூண்டினான்.

(தொடரும்)

கருணை விழிகளைக் கண்டுபிடிக்க...

'கருணை விழிகள் யாருடையவை?' என்று எங்களைக் கேட்டீர்கள் அல்லவா? யாருடையவை தெரியுமா சார்?... அவை....

—டி. அங்குராஜன் (4718) உடுமலைப் பேட்டை.

[வேண்டாம், வேண்டாம். இப்போது கூற வேண்டாம். தொடர்கதை முடிவதற்கு முன்பு வெளிவரும் கோகுலத்தில் கூறலாம். —ஆசிரியர்.]

'வில் விஜயன்' 16 பக்க வண்ணப்படக்கதை மிக மிக அருமை. 'கருணை விழிகள்' படிக்கப் படிக்க விறுவிறுப்பாக உள்ளது. சார், தயவு செய்து கதாசிரியையிடம் கூறி மோகனைத் திருட்டுப் பழியிலிருந்து காப்பாற்றச் சொல்லுங்கள், சார்.

—எஸ். கோகுல் பழனி.

'கேள்வி நேரம்' பகுதியில் வேதம்+சலம் என்று இருக்கிறது. வேதம் + அசலம் என்று தானே இருக்கவேண்டும்?

—ஆர். சுதா, புதுக்கோட்டை

[ஆம். அசலம் என்பதே சரி-ஆசிரியர்]

ஓவியர் 'விஜு' அவர்களின் உயிர் ஓவியங்களும் 'ஆனந்தி' அவர்களின் எழுத்தோவியமும், கவிஞர் அவர்களின் 'வீரவேல், வெற்றிவேல்' சித்திரக் கதையும் எங்களைப் பெரிதும் கவர்ந்து விட்டன. அவர்களுக்கு நன்றி.

—த. அருள் செல்வபாலன், தலைவர், வெண்ணிலா கோகுலம் சிறுவர் சங்கம், செங்கற்பட்டு.

அர்ச்சுனனைப் பற்றி என் பாட்டி எனக்கு நிறையச் சொல்லியிருக்கிறாள். நானும் பல கதைகளைப் படித்திருக்கிறேன். இதுவரை நான் கேட்டோ படித்தோ அறியாத அற்புதமான விஷயங்களை 'வில் விஜய'னில் கண்டேன்.

—எம். சித்ரா, கோவில்பட்டி.

'கருணை விழிகள்' கதை முதல் பகுதியிலேயே கற்கண்டாக இனித்தது.

—சிவகுமார், தஞ்சை.

பள்ளி நாட்கள் ஒவ்வொருவர் வாழ்விலும் நினைத்து மகிழத் தக்க ஒன்று. 'டாம் பிரௌனின் பள்ளி நாட்கள்' கதையும் அப்படிப் படித்து மகிழத்தக்க ஒன்றுதான்.

—ஜி.சந்திரமௌளீஸ்வரன் (49) நெல்லை-1

'கருணை விழிகள்' படிக்கும் போதே மோகனைப் போல் நாமும் பிறருக்கு உதவ வேண்டும் என்று தோன்றுகிறது. படிக்கப் படிக்கத் தேனைத் தித்திக்கிறது.

—எஸ். ஜெயராமன் (3436) பம்பாய்-58.

திரு. தணிகை உலகநாதன் அவர்களது 'மாமாவின் பரிசு' கட்டுரையில் 'கவர் = இல் + கவரில்' என்று தவறாக அச்சாகியுள்ளது. +, = இரண்டும் இடம் மாறிவிட்டனவே!

—வெ. கணபதி சுப்பிரமணியன் (558), பூம்புகார்.

கவாஸ்கரின் 'இமாலய சாதனை' குறித்து வெளியிட்டமைக்கு நன்றி.

—தனம். கந்தசாமி, ஈரோடு-2

'கோகுலம்' ஒவ்வொரு மாதமும் புதுப் பொலிவுடன் பூத்துக் குலுங்குகிறது. சிறுவர் சிறுமியர் மட்டுமல்ல, பெரியவர்களும் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய அறிவுப் புதையல்!

—எஸ். ஆர். சின்னமணி, கடையாநல்லூருட்டி

பூதலூர் முத்து எழுதிய 'கேசவன் கதை எழுதுகிறான்' காப்பியடித்துக் கதை, துணுக்கு எழுதுகிறவர்களுக்குச் சாட்டையடியாக இருக்கும்

—பி. பூங்கோதை, காங்கயம்.

'கங்காதரன்' என்ற நாடோடிக் கதை எங்களைச் சிரிப்பு வெள்ளத்தில் ஆழ்த்தி விட்டது.

—என். அனிதா, பாவட்டக்குடி.

'குப்புசாமி அப்புசாமி'யைக் காணாமல் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த எனக்கு 'பொன்னியும் பொன்னனும்' ஆறுதல் அளித்தனர். குப்பையில் கிடக்கும் மாணிக்கங்களைக் கண்டுபிடித்து உரிய இடத்தில் வைக்கும் கோகுலத்தை எப்படிப் பாராட்டுவது?

—இரா. ஓம்பிரகாஷ், குன்னூர்—2.

மின்மினிக் கதைகள் 'மினி' குட்டிக் கதைகளாக இருந்தாலும், மனத்தில் நிற்கும் கதைகள் என்றே சொல்ல வேண்டும்.

—இரணியல் 'கலை', சென்னை—57.

காணவில்லை! பெயர்: சின்னான், வயது சுமார்: 14, தொழில்: மாடு மேய்த்தல். சிக்கலான வழக்குகளில் தீர்ப்புக் கொடுத்து எங்களோடு ஒன்றிவிட்ட சின்னானை, பிப்ரவரி மாதம் காணவில்லை! விவரம் தெரிந்தவர்கள் உடனே தெரிவியுங்கள்.

'ராஜேஷ், ரமேஷ், Sunabeda (Orissa)

'டாம் பிரௌனின் பள்ளி நாட்கள்' இன்றைய மாணவ சமுதாயத்திற்கு ஒருவரப் பிரசாதம் மட்டுமல்ல; நல்ல வாழ்க்கை அமைய அழைக்கும் ஒரு கலங்கரை விளக்கமும் ஆகும். ஒவ்வொரு மாணவனும், ஆசிரியரும் படித்துப் பயனடைய வேண்டிய அற்புதக் காவியம்!

—திருமதி தேவநாதன். மதுரை—3.

சார்... தபால்..!

மின்மினிக் கதைகள்

கோமாளியும் குடியானவனும்



மேடையிலே ஒரு கோமாளி வந்தான். பன்றி கத்துவது போல் பலமுறை கத்திக் காட்டினான். 'ஆஹா! அசல் பன்றி மாதிரி கத்துகிறானே!' என்று கூறிச் சபையோர் கைதட்டிப் பாராட்டினார்கள்.

அப்போது, ஒரு குடியானவன், திடீரென்று மேடையில் ஏறி, ''ஒரு போதும் பன்றி இப்படிக் கத்தாது. நாளை இதே மண்டபத்தில் இந்தக் கோமாளி, பன்றியைப் போலக் கத்திக் காட்டட்டும். நானும் பன்றி எப்படிக் கத்தும் என்பதைக் காட்டுகிறேன்'' என்றான்.

குடியானவன் பேச்சை சபையோர் நம்பவில்லை. இருந்தாலும், 'சரி' என்றனர்.

மறுநாள் மண்டபம் கொள்ளாத கூட்டம். கோமாளி முதலில் மேடையில் தோன்றி, பன்றி போலக் கத்தினான். சபையோர் கைதட்டிப் பாராட்டினார்கள்.

பிறகு, குடியானவன் மேடைக்கு வந்தான். அவன் கீழே குனிந்தபடி நின்று கொண்டான். மறு விநாடி, 'ஈக் பீக், ஈக் பீக்' என்ற குரல் உரக்கக் கேட்டது.

''ஐயோ, பன்றி இப்படியா கத்தும்? ஏமாற்றுகிறான்.'' என்றார்கள் பலர்.

''உள்ளே போ, உள்ளே போ'' என்றனர் சிலர்.

குடியானவன் எதுவும் கூறவில்லை. தன் மேலே போர்த்தியிருந்த போர்வையை எடுத்துக் கீழே எறிந்தான். அவன் கக்கத்திலே ஒரு சிறிய பன்றி இருந்தது. அதைத் தூக்கிக் காட்டிக் கொண்டே,

''இவ்வளவு நேரமாகக் கத்தியது நானல்ல: இந்தப் பன்றிதான்! இதன் காதைப் பிடித்துத் திருகித் திருகிக் கத்தும்படி செய்தேன். உண்மைப் பன்றியைக் காட்டிலும் உங்கள் கோமாளி எப்படி நன்றாகக் கத்துவார்?'' என்று கேட்டான்.

சபையோர் தலைகுனிந்தனர்.

ஓநாயின் ஓட்டம்



அன்று ஓநாய்க்குக் காட்டிலே எந்த இரையும் கிடைக்கவில்லை. காட்டைவிட்டு வெளியில் வந்தது. முதலாவதாகத் தெரிந்த ஒரு வீட்டின் அருகே சென்றது. அப்போது, அந்த வீட்டுக்குள்ளிருந்து ஒரு குழந்தை அழும் குரல் கேட்டது.

குழந்தையை அதன் அம்மா என்னென்னவோ கூறிச் சமாதானம் செய்யப் பார்த்தாள். முடியவில்லை. ''நீ இப்போது அழுகையை நிறுத்தாமல்



போனால், உன்னைத் தூக்கி வெளியிலே எறிந்து விடுவேன். ஓநாய் தின்றுவிட்டுப் போகட்டும்'' என்று கூறி மிரட்டினாள்.

அந்த அம்மா சொன்னதை உண்மையென்று நம்பி, வீட்டின் ஓர் ஓரத்தில் ஓநாய் படுத்திருந்தது. 'எப்போது குழந்தை வெளியிலே விழும்'? என்று ஆவலாக எதிர்பார்த்தது.

குழந்தையின் அழுகை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து சிறிது நேரத்தில் முற்றிலும் நின்றுவிட்டது.

உடனே அதன் அம்மா ''இப்போதுதான் நீ சமர்த்துப் பிள்ளை. இந்த அருமைப் பிள்ளையை நான் ஓநாய் தின்ன விடுவேனா? ஓநாய் இந்தப் பக்கம் வரட்டும். ஓரே அடியாய் அடித்து மண்டையை உடைக்கிறேன்'' என்றாள்.

இதைக் கேட்ட ஓநாய், 'தப்பித்தோம், பிழைத்தோம்' என்று தலைதெறிக்கக் காட்டை நோக்கி ஓடியது!

நரி வாலில் தீ!



ஒருவருக்கு ஒரு திராட்சைத் தோட்டமும், அதற்குப் பக்கத்தில் நிறைய வயல்களும் இருந்தன. தோட்டத்தில் திராட்சைப் பழங்கள் நன்றாகப் பழுத்துக் குலுங்கின. வயல்களில் கதிர்கள் முற்றி அறுவடைக்குத் தயாராக இருந்தன.

ஒருநாள், அந்த மனிதர் திராட்சைத் தோட்டத்திற்கு வந்தார். அப்போது அங்கே திராட்சைப் பழங்களைத் தின்று கொண்டிருந்த நரிகள், அவரைக் கண்டதும், நாலா பக்கமும் ஓடின.

அவற்றிலே ஒரு நரியை அவர் துரத்திப் பிடித்து விட்டார். பிடித்த நரியின் வாலிலே அவர் துணியைச் சுற்றி, எண்ணெயை விட்டார். அதில் தீயைக் கொளுத்தினார். பிறகு தடியால் நரியின் முதுகிலே ஓங்கி ஓங்கி அடித்து அதை விரட்டினார்.

நரி ஊளையிட்டுக் கொண்டே ஓடியது. அவருடைய வயல்களுக்குள் புகுந்து புகுந்து ஓடியது. அப்படி அது ஓடும்போது, முற்றியிருந்த கதிர்களில் தீ பற்றிக் கொண்டது. சிறிது நேரத்தில் அவருடைய வயல்கள் அனைத்திலும் நெருப்பு பரவி பயிர்கள் எல்லாம் சாம்பலாயின!

''ஐயோ! முன் யோசனையில்லாததால் மோசம் போனேனே!'' என்று அவர் துடிதுடித்தார். வயல்கள் பற்றி எரியும் காட்சியைக் கண்டு, அவரது வயிறு பற்றி எரிந்தது!

வல்லவனுக்கு வல்லவன்!



தலைநிமிர்ந்து கம்பீரமாகச் சென்றுகொண்டிருந்த சிங்கராஜாவின் எதிரே, 'ஙொய்... ஙொய்' என்று பாடிக்கொண்டே ஒரு தேனீ வந்தது.

''ஏ, அற்பப் பிராணியே! உனக்கு என்ன துணிச்சல்! என் எதிரில் பாடிக்கொண்டு வருகிறாயே!'' என்று கோபமாகக் கேட்டது சிங்கம்.

உடனே தேனீக்கு ரோஷம் வந்துவிட்டது. ''நான் அற்பப் பிராணிதான். ஆயினும், உம்மால் என்னை எதிர்த்துச் சண்டை போட முடியுமா?'' என்று கேட்டது.

''ஏன் முடியாது?'' என்று அலட்சியமாகக் கேட்டது சிங்கம்.

மறுவிநாடி, தேனீ சிங்கத்தின் மூக்கிலும் காதுகளிலும் மாறி மாறிச் சென்று, அங்கேயுள்ள மென்மையான பகுதிகளில் பலமாகக் கொட்டியது.

சிங்கத்தால் வலியைத் தாங்க முடியவில்லை. பெரிதாகக் கர்ஜனை செய்தது. தேனீ கொட்டுவதை நிறுத்தவில்லை; தொடர்ந்து கொட்டிக் கொண்டேயிருந்தது. சிங்கத்தால் வலியைப் பொறுக்க முடியவில்லை. ''தேனீயே! என்னை விட்டுவிடு. நான் தோல்வியை ஒப்புக் கொள்கிறேன்'' என்று கெஞ்சியது.

தேனீ சிங்கத்தை வென்ற செருக்கோடு அங்குமிங்குமாக ஆடிப் பாடிக் கொண்டிருந்தது. அப்போது ஒரு மரத்திலிருந்த சிலந்தி வலையில், அது விழுந்து நன்றாகச் சிக்கிக்கொண்டது! எவ்வளவோ முயன்றும் தப்ப முடியவில்லை. சிறிது நேரத்தில் அது சிலந்தி வாய்க்குள்ளே சென்று கொண்டிருந்தது! 'வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு' என்பதை அப்போதுதான் தேனீ உணர்ந்தது!



அடிமையான குதிரை

ஒருநாள் குதிரைக்கும் கலைமானுக்கும் சண்டை வந்து விட்டது. சண்டை முற்றியது. ''உன்னை நான் சும்மா விடப் போவதில்லை'' என்று கூறிவிட்டு குதிரை ஆத்திரத்துடன் காட்டைக் கடந்து ஊர்ப் பக்கமாக வந்தது.

அப்போது அவ்வழியாக வந்த ஒரு மனிதரிடம் சென்று, ''ஐயா, எனக்கு ஓர் உதவி வேண்டும். என் எதிரியான கலைமானைக் கொல்ல வேண்டும்'' என்று வேண்டியது.



மனிதன் உடனே, ''உன் விருப்பப்படியே செய்கிறேன். கலைமான் இருக்கும் இடத்திற்கு என்னை அழைத்துச் செல்... ஆனால்... என்னால் காட்டுக்குள் நடந்து வர முடியாதே!'' என்றான்.

''என் முதுகில் ஏறிக் கொள்ளுங்கள்''

''சும்மா உட்கார முடியுமா? உன் முதுகிலே ஓர் ஆசனம் போட்டு, அதன் மேலே உட்கார வேண்டும். உனக்கு ஒரு கடிவாளம் போட்டால், அதைப் பிடித்துக் கொண்டு வர எனக்கு வசதியாக இருக்கும்''

''அப்படியே செய்யுங்கள். எப்படியும் கலைமானை ஒழித்து விட வேண்டும்''

மனிதன் சேணமும் கடிவாளமும் தயார் செய்தான். குதிரை முதுகிலே ஏறி உட்கார்ந்து கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டு, கலைமான் இருக்கும் இடத்திற்குச் சென்றான். அதை வேட்டையாடிக் கொன்றான்.

''உங்கள் உதவிக்கு நன்றி. இறங்கிக் கொள்கிறீர்களா?'' என்று குதிரை கேட்டது.

''உன் முதுகில் சவாரி செய்வது மிகவும் சுகமாகவும் வசதியாகவும் இருக்கிறது. விரைவில் செல்லவும் முடிகிறது. ஆகையால், நான் இறங்கப் போவதில்லை''. என்றான் மனிதன்.




காட்டில் சுதந்திரமாகத் திரிந்த குதிரை, ஆத்திரத்தில் அறிவிழந்ததால், அன்று முதல், மனிதனுக்கு அடிமையானது. அது மட்டுமா? அதன் இனமே அடிமையாகிவிட்டது!

கருத்து: ஈசாப்

விண்வெளி ஆராய்ச்சியில் சின்னஞ் சிறுவர்கள்

பி.எஸ்.எம்

அட்டைப்பட விளக்கம்



நர்ஸரி வகுப்பில் படிக்கும் சிறுவனிலிருந்து கல்லூரியில் பயிலும் மாணவ மாணவிகள்வரை அமெரிக்காவில் விண்வெளிக் கப்பலின் கவர்ச்சியில் மூழ்கியுள்ளனர்.

விண்வெளிப் பயணத்தைப் பற்றி கலிபோர்னியோ ஆரம்பப் பாடசாலை மாணவியர் வரைந்த கற்பனைச் சித்திரங்கள் இளம் கற்பனை உள்ளங்களின் திறமையைப் பறைசாற்றின.

அலாபாமாவில் விண்வெளிப் பயிற்சி முகாமில் பதினாறு வயதுள்ள பன்னிரண்டு மாணவர்கள் பங்கேற்றனர்.

அமெரிக்கா முழுவதும் உயர்நிலைப் பள்ளி, கல்லூரி மாணவர்கள் விண்வெளிக் கப்பலின் பயணத்துக்கான பரிசோதனைகளில் ஈடுபட்டுள்ளனர். இதற்காகவே விண்வெளி மாணவர் கவிகரிப்புத் திட்டத்தில் இளைஞர்கள் கலந்து கொண்டிருப்பது பாராட்டத்தக்கது.

தேசிய விண்வெளி நிறுவனம், விண்வெளி நிர்வாகம் (நாஸா), தேசிய விஞ்ஞான ஆசிரியர் கழகம் ஆகியவற்றின் ஆதரவில் தொடங்கப்பட்டுள்ள இந்த மாணவர் விண்வெளிப் பயணத் திட்டம் அமோக ஆதரவைப் பெற்றிருக்கிறது. 1500 உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் அமெரிக்காவில் பல யோசனைகளைச் சமர்ப்பித்துள்ளனர். 2800 யோசனைத் திட்டங்கள் பரிசீலனைக்கு இரண்டாம் வருஷத்தில் வந்தன. கிட்டத்தட்ட மூவாயிரம் மாணவர்கள் இந்தப் போட்டியில் பங்கேற்றனர்.

விஞ்ஞானத் துறையில் ஈடுபடாத மாணவர்களும் இந்த விண்வெளிக் கற்பனைச் சித்திரங்களில் பரிசு பெற்றிருப்பதைக் கண்டு டாக்டர் ஹாப்பன் வியப்புத் தெரிவித்திருக்கிறார். மாணவர்களின் கற்பனை வளங்களுக்கு உண்மை வடிவம் தர முடியுமா என்று ஆராய்ந்து வருகின்றனர்.

அக்கற்பனைக் காட்சிகளுக்கு விண்வெளி வீரர்கள் உண்மை வடிவங்கள் தந்து, தங்களது மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது விண்வெளிப் பயணத்தில் கைக்கொள்ளப் போகிறார்கள்.

கற்பனைச் சித்திரங்களில் வெற்றி பெற்ற மாணவர்கள் விண்வெளி நாஸா நிறுவனத்துடன் இணைந்து பணி புரியவிருக்கிறார்கள். விஞ்ஞானிகள், இன்ஜினியர்கள், மாணவர்கள் ஆகியோர் இணைந்து மாணவத் திட்டங்களைப் பயனுள்ள விண்வெளிப் பயணத் திட்டங்

களாகச் செயலாக்கப் போகிறார்கள். டெக்ஸாஸிலுள்ள கென்னடி விண்வெளி மையத்தில் இந்த மாணவ மணிகளின் கற்பனைகள் செயல் வடிவம் பெறப் போகின்றன. பிளாரிடாவிலுள்ள கென்னடி விண்வெளி மையத்தில் விண்வெளிக் கப்பல் புறப்படும் போது, மாணவ மணிகளின் பயணத் திட்டங்களுக்கும் செயல் வடிவம் தரப்படும்.

விண்வெளிப் பயணத்தில் உடல் மாறுபாடுகள், உணவு முறைகள் பற்றிய ஆய்வுகளும் நடத்தப்படும்.

1982 மார்ச்சில் கொலம்பியா மூன்றுவது விண்வெளிப் பயணத்தில் பூஜ்யம் இழுப்புச் சக்தி நிலையில் ஒரு பூச்சியின் நிலை என்னவென்று பரிட்சித்தனர். மினெஸொட்டாவிலுள்ள பதினேழு வயதுப் பள்ளி மாணவி டாட் நெல்ஸன் மூன்று வகைப் பூச்சிகள் விண்வெளிப் பயணத்தில் அடையும் மாறுதல்களைப் பற்றிய பரிசோதனைகளைச் செய்திருந்தாள். இந்தப் பரிசோதனைக்கு உரிய வசதிகளை ஏவியோனிக்ஸ் நிறுவனம் செய்து கொடுத்ததுடன் நிபுணர் உதவியும் தந்தது.

இதுவரை ஆறு மாணவ மாணவிகளின் பரிசோதனைகள் விண்வெளியில் பறந்துள்ளன. 1983 ஆகஸ்டில் சென்ற சாலஞ்சர் விண்வெளிக் கப்பலில் இரு வகைப் பரிசோதனைத் திட்டங்கள் அனுப்பப்பட்டன.

விண்வெளிப் போட்டி மாணவர் திட்டத்தில் ஆறுவகைப் பரிசோதனைகள் செயல்முறைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இந்த அமெரிக்க மாணவர் திட்டத்தில் கனடா மாணவர்களும் இனி கலந்து கொள்ளவிருக்கிறார்கள். இன்னும் விரிவாக்க நாஸா நிறுவனம் எண்ணியுள்ளது.

உடா மாணவர்கள் விண்வெளியில் எடையற்ற பிரதேசத்தில் 'ALGAE' வளர்ச்சி பற்றியும் தாவரங்களின் வேர் வளர்ச்சி பற்றியும் ஆராய்ந்தனர்.

இளம் மாணவர்களின் பரிசோதனை வாயுக்கள் சாலஞ்சர் பயணத்தில் இடம் பெற்றன. மேற்கு ஜெர்மனி மாணவர்களின் ஆராய்ச்சிப் பரிசோதனைகளும், சாலஞ்சர் பயணத்தில் இருந்தன. ஜப்பானும் மாணவர் ஆராய்ச்சியில் பங்கேற்றது. இதற்கு ஜப்பானியப் பத்திரிகை 'அஸாகி ஷிம்பூன்' உதவியது. ஆஸ்திரேலிய மாணவர்களும் இந்தத் துறையில் ஈடுபட்டுள்ளார்கள்.

அலாபாமாவிலுள்ள ஹண்ட்ஸ்வில்லில் அமெரிக்க விண்வெளி முகாம் உள்ளது. 1982 கோடை விடுமுறையின் போது ஆயிரக்கணக்கான மாணவ மாணவியருக்கு அமெரிக்க விண்வெளித் திட்டம் பற்றிய விவரங்கள் விளக்கப்பட்டன. விண்வெளி ராக்கெட், உணவு, வாழ்க்கை முறை, விண்வெளியில் கழிவைச் சமாளிக்கும் முறை முதலியவற்றை மார்ஷல் விண்வெளி முகாமில் கற்றுக் கொள்ள முடியும்.

எடையற்ற நிலையில் விண்வெளியில் விண்வெளி வீரர் ஆராய்ச்சி நடத்துவதைப் போலவே மாணவர்களுக்கும் அந்தப் பயிற்சிகள் உண்டு. கம்ப்யூட்டர், நாஸா கருவிகள் கொண்டு மாணவர்கள் விண்வெளிப் பயணத்தின் இயல்புகளைக் கற்றுக்கொள்ள இயலும்.

அலாபாமா விண்வெளி மையத்தைச் சேர்ந்த டைரக்டர் எட்வர்ட் ஓ.பக்பீ சொல்கிறார்: ''ராக்கெட் மேலெழும்பும் தருணம் அடையும் போது, இங்குள்ள ஆராய்ச்சி மாணவர்கள் விண்வெளி நுணுக்கங்களையும், ராக்கெட் பற்றிய விளக்கங்களையும் நன்கு புரிந்து கொள்கிறார்கள். நாஸா விண்வெளி வீரர்களைப் போலவே இந்த மாணவர்களும் நேரிடையாக விண்வெளிப் பயிற்சிகளினால் பயனடைந்திருப்பார்கள்!''

விண்வெளிக் கப்பலில் இளம் சிறுவர்களுக்கும் அமோக ஆர்வம் பிறந்திருக்கிறது. விண்வெளிக் கப்பலுக்கான இயந்திரங்களைத் தயாரிக்கும் நிறுவனமான ஏரோஜெட் லிக்யூட் ராக்கெட் கம்பெனி, ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்காக ஒரு சித்திரப் போட்டி நடத்தியது.

அமெரிக்காவில் 'விண்வெளியில் சிறுவர்' என்று ஒரு வாரம் கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் பல இளம் சிறுவர் சிறுமியரின் சித்திரங்கள் இடம் பெற்றன. இந்த விசேஷ வாரம் கொலம்பியாவின் ஐந்தாவது பயணத் திட்டத்தின்போது, விண்வெளிப் பயணத்தின் சிறப்பினை எடுத்துரைத்தது.

இளம் சிறுவர் முதல் கல்லூரி மாணவர்கள் வரை விண்வெளிப் பயணத்தின் 'திரில்'களை உணர்ந்து, அவற்றில் அளவற்ற ஈடுபாடு கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த 'விண்வெளியில் சிறுவர்கள்' விசேஷ விழாவில் அறிய முடிந்தது! வருங்காலம் இளஞ்சிறுவர்களின் கைகளில்தானே இருக்கிறது!

சுவிட்ஸர்லாந்து தேசத்து குட்டிக்கதைகள்







தேவி

தலையில்லா உடல் நடந்தது!

சுவிட்ஸர்லாந்தில் செயின்ட் அனு என்னும் சர்ச்சுக்கு அருகில் ஒரு மரத்தால் செய்யப்பட்ட சிலுவை உள்ளது.

முன்னொரு காலத்தில் ஒரு நேர்மையான மனிதருக்கு, அவர் செய்யாத தவறுக்காகத் தண்டனை வழங்கப்பட்டது. என்ன தண்டனை தெரியுமா? நடுத் தெருவில் நிற்கவைத்து அவருடைய தலையை வெட்ட வேண்டும் என்பதுதான்! இதைப் பார்க்க நீதிபதியும், அதிகாரிகளும், நிறைய மக்களும் அத்தெருவில் கூடினர்.

நேர்மையான மனிதர், தாம் செய்யாத தவறுக்குத் தண்டனை பெறுகிறோமே என்று வருந்தினார். அதைவிட, தம்முடைய பிள்ளைகளை இனி யார் காப்பாற்றுவார்கள் என்று அதிகமாக வருந்தினர்.

கூடியிருந்த நீதிபதியையும், கூட்டத்தினரையும் பார்த்து, ''நான் தவறு செய்யவில்லை என்பதை உங்களுக்குப் புரிய வைக்க வழியில்லை. நான் இறந்த பிறகு, என் குழந்தைகளுக்கு ஆதரவு காட்ட யாருமில்லை. உண்மையிலேயே நான் நிரபராதி என்றால், என்னுடைய தலையை வெட்டிய பிறகு, தலையில்லாத என் உடம்பு மட்டும் நடந்து செல்லும். அது எத்தனை அடிகள் நடக்கின்றனவோ, அத்தனை ஆண்டுகள் என் பிள்ளைகளை நீதிபதி காப்பாற்ற வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.



அவர் சொன்னபடி நடக்கும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. அதனால், நீதிபதியும் 'சரி' என்று ஒப்புக் கொண்டார்.

தண்டனையை நிறைவேற்ற வந்த அரசு ஊழியன், அந்த மனிதரை மண்டியிட வைத்துத் தலையை வெட்டினான். மறுநிமிடம் என்ன ஆச்சரியம்! தலையில்லாத அவரது உடம்பு சர்ச் வரை சென்றது. இவற்றிற்கு இடைப்பட்ட தூரம் 300 அடிகளுக்கு மேல் இருக்கும். இன்னும்கூட அந்த உடம்பு நடந்திருக்கும். குறுக்கே வந்தவர்கள் பயத்தினாலோ, பரிதாபத்தினாலோ தட்டிவிட, அந்த உடம்பு விழுந்துவிட்டது! அந்த இடத்தில் தான் மரத்தால் ஆன சிலுவை நினைவுச் சின்னமாக வைக்கப்பட்டுள்ளது.

பாடும் மரம்!

வெகு காலத்துக்கு முன்பு அழகான மரவேலை செய்யக் கூடிய தச்சர்கள் இருந்தார்கள். அவர்களுடைய பட்டறையில் எலுமிச்சை, சவுக்கு முதலிய மரங்களைக்கொண்டு கடவுளின் உருவங்களையும், மனித உருவங்களையும் செய்ததுடன், மீன், பறவை, நாய், கரடி போன்றவற்றின் உருவங்களையும் செய்தார்கள்.

அந்தத் தச்சர்களின் தலைவர் செய்த அலங்கார வளைவுகளும், சிலுவைகளுமே அருகில் இருந்த சர்ச்சுகளை அலங்கரித்தன. ஒருநாள் மாலை, அவர் வேலை செய்து கொண்டிருந்தபோது மணியோசை கேட்டது. அந்த மணியோசையுடன் ஓர் அதிசயமான பாட்டொலியும் கேட்டது. உடனே அவர் கையிலிருந்த உளியைக் கீழே போட்டுவிட்டு சன்னல் அருகில் போய் நின்றார். பாட்டின் ஒலி எங்கேயிருந்து வருகிறது என்று பார்த்தார். அருகில் உள்ள ஹோபாச் என்ற மலையில்

உள்ள காட்டிலிருந்துதான் வருகிறது என்பதை அறிந்தார்.

மணியோசை நின்றதும், அந்தக் காட்டிலிருந்து வந்த பாட்டொலியும் நின்றது. இதேபோல் மறுநாள் மாலையிலும் கேட்டது. அந்தத் தச்சருக்கு மட்டுமன்றி, அந்தக் கிராமத்தில் இருந்த அனைவருக்குமே அந்தப் பாட்டு கேட்டது.

இப்படியே தினமும் கேட்க ஆரம்பித்தது. ஒருநாள் மாலை வழிபாட்டு நேரத்தில் தலைமைத் தச்சர் மலைமேல் இருக்கும் காட்டிற்குச் சென்றார். அந்தப் பாட்டு எங்கிருந்து வருகிறது என்று சுற்றும் முற்றும் பார்த்தார். கடைசியில் ஒரு மரத்தின் கிளையிலிருந்துதான் வருகிறது என்று கண்டுபிடித்தார்! அந்த மரம் நூறு வருடங்களுக்கு முந்தைய மரம். அந்த மரத்தைப் பற்றி, அவர் தம் கிராமத்தில் உள்ளவர்களிடம் சொன்னார். அன்று முதல் நிறைய மக்கள் இந்த அதிசயப் பாட்டைத் தினமும் மாலையில் வந்து கேட்டனர்.

தச்சர் தலைவர் அந்த மரத்தை வைத்து ஓர் உருவம் செய்ய நினைத்தார். அதற்காகக் கெஞ்சிக் கூத்தாடி அப்பகுதித் தலைவரிடம் அனுமதி வாங்கினார். காட்டிற்குச் சென்று அம்மரத்தை வெட்டி எடுத்து வந்தனர். ''இந்த மரத்தை வைத்துக்கொண்டு கன்னி மேரியின் உருவம் செய்யப் போகிறேன்'' என்று சொன்னார்.

அதேபோல் அவர் அழகாக மேரியின் உருவத்தைச் செதுக்கி முடித்தார். ஊர் மக்கள் வந்து பார்த்தார்கள். ''இதுபோல் அருமையான உருவத்தையும், அழகான, அமைதியான முகத்தையும் உடைய மேரியை இதுவரை யாருமே செய்ததில்லை'' — என்று புகழ்ந்தார்கள்.

ஒரு நல்ல நாளில், அந்த மேரியை ஊர்வலமாகப் பட்டறையிலிருந்து மாதா கோவிலுக்கு எடுத்துச் சென்றனர். பாதிரியார் அந்த மேரியின் உருவத்தை மாதா கோயிலில் வைத்தவுடன், அந்த உருவம் வாயைத் திறந்து பாட ஆரம்பித்தது! அனைவரும் அதை வியப்புடன் கேட்டு மகிழ்ந்தனர். ஆனால், அதுதான் கடைசியாக அது பாடிய பாட்டு! பிறகு பாடவேயில்லை!

மர்ம வீரர்கள்!

பெலின்ஸோனா என்ற இடத்தில் ஒரு நீதிபதி வசித்து வந்தார். அந்த நீதிபதி மிகவும் நேர்மையானவர். யார் தவறு செய்தாலும் பணக்காரர், ஏழை என்று பார்க்காமல் நீதி வழங்குவார். இதனால் அந்தப் பகுதியில் உள்ள பணக்காரர்கள் அவரை வெறுத்தனர். காரணம், அவர்கள் நிறையத் தவறுகள் செய்து தண்டனை பெற்றார்கள். இதனால் அந்தப் பணக்காரர்கள் அனைவரும் ஒன்றுகூடி நீதிபதியைத் தீர்த்துக்கட்டிவிடுவதென்று தீர்மானம் செய்தனர்.



நீதிமன்றம் மகாடினோ என்ற இடத்தில் இருந்தது. எப்போதும் மாலையில்தான் வழக்குகள் விசாரிக்கப்படும். வழக்குகள் முடிந்து இரவு நேரத்தில் நீதிபதி பெலின்ஸோனாவிற்குத் தனியாக தம்முடைய குதிரையில் திரும்பி வருவார். இரண்டிற்கும் இடைப்பட்ட பகுதியில் காடு போன்று மரங்கள் அடர்த்தியாக வளர்ந்திருக்கும்!

ஒருநாள் நீதி மன்றத்தில் இருந்து நீதிபதி திரும்பும் நேரத்திற்கு, பணக்காரர்களின் கையாட்களில் மூன்று பேர் வழியில் உள்ள மரங்களுக்குப் பின்னால் ஒளிந்திருந்தார்கள். அவர்களின் கைகளில் சுட்டியும், கத்தியும் இருந்தன.

குதிரையின் குளம்பொலி கேட்டது. அவர்கள் நீதிபதியைக் கொல்லத் தயாராக நின்றார்கள். ஆனால், குதிரையில் வந்த நீதிபதியைச் சுற்றி மூன்று வீரர்கள் வந்தார்கள். அவர்களின் கைகளில் பளபளக்கும் கத்திகள் இருந்தன. அவர்களைக் கண்ட பணக்காரரின் கையாட்கள் வேறு பக்கமாக ஓடிவிட்டனர்.

விஷயத்தை அறிந்த பணக்காரர்கள், மறுநாள் ஆறு ஆட்களை அனுப்பினார்கள். அன்றிரவும் அவர்கள் மரங்களுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டனர். அன்றும் நீதிபதி தனியாக வா



வில்லை. அவருக்கு முன்னால் 3 வீரர்களும், பின்னால் 3 வீரர்களும் கத்தியுடன் வந்தனர்!

அடுத்தநாள் பணக்காரர்கள் 24 ஆட்களை அனுப்பினார்கள். அவர்கள் நீதிபதிக்காகக் காத்திருந்தனர். நீதிபதியோ 24 வீரர்கள் புடைசூழ வந்து கொண்டிருந்தார்!

இதைக் கண்ட பணக்காரரின் கையாட்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. 'குதிரைகளில் கத்தியுடன் வரும் இந்த வீரர்கள் யார்? அவர்களுக்கு எப்படி நம் திட்டம் தெரிகிறது?' என்றெல்லாம் ஆச்சரியப்பட்டனர்.

நீதிபதியையும், அந்த வீரர்களையும் அவர்கள் பின் தொடர்ந்தனர். நீதிபதியின் வீடு வந்ததும், அந்த வீரர்கள் இருந்த இடமே தெரியாமல் சட்டென்று மறைந்து விட்டனர்! நீதிபதியிடம்கூட அவர்கள் விடைபெறவில்லை.

அவர்கள் பாதுகாப்பாக வந்தது நீதிபதிக்கே தெரிந்திருக்க முடியாது என்று அந்தக் கையாட்கள் நினைத்தனர். நீதிபதியின் நேர்மைக்காக இறைவனே ஆட்களை அனுப்பி அவரைக் காப்பாற்றியிருக்கிறார் என்றும் புரிந்து கொண்டனர். எனவே, அவர்கள் நீதிபதியின் கால்களில் விழுந்து, நடந்ததைச் சொல்லி, மன்னிக்கும்படி கேட்டனர். நீதிபதியும் அவர்களை மன்னித்து விட்டார்!

திருக்குறள் புதிர் - விடை

புதிர் - 17

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு. (215)

உலகம் விரும்புகின்ற பெரிய அறிவாளியிடம் உள்ளசெல்வம், ஊர் மக்களின் தாகத்தைத் தீர்க்கும் குளம், நீரால் நிறைந்திருப்பதைப் போலாகும்.

புதிர் - 18

அரங்கு இன்றி வட்டாடி அற்றே நிரம்பிய
நூல்இன்றிக் கோட்டி கொளல். (401)

அறிவைப் பெருக்குகின்ற நூல்களைக் கற்காத ஒருவன், கற்றறிந்தோர் கூடியுள்ள சபையிலே பேசினால், அது எதைப் போல இருக்கும்? கோடு கிழித்து இடம் வகுத்துக் கொள்ளாமல், காய்களை உருட்டிச் சதுரங்கம் ஆடுவது போல இருக்கும்.

வீரம் காட்டினர்; விருது பெற்றனர்!

சென்ற மாதம் டில்லியில் நடந்த குடியரசு தின அணிவகுப்பில், யானைகளின் மீது கம்பீரமாக அமர்ந்து சில சிறுவர்களும் சிறுமியரும் சென்றனர். ஒவ்வொருவர் கழுத்திலும் ஒரு பதக்கம் மின்னிக் கொண்டிருந்தது. அவர்களின் பின்னால் ஆடிப் பாடிக்கொண்டு சுமார் 2000 குழந்தைகள் வந்தார்கள்.

யானைகளின் மீதிருந்த சிறுவர், சிறுமியர் வீரதீரச் செயல் புரிந்தவர்கள். தங்கள் உயிரையும் மதியாமல் பிறரைக் காப்பாற்றியவர்கள்.

அவர்களை ராஷ்டிரபதி ஜைல்சிங் வாழ்த்தினார். பிரதமர் இந்திரா காந்தி பதக்கங்கள் வழங்கிப் பாராட்டினார்.

அவர்கள் யார் — எவர்?

வசந்திக்கு வயது எட்டு. புதுக்கோட்டையைச் சேர்ந்தவள்.

1982—ஆம் ஆண்டு ஆகஸ்ட் 10ஆம் தேதி காலை 10 மணிக்கு, இரண்டு சாலைகள் கூடும் இடத்தில் ஒரு பெரிய வெடிச் சத்தம் கேட்டது. அதனால், ஒரு பஸ் விபத்து ஏற்பட்டது. அந்த பஸ் அடியில் சிக்கிக் கொண்டு தவித்த சுமதி என்ற 5 வயதுச் சிறுமியை, வெடி விபத்திலிருந்தும், பஸ் அடியிலிருந்தும் மிகவும் துணிச்சலாக ஓடிச் சென்று காப்பாற்றினாள் வசந்தி. இந்த முயற்சியில் வசந்திக்கு உடம்பெல்லாம் காயம்! இடது கன்னம் கிழிந்துவிட்டது! அப்போது அவ்வழியாகக் காரிலே சென்ற முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருநீலகண்டர் வசந்தியை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று, சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்தார். வசந்தியின் அஞ்சா நெஞ்சத்தையும், தியாக உள்ளத்தையும் பாராட்டி, 'கீதா — சோப்ரா விருது' வழங்கப் பெற்றது.

மத்தியப் பிரதேசத்தில் பிபாக்ஷேடி என்ற கிராமத்தில் ஒரு குடிசையிலிருந்து 'குபுகுபு' என்று புகை வருவதைக் கண்டான் துமன் லால் சாஹு என்ற 5 வயதுச் சிறுவன். உடனே, 'ஓ' என்று கூச்சலிட்டான்.

கூச்சலைக் கேட்டு, கிராம மக்கள் வருவதற்குள் 'குபகுப' என்று தீ பரவி





யானை மீது ஊர்வலம்

17 குடிசைகளை நாசமாக்கிக் கொண்டிருந்தது. அவற்றில் ஒரு குடிசையில், தன் இரண்டு வயதுத் தங்கை தூங்கிக் கொண்டிருந்தது சட்டென்று துமன்லாலின் நினைவுக்கு வந்தது. உடனே அக்குடிசைக்குள் பாய்ந்தான். அதற்குள் காலம் கடந்து விட்டது. தங்கையைக் காப்பாற்ற முடியவில்லை. தீயிலே கருகி இறந்து போனாள்.

துமன்லால் மிகவும் வருந்தினான். ஆயினும், அந்தக் குடிசைகளுக்குள் தூங்கிக் கொண்டிருந்த நான்கு சின்னஞ்சிறு குழந்தைகளைக் காப்பாற்றி விட்டான். அவர்களைக் காப்பாற்ற துமன்லாலுக்கு உதவியவனும், அவன் வயதுடைய ஒரு சிறுவனே. பெயர் லீலா சந்த்.

இருவருமே இந்த ஆண்டு வீர விருது பெற்றார்கள்.

பஞ்சாப் மாநிலத்தில் சட்லெஜ் நதியில் 113 மாணவர்கள் பாடியாலா நகரத்திலிருந்து படகில் பயணம் செய்தார்கள். திரும்பும்போது முதல் 'டிரிப்பில்' 62 பேர் படகில் வந்தார்கள். மற்றவர்கள் கரையில் பார்த்துக் கொண்டிருக்க, நடு ஆற்றில் படகு மூழ்கி விட்டது!

ஆபத்தில் அலறிய குழந்தைகளை மீட்க, கரையிலிருந்து இரண்டு படகுகள் விரைந்தன. என்ன துரதிர்ஷ்டம்! இந்த இரண்டு படகுகளில் ஒன்று மூழ்கி விட்டது! இரண்டாவது மீட்புப் படகில் சென்ற சஞ்சாய் சேத்தி நதிச் சுழலில் அகப்பட்டுக் கொண்ட நண்பர்களை இழுத்துக் கரை சேர்த்தான். இந்தப் பதினொரு வயதுச் சிறுவனின் முயற்சியினால் நான்கு நண்பர்கள் உயிர் பிழைத்தனர். ஆனால், பாவம், மற்றவர்களை உயிர் காக்கும் முயற்சியில் சஞ்சாய் நிலைதடுமாறி நதிச்சுழலில் குப்புற விழுந்து விட்டான். அவன் இறந்தாலும் அவனது தீரச் செயல் எல்லோருடைய உள்ளங்களிலும் நிலைத்துவிட்டது!

இவ்வாறே நங்கல் நதியில் மற்றொரு படகு விபத்தில் பிறருக்கு உதவிய பேபி தன்யா நிகம் (12 வயது) என்ற சிறுமிக்கும் இந்த ஆண்டின் வீர் விருது அளிக்கப்பட்டது.

தமிழ்நாட்டு வீரச் சிறுவன் 11 வயது திலீப் கிறிஸ்டியன், கோடைவிடுமுறையில் பாப்பி என்ற ஆறுவயதுப் பெண்ணை நீர் விபத்திலிருந்து காப்பாற்றினான். இத்தனைக்கும் திலீபுக்கு நீச்சல் தெரியாது. துணிச்சலும் சமயோசித அறிவும் கொண்ட அவன், மூழ்க இருந்த குழந்தையைக் காப்பாற்றினான். எப்படிக் காப்பாற்றினான், தெரியுமா?

குளத்திலே கூழாங்கற்களை வீசிக் கொண்டிருந்தாள் குழந்தை பாப்பி. அருகே, அருகே போனாள். கால் வழுக்கி விட்டது. 'தொபுகடீர்' என்று தடாகத்தில் தலைகீழாக விழுந்து விட்டாள். அருகே இருந்த திலீப் திடுக்கிட்டான். நீச்சலோ தெரியாது. உடனே அருகே இருந்த மரக்கிளையை ஒடித்து, தடாகத்தின் விளிம்பில் அந்தரத்தில் நின்றபடி பாப்பி விழுந்த இடத்தில் துழாவினான். அவள் மூழ்கி மூழ்கி மேலே வரும்போது கிளையைப் பிடித்துக் கொள்ளச் சொன்னான். அவள் பிடித்துக் கொண்டதும் சரேலென்று கிளையுடன் அவளைக் கரைக்கு இழுத்துக் காப்பாற்றிவிட்டான்!

மற்றொரு நதி விபத்தில் பிறருக்கு உதவும் முயற்சியில் தன்னுயிர் நீத்த

சிறுவன் மாஸ்டர் அமனிந்தர் சிங் (பாட்டியாலா, பஞ்சாப் மாநிலம்) நினைவில் மற்றொரு விருது அளிக்கப் பட்டது.

பத்து வயது ரமேஷ், தில்லி நகரில் எலுமிச்சம் பழம் விற்கும் ஏழைச் சிறுவன். ஒருநாள் குறுக்கு வழியில் ரயில் பாதையைக் கடந்து சென்றாள் ஒரு பாட்டி. அப்போது வேகமாக வந்த ரயிலில் மோதிக் கொள்ள இருந்த அவளைப் பார்த்தான் ரமேஷ். அவளைக் காக்க ஓவெனக் கூவினான். இவன் கூச்சல் கிழவிக்குக் கேட்க வில்லை. விரைந்து ஓடி அவளை இழுத்து ரயில் பாதையிலிருந்து அப்புறப்படுத்தினான். ஆனால், இந்த வேகத்தில் ரமேஷ் விழுந்து, தனது வலது கையை இழந்து விட்டான், பாவம். இந்த விபத்தில் தீ பட்டு அவன் சட்டை எரிந்து, வலது காலிலும் தீப்புண் ஏற்பட்டது. இவனது வீரச் செயலை அன்றே தில்லி கவர்னர் பாராட்டித் தேசிய வீர விருதுக்கு இவன் பெயரைச் சிபாரிசு செய்தார்.

இந்த ஆண்டு வீரப் பரிசு பெற்ற ஒவ்வொரு சிறுவரும் ஒரு தனிச் சாதனை புரிந்ததற்காகப் பாராட்டுப் பெற்றார்கள். இரண்டு வயது முன்னி, வீட்டுக் கூரையிலிருந்து விழ இருந்த போது காப்பாற்றினான் அமித்குமார் வர்மா (அலிகார், உத்தரபிரதேசம்). ஒரிசா மாநிலத்துச் சிறுமி நிலிமா ராஜ் (ஆறு வயது) ஐந்து அடி ஆழமான குளத்தில் விழுந்த குழந்தை திப்புவைக் காப்பாற்றியதற்காகப் பரிசு. நாகபுரியில் ஒரு தீவிபத்தில் சிக்கிய குடிசையிலிருந்து மூன்று குழந்தைகளை மீட்ட 14 வயது கிஷோர் விஷ்ணு குல்கர்னி என்னும் மராட்டியச் சிறுவன், ஒரு பரிசைப் பெற்றான்.

நிதின் தலாதி என்ற மற்றொரு மராத்தியச் சிறுவனும் தீ விபத்தில் உதவியதற்காகப் பாராட்டுப் பெற்றான். குடிசை வாழ் பகுதியில் ஒரு தீவிபத்தின் போது ஒரு தாய் வெளியே இருந்தாள். அவளது ஆறு வயதுக் குழந்தை குடிசைக்கு உள்ளே இருந்தது. அந்த ஏழைப் பெண் அழுது அலறிக் கொண்டிருப்பதைக் கண்டு இரங்கிய 13 வயது நிதின், சரேலென்று எரியும் குடிசைக்குள் பாய்ந்து, தூளியுடன் குழந்தையை வெளியே கொண்டு வந்துவிட்டான், துணிச்சலுடன்!



விருது பெற்றவர்களில் மிகச் சிறுவன்!

மணிப்பூர் மாநிலத்தில் நம்பூல் நதி மீது மரப்பாலத்தில் நடந்து வந்தார்கள் இரண்டு சிறுமிகள். அப்பாலத்திலிருந்த ஓர் இடைவெளியில் விழுந்து விட்டார்கள். 12 வயது தங்ஜம் ஜய சங்கர் சிங் என்ற மணிப்புரிச் சிறுவன் உடனே நதியில் குதித்து நீந்தி இரண்டு சிறுமிகளையும் ஒவ்வொருவராகக் கரை யேற்றினான்!

பஞ்சாப் மாநிலத்திலே அம்பாலா நகரில் தெருவில் நடந்து போய்க் கொண்டிருந்த ஒரு பள்ளிச் சிறுவனை, திடீரென்று ஒருவன் துணியால், முகத்தை மூடி மறைத்தான். அப்படியே அலாக்காகக் கடத்திச் செல்ல முயன்றான். இதைப் பார்த்த கியான் சந்த் என்ற பத்து வயதுச் சிறுவன் உரக்கக் கூவி, பக்கத்திலிருந்த ஆட்களையெல்லாம் கூட்டிப் பள்ளிச்சிறுவனை மீட்டான்.

திரிபுரா சிறுவன் ஜயந்தோ முகர்ஜியின் (12 வயது) வீட்டில் அவன் தந்தை இல்லாதபோது, ஒருநாள் மாலை ஒரு திருடன் புகுந்து அம்மாவின் கழுத்துச்



அடுத்த இதழில்!
16 பக்க வண்ணப் படக்கதை!

ஸ்ரீ ஹர்ஷ சரிதம்

கதை: ஆனந்தி
படம்: ஷிணு

மேலும்

- பிருந்தாவனக் கவியரங்கம்
- 'மாலி - ஜூலி' - கார்ட்டூன் தொடர்
- 'பள்ளியில் நடந்தது' -
  இரண்டும் ஆரம்பமாகின்றன.
- கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர்
  மனுவும் வெளியாகிறது.

சங்கிலியைத் திருடி விட்டான். கத்தியைக் காட்டி எல்லோரையும் பயமுறுத்தினான். அப்போது சிறுவன் ஜயந்தோ நைசாக வெளியே வந்து கூச்சலிட்டுக் கூட்டம் சேர்த்து விட்டான். தப்பியோடப் பார்த்த திருடனைத் தந்திரமாகத் தடுக்கி விழச் செய்து சங்கிலியையும் மீட்டான். இந்த சாமர்த்தியமும் தைரியமும் கலந்த செயலால் ஜயந்தோ விருது பெற்றான்.

காஷ்மீரச் சிறுவன் விக்ரம் ஜீத் சிங் ஒரு காட்டாற்று வெள்ளத்தில் கிராம மக்களைக் காப்பாற்றினான்.

காட்டுச் சிறுத்தையின் தாக்குதலுக்கு ஈடுகொடுத்துப் போராடி மீண்ட கலுராம் என்ற கோண்டு இனச் சிறுவனும் பாராட்டுப் பெற்றான்.

ரயில் பாதையில் நடந்து போய் விபத்தில் சிக்க இருந்தவர்களைக் காப்பாற்ற உதவிய பாண்டுரங்க் என்ற 15 வயதுக் கன்னடச் சிறுவனும் ராஜேந்திரசிங் என்ற ஒன்பது வயதுக் காஷ்மீரச் சிறுவனும் பாராட்டுப் பெற்றார்கள். வீரச் செயலில் ஈடுபட்ட பாண்டுரங்கனுக்கு இந்த முயற்சியில் ஒரு கால் ஊனமாகிவிட்டது. பாவம்! காஷ்மீரச் சிறுவன் ரஜீந்தர் சிங் ரயில் தண்டவாளத்தில் ஓர் விரிசலைக் கவனித்து விட்டான். அடுத்த ஊர் ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டரிடம் கூறி ரயிலை நிறுத்தி, பெரிய விபத்து நேராமல் காப்பாற்றிவிட்டான்.


வீரச்செயல் புரிந்த எவருக்குமே தாம் இப்படி ஒரு வீரச் செயல் செய்து புகழ் அடையப் போகிறோம் என்பது தெரியாது. அவர்கள் மனம் பிறருக்கு உதவும் பக்குவத்தில் எப்போதும் கனிந்து இருக்கிறது. வாய்ப்பு வந்தது. வீரம் வெளிப்பட்டது.

இப்படி வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் கோகுலம் வாசகர்களாகிய உங்களின் வீரமும், உதவும் தன்மையும் வெளிப்படும். நிச்சயம் தானே!

-எஸ். ராஜு

பிருந்தாவனம்

❀ கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர்கள் கலந்து கொள்ளும் பகுதி ❀



தை மாதத்தில் இதை எழுதுகிறேன். கீழே உள்ள ஒவ்வொரு சொல்லைப் பார்த்ததுமே அதனுடன் தொடர்புடைய — ஆனால், கடைசியில் 'தை' என்று முடிகிற சொல் நினைவுக்கு வரும். கண்டுபிடியுங்கள், பார்க்கலாம்.

1. உறவு, 2. பறவை, 3. அறிவாளி, 4. இராமாயணம், 5. மகாபாரதம், 6. மந்திரவாதி, 7. திருப்பாவை, 8. விஞ்ஞானம்.

விடைகள்: 1. அத்தை, 2. ஆந்தை, 3. மேதை, 4. சீதை, 5. கீதை, 6. வித்தை, 7. கோதை, 8. விந்தை.

—எம். ஆர். அருளாளன் (3546), சென்னை—33.

சைக்கிளும் லாரியும்

வேகமாக சைக்கிளை ஓட்டி வந்த ஒரு பெரியவர், ஒரு சிறுவன் மீது மோதி விட்டார். நல்ல காலம், அவன் காயம் இல்லாமல் தப்பினான்!

''தம்பி, நான் ஓட்டி வந்தது



சைக்கிளாக இருந்ததால், நீ காயம் இன்றித் தப்பினாய். சைக்கிளுக்குப் பதிலாக நான் லாரியை ஓட்டிவந்தால், உன் கதி என்ன ஆகியிருக்கும்''? என்று கூறி அவர் சமாளிக்கப் பார்த்தார்.

''சைக்கிளை ஓட்டவே தெரியாத நீங்கள், லாரியை ஓட்டியிருந்தால் என்ன ஆகியிருக்கும்? புறப்பட்டவுடனேயே, லாரி விபத்துக்கு உள்ளாகியிருக்கும். இவ்வளவு தூரம் வந்து என்னை மோதியிருக்க மாட்டீர்கள்'' என்றான் சூடாக அச்சிறுவன்.

—யு. நாசர் (600), சேலம்—1.

ஒரு பாட்டு:

அருமைப் பண்டம் பூந்தி!
அதிகம் தின்றால் வாந்தி!
அஹிம்சைத் தந்தை காந்தி!
அவர்தம் கொள்கை சாந்தி!

—எம். எஸ். கோமதி (37), குமாரபுரம்.



மூக்கும் மூக்கும் உரசுதல்

எஸ்கிமோக்களிடம் ஒரு வேடிக்கையான பழக்கம் உண்டு.

ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது, மூக்கைக் கொண்டு மூக்கை உரசிக் கொள்கிறார்கள். இப்படி மூக்கும், மூக்கும் உரசும்போது தான், உண்மையான அன்பு வெளிப்படுகிறதாம்!

—எஸ். மாதவன் (204), திருச்சி-14.




குறுக்கு வழி;

நிருபர்: கிரிக்கெட் ஆடும்போது உங்கள் குழு தோற்றுவிடும்போல் தோன்றினால், என்ன செய்வீர்கள்?

குழுத் தலைவர்: வருண ஜெபம் செய்வோம். மழை பெய்யும். ஆட்டம் 'டிரா'வில் முடியும்.

—உ. சிதம்பரம் (2539), கோவை-1.



பிராணி தெரியுமா ?

முதுகில் மூன்று பட்டை;
முன்னங் கால்கள் குட்டை;
மிருது ரோமச் சட்டை;
மென்று தின்னும் கொட்டை.

இந்தப் பிராணி தெரியுமா?
அந்தப் பிராணி அணிலேதான்!

—பி. கண்ணன் (543), தெப்பம்பட்டி

எதிர் நீச்சல்

''என் மகன் வாழ்க்கையிலே எதிர் நீச்சல் போட்டு முன்னேறுவேன்னு சொல்றான். அதுதான் எனக்குக் கவலையாயிருக்கு.''

''இதுக்குப் போய் ஏன் கவலைப் படணும்?''

''ஐயோ, அவனுக்கு நீச்சல் அடிக்கவே தெரியாதே! எதிர்நீச்சல் எப்படிப் போடுவான்?''

—சி. என். செல்வக்குமாரி (2988),
மேலக்காவேரி.



உலகிலே அதிக விற்பனை!


உலகிலேயே அதிக விற்பனை உள்ள சிறுவர் பத்திரிகை 'சீனச் சிறுவர் செய்தி' என்பதுதான். இந்தப் பத்திரிகை எத்தனை பிரதிகள் விற்பனையாகின்றன, தெரியுமா?
1 கோடியே 10 லட்சம்
பத்திரிகை படிப்பதிலும், விளையாட்டிலும் சீனச் சிறுவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டுகிறார்கள்.

—எஸ். ஜெயஸ்ரீ, (1254), திருச்சி-14.

அமைச்சரின் யோசனை!

ஓர் அமைச்சர் முதன் முதலாகக் கால் பந்தாட்டத்தைப் பார்க்கச் சென்றார். அவருக்கு எந்த விளையாட்டைப் பற்றியும் தெரியாது. வீடு திரும்பும்போது, தம் உதவியாளரிடம், ''எதற்காக இவர்கள் பைத்தியம் போல ஒரு பந்துக்குச் சண்டை போடுகிறார்கள்? ஆளுக்கு ஒரு பந்தை வாங்கிக் கொடுத்துவிட்டால் சண்டையே இருக்காதே!'' என்றார்.

—எம். ஸ்ரீராம், (874), சென்னை-4.






நாடோடிப் பாடலில் விடுகதை

மாறு மதுரைக்குப் போன மச்சான்,
மாவிலே பூத்தது வாங்கி வாரும்.
மாவிலே பூத்தது இல்லாவிட்டால்,
பக்கம் பழுத்தது வாங்கி வாரும்.
பக்கம் பழுத்தது இல்லாவிட்டால்,
ஒக்கச் சிரிப்பது வாங்கி வாரும்.
ஒக்கச் சிரிப்பது இல்லா விட்டால்,
உமக்கும் எனக்கும் வாங்கி வாரும்.

'ருபா 'ர்ஸிஷ்ஜை
'ஏசிராரமா 'ஏமிமாஜுமா :¬ஊஜ

—ஏ. தாமஸ் (5107), செங்கம்.



பழத்திலிருந்து காய்

மாங்காயிலிருந்து மாம்பழம், கொய்யாக் காயிலிருந்து கொய்யாப் பழம், புளியங்காயிலிருந்து புளியம் பழம் — இப்படி எல்லாமே காயிலிருந்து பழமாகின்றன. ஆனால், ஒன்றில் மட்டும் பழத்திலிருந்து காய் தோன்றுகிறது. அந்தப் பழம் எது?

விடை: எலுமிச்சம்பழம், ஊறுகாய் ஆகிறது.

—கோ. தாமோதரன் (224), சூலூர்.

தண்டனையா?

"என்ன கண்டக்டர், டிக்கெட்டில் யணம் செய்தால் தண்டனை உண் டென்னு போர்டு போட்டிருக்கு?"

"அடேடே, யாரோ முதல் எழுத்தான 'ப'வை அழிச்சிட்டாங்க தம்பி!"

—டி. வெங்கடசுவாமிநாதன் (3522), திண்டுக்கல்.



தற்காலக் குறள்

எல்லா விளக்கும் விளக்கல்ல —
ஒளியின்
எலெக்ட்ரிக் விளக்கே விளக்கு.

அடித்தால் அடிக்க சிக்ஸர் —
அதுவில்லையெனில்
அடித்தலின் அடிக்காமை நன்று.

—சு. இராமகிருஷ்ணன் (2791), கிருஷ்ணாபுரம்.

கடைசியிலிருந்து எழுதினாலும்..?

ABLE WAS I ERE I SAW ELBA

—இது மாவீரன் நெப்போலியன் சாகும்போது கூறியது. இந்த வாக்கியத்தில் உள்ள சிறப்பு என்ன என்று



தெரிகிறதா? 'விகடகவி' என்ற சொல்லைக் கடைசி எழுத்திலிருந்து திருப்பி எழுதினாலும் 'விகடகவி' என்று வருவது போல, இதையும் கடைசியில் இருந்து ஒவ்வோர் எழுத்தாக எழுதினாலும் அதே வாக்கியம், பொருள் மாறாமல் வரும்!

—பி. புவனா (1691), புலியூர், (கரூர் தாலுகா.)



அம்மா

அனைத்து உயிர்களும் பிறக்கும் போதே, அழைப்பது அம்மாவைத் தான். அந்த 'அம்மா' என்ற சொல்லில்தான் எத்தனை சுகம்!

அம்மா என்ற சொல்லில் தமிழ் இலக்கணம் முழுவதும் அடங்கியுள்ளது:

அ — உயிர் எழுத்து

ம் — மெய் எழுத்து


மா — உயிர் மெய் எழுத்து.

உயிர், மெய், உயிர்மெய் — இவைகள் தானே தமிழின் உயிர்கள்!

—தெ. அன்புசெழியன் (1727), பண்ருட்டி.

ராஜாஜி ஆடிய கிரிக்கெட்

'கல்கி' அவர்களின் புதல்வரும், 'கல்கி' வார இதழின் ஆசிரியருமாகிய கி. ராஜேந்திரன் அவர்கள் சிறுவராக இருந்தபோது, தம் நண்பர்களுடன் வீட்டின் முன்னால் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தாராம்.



அந்தச் சமயம், அங்கே வந்த ராஜாஜி, ''கிரிக்கெட் ஆடுகிறீர்களா?'' என்று கேட்டதோடல்லாமல், கிரிக்கெட் மட்டையை வாங்கிக் கொண்டு,பந்து வந்தால் அடிப்பதற்குத் தயாராக நின்றாராம். ஒரு சிறுவன் வீசிய பந்து அவரது காலில் பட்டு விட்டதாம். உடனே ராஜாஜி,''என்ன, எல். பி. டபிள்யூவா?'' என்று கேட்டு விட்டு, மட்டையைக் கொடுத்து விட்டுப் போய் விட்டாராம். சிறுவர்கள்தானே என்று நினைக்காமல், தாம் அவுட் ஆகியதை ஒப்புக்கொண்டு, ராஜாஜி சென்றதைப் பற்றி ராஜேந்திரன் அவர்கள் வானொலியின் கல்வி ஒலிபரப்பு நிகழ்ச்சி ஒன்றில் அளித்த பேட்டியில் கூறினார்.

—த. அருள் சிவபாலன் (47)செங்கல்பட்டு—2.

ஓட்டப் பந்தயம்

''பாட்டி, நான் இன்னிக்கு எங்கள் பள்ளிக்கூடத்திலே நடக்கிற ஓட்டப் பந்தயத்திலே ஓடப்போறேன்.''


''பார்த்து, மெதுவா ஓடு. வேகமா ஓடிக் கீழே விழுந்து காலைக் கையை ஒடிச்சுக்காதே!''

—பி. ராஜேந்திரன், லக்காபுரம்.





மகாராஷ்டிர தேசத்தில் சிவாஜி மகாராஜா முகலாயர்களை எதிர்த்துப் போரிட்டு இந்து மதத்தை நிலைநாட்டினார்.
அவருக்கு குருவாக இருந்தவர் ஸ்ரீ சமர்த்த ராமதாஸர் என்று புகழப்படும் மகான்.
ஸ்ரீ சமர்த்த ராமதாஸரை அனுமானுடைய அம்சமாகவே கருதி வந்தார் சத்ரபதி சிவாஜி.
ஸ்ரீ ராமதாஸருக்குத் தொண்டு செய்து வந்தான் போளா என்ற சிறுவன்.
குருவினிடம் வைத்திருந்த அளவற்ற நம்பிக்கையினால் பெரிய பாக்கியத்தை அடைந்தவன் போளா.
போளா என்றால் மடையன் என்று பொருள். சமர்த்தர் என்று பெயரெடுத்த ஒரு மகான்; அவருக்கு மடையன் என்று அழைக்கப்பட்ட ஒரு சீடன்!
இவர்களுடைய கதை இது.
பாக்கியவான் போளாஜி
கதை: ஆனந்தி
படம்: வினு
மகாராஷ்டிர தேசத்தில் சூர்யாஜி பண்டிதர் என்பவர் வசித்து வந்தார்.
அவருடைய இஷ்ட தெய்வம் ஸ்ரீ ராமபிரான்.
சுவாமி! நம் மூத்த மகன் சரியாகப் பிறந்தானே! இந்தப் பிள்ளை வாலுடன் பிறந்திருக்கிறதே. இது என்ன கஷ்டம்?
கவலைப்படாதே! ரேணு! இவன் நம் தெய்வமான ராமபிரானுக்கு அனுமனைப் போல் தொண்டு செய்யப் பிறந்திருக்கிறான் என்று தோன்றுகிறது.



ஊராருடைய தோப்பில் புகுந்து பழங்களையெல்லாம் பறித்து, சிறுவர்களுக்குக் கொடுத்து விடுவான்.
ஐந்து வயதுக்குள் நாராயணனின் வால் முளைத்து போயிற்று. ஆனால் அசாத்திய விஷமங்கள் செய்வான்.
வருடங்கள் சென்றன. தாய் மகனிடம் பேசினாள்.
நாராயணா! நீ இன்னும் குழந்தையா? குடும்பப் பொறுப்பை ஏற்கவேண்டாமா? ஒரு மூட்டை நெல்லுக்காவது வழி செய் அப்பா.
நாராயணன் களத்து மூட்டை அடுக்கினான்.
ஒரு மூட்டை நெல் தானே அம்மா கேட்டாள். எடுத்துக் கொண்டு போனால் சந்தோஷப் படுவாள்.
அம்மா! இதோ! நெல் மூட்டை.
எங்கிருந்து கொண்டு வந்தாய்?



உடுவன் ஓடி வந்தான்.
அம்மா! நான் அவ்வளவுட- செய்து கட்டி வைத்திருந்த மூட்டையில் ஒன்றை இவர் தூக்கிக் கொண்டு வந்து விட்டார்.
தண்டாப்பா இப்படிப் பண்றீங்களே? பிறர் பொருளை எடுத்து வரலாமா?
இவருடையது என்றுச் எடுத்துப் போகட்டுமே.
மூட்டை வண்டியிலேறிய போதிலும் அது இருந்த இடத்தில் இன்னொரு மூட்டை இருந்தது.
உங்கள் மகன் தெய்வப் பிறவி அம்மா!
நாராயணனுக்கு விவாகம் செய்து வைக்க ஏற்பாடு செய்தார்கள். கல்யாண மந்திரங்கள் ஓதி விடும்போது 'நாராயணா! ஜாக்கிரதை' என்று யாரோ எச்சரிப்பது போல் அவனுக்குத் தோன்றியது.
மாப்பிள்ளை எங்கே? மணமகனைக் காணவில்லையே!
முகூர்த்தம் தவறி விடுமே! தேடுங்கள்.


ஓடிப் போன நாராயணன் காட்டிலும் மேட்டிலும் அலைந்தான்.
இந்தக் குகையில் இருந்தால் யாராலும் கண்டு பிடிக்க முடியாது.
திருடன் ராமநாமத்தை ஜபித்து வால்மீகி முனிவராக மாறி விடவில்லையா? நானும் ஜபிக்கிறேன்.
ஹனுமானை வேண்டுகிறேன். அவர் அருளால் ராம பிரானைத் தரிசனம் செய்வேன். அதுவரை நீர் கூட அருந்த மாட்டேன்.
ஏழு நாட்கள் அன்னபானமின்றித் தவமியற்றினான் நாராயணன். எதிரே தோன்றினார் ஆஞ்சநேயர்.
சுவாமி எனக்கு ஸ்ரீராமபிரானின் தரிசனம் கிடைக்கும்படி அருள் புரிய வேண்டும்.



ராமனைத் தரிசிக்க வேண்டுமா? வா போகலாம்.
பஞ்சவடியில் ராமர் கோவில். ஸ்ரீராமநவமி உத்சவம். சுவாமி ஊர்வலம். ஹனுமான் பிராமணர் வேடத்தில் நாராயணனுடன் வருகிறார்.
பூஜைகள் முடிந்து எல்லாரும் போன பிறகு இருவரும் ராமச்சந்திர மூர்த்தியின் சந்நிதிக்கு வந்தார்கள்.
ஐயனே! இந்தப் பிள்ளைக்குத் தரிசனம் தர வேண்டும்.
இவனுக்கு இன்னும் உபதேசம் கிடைக்கவில்லை. அதனால் தான் நான் எதிரில் இருந்தும் அவன் கண்களுக்குத் தெரியவில்லை.
சுவாமி! இவனுக்குத் தாங்களே இங்கு உபதேசித்து விட்டால் நாம் தரிசனம் கொடுக்கலாம் அல்லவா?
நாராயணனின் காதுகளில் ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெயராம் என்ற மந்திரம் ரீங்காரம் செய்ததும்
மாருதி! எதுக்காக வந்தாய்?



நாராயணா! இன்றுமுதல் உன்னை ராமதாசன் என்றே எல்லோரும் அழைப்பார்கள். மாருதியின் அருளால் நீ நாட்டு மக்களுக்குத் தொண்டு செய்வாய்.
ஊர் மக்கள் அவர் கோலம் கண்டு அதிசயப்பட்டு உபசரித்தார்கள்.
வாருங்கள் சுவாமி!
இசை வெள்ளம் பெருக்கெடுத்தது.
அப்பனே! இசையின் பக்தியையும் ராம நாமத்தையும் உலகில் பரப்புவாயாக!
ராமதாஸனுக்கு ஆசி கூறி மறைந்தார் அனுமார்.



உத்தவர் என்ற சீடருடன் சேர்ந்து மாருதிக்கு ஒரு கோவில் கட்டி முடித்தார் ராமதாஸர்.
உத்தவா! என் மனம் தனிமையை நாடுகிறது. நான் போக வேண்டும். நீ இந்தக் கோவிலில் வழிபாடுகளைக் குறை இன்றிச் செய்து வர வேண்டும்.
அந்த இடத்தில் தங்கிய ராமதாஸருக்கு நாளடைவில் சீடர்கள் வரத் தொடங்கினார்கள். ஆசிரமங்கள் வளர்ந்தன.
இரண்டாவது முறையாகக் கிருஷ்ணா நதி தீரத்தில் ராமபிரானின் திவ்விய வடிவத்தைத் தரிசனம் செய்தார் ராமதாஸர்.
மூன்றரை கோடி முறை ராம நாம தாரக மந்திரம் ஓதுவாயாக.
ஒருநாள் ராமதாஸரைப் பற்றிக் கேள்விப்பட்ட சிவாஜி மன்னர் அவரைத் தேடி வந்தார்.


ராமதாஸர் ஆழ்ந்த தியானத்திலிருப்பதையும் அவர் பின்னால் அனுமார் இருப்பதையும் கண்டு வியந்தார்.
சுவாமி! என் உடல் பொருள் ஆவி எல்லாம் உங்களுக்கே சமர்ப்பித்தேன்.
நீ என் தொண்டன். என் பிரதிநிதியாக இருந்து நீங்கள் அரசாள வேண்டும். உங்கள் கொடி இன்று முதல் காவிக்கொடியாக விளங்கட்டும். உங்கள் ராஜ்யத்தில் மக்கள் ஒருவரையொருவர் சந்திக்கும் போது ராம் ராம் என்று வாழ்த்திக் கொள்ளட்டும்.
சுவாமி என்னுடன் வந்துவிடக் கூடாதா?
அவசியமானபோது வருவேன். இதோ, இந்த நூலைப் பெற்றுக் கொள்ளுங்கள். இதன்படி அரசாட்சி செய்து புகழ் பெறுவீர்கள்.
ராமதாஸர் இயற்றிய அந்த நூல்: தாஸ்போதம்.
ராமதாஸர் ஆசிரமத்துக்கு ஒரு சிறுவன் வந்து சேர்ந்தான். குருவுக்குச் சிறு சிறு தொண்டுகள் செய்யத் தொடங்கினான்.
சீடர்களுக்குப் பாடம் சொல்லும் வேளைக்குப் புதியதொரு விவகாரம் உபநிஷத் பாடங்கள் நடக்கும் போது வேலை செய்யப் போய் விடுவான்.



தினமும் இரவில் ராமானுஜருடைய சரித்திரத்தைக் கூறுவார் ராமதாஸர்.
மந்திர பாடங்களில் மனம் செலுத்தாத சிஷ்யர்கள் போனா (மடையன்) என்று அழைக்க ஆரம்பித்தனர்.
போனாவுக்காகத் தினம் காத்திருக்கிறீர் குருஜி. கதை ஆரம்பிப்பதற்குள் தூக்கம் வந்து விடுகிறது
இரவு வேளையில் போனா ஆசிரமத்து வேலைகளை முடித்து திரும்பும் வரையில் கதையை ஆரம்பிக்க மாட்டார் குருநாதர்.
இந்த மடையனிடம் குருஜிக்கு ஏனோ இந்தப் பிரியம்?
சிவாஜி மன்னர் ஓலையனுப்பியிருக்கிறார். நாம் ஆளந்தியிலுள்ள ஞானதேவரின் சமாதியைத் தரிசித்துவிட்டு சிவாஜி மகாராஜாவைக் கண்டு திரும்பலாம்.
பால் பொங்கல் பிரமாதமாகத்தான் இருக்கிறது!
எல்லோரும் புறப்பட போனா தயங்குகிறான்.
என்னப்பா?
குருஜி! எல்லோரும் போய்விட்டால்? மாடு கன்றுகளைக் கவனிக்க வேண்டாமா? நந்தவனம் காய்ந்து விடுமே!




மாடு கன்று மட்டுமா? ராம பிரான் லக்ஷ்மணர் சீதாதேவி ஹநுமார் இவர்களெல்லாரும் பட்டினி கிடப்பார்களே!
நீ இருந்து தினம் அவர்களுக்கு உணவளிக்க வேண்டும்.
அப்படியே செய்கிறேன் சுவாமி.
நான் வருவதற்குச் சில மாதங்களாகும். உனக்கு ஹநுமார் துணையாக இருப்பார். கூப்பிட்டால் உடனே வருவார்.
தனியாக விடப்பட்ட போனா காலையில் நதியில் ஸ்நானம் செய்து பூப்பறித்து வந்து விக்கிரகங்களுக்கு அர்ச்சனை செய்தான். பிறகு பக்தியமாக சமைத்தான்.
சாப்பிடும் கூடத்தைச் சுத்தம் செய்து தண்ணீர் தெளித்து இலை போட்டான்.
சுவாமி சாப்பிட எழுந்தருள வேண்டும்.
வெகு நேரமாகியும் யாரும் வரவில்லை. பிறகு கடந்து அந்தி பொழுது கூட வந்து விட்டது.
பசி தாங்க முடியாத போனாவுக்கு அழுகை வந்தது.
குருநாதர் சொன்னபடி எல்லாம் செய்தேனே! நீங்கள் ஏன் சாப்பிட வரவில்லை? நீங்கள் எல்லோரும் சாப்பிட்ட பிறகுதான் நான் சாப்பிட வேண்டும் என்று குருநாதர் சொன்னாரே!
சட்டென்று நினைவு வந்தது போனாவுக்கு.
ஹநுமானே! நீங்களாவது அவர்களை அழைத்துக் கொண்டு வரக்கூடாதா?



என்னப்பா? பசிக்கிறதா? வா! சாப்பிடலாம்.
ராமச்சந்திர மூர்த்தி சீதாதேவி சாப்பிட்ட பிறகு தான் நான் சாப்பிட வேண்டும் என்று அனுமார் சொன்னார். வரச் சொல்லுங்கள்.
ஹனுமான் ராமனிடம் வாதாடினார்.
சுவாமி! இந்தப் பிள்ளையின் வார்த்தையில் பரிபூரண நம்பிக்கை வைத்திருப்பதால் அவன் சொன்னபடி நாம் செய்தேயாக வேண்டும்.
ராமர், சீதை, லட்சுமணர் வரவும்....
இவ்வளவு நாழி பண்ணி விட்டீர்களே! நாளை முதல் காலா காலத்தில் வந்து சாப்பிடுங்கள்.
அப்படியே செய்கிறோம்.
நான் கூப்பிட்ட உடனே வந்திருந்தால் சுடச்சுட நன்றாக இருந்திருக்கும். இப்போது ஆறிப்போச்சு
சாப்பாடு முழுவதும் தீர்ந்துவிட்டதும்
ரொம்ப நன்றாக இருக்கிறது. இன்னும் கொஞ்சம் பாயசம்.
நாளைக்கு நிறையப் பண்ணுகிறேன்.
மறு நாள் பெரிய பெரிய பாத்திரங்களில் சமையல் செய்தான் கோபாலா. நால்வரும் பெரும் திருப்தியாகச் சாப்பிட்டார்கள்.
அண்ணா! ஹனுமானே! எனக்கு ரொம்ப வேலை இருக்கிறதே. நீங்கள் கொஞ்சம் உதவி செய்யக் கூடாதா?


ஒரு நாள் பூனா நகரிலிருந்து வந்த பிரயாணி ஒருவர் ஆசிரமத்துக்கு வந்தார்.
குருநாதருக்கு சிவாஜி மகாராஜா பிரமாதமான வரவேற்பு அளித்தார். ஜனங்கள் ஆனந்தக் கடலில் ஆழ்ந் திருக்கிறார்கள்.
ஹநுமான் போனவிடத்தி லெல்லாம் கனிவுடன் உதவி செய்தார். அந்த வகையில் தண்ணீர் ஊற்றும் பாத்திரங்களெல்லாம் ஹநுமானின் சின்னமாக காட்சியில் இருக்கின்றன.
என் குருநாதர் எப்போது திரும்புவார்?
சீக்கிரம் வந்து விடுவார்.
சில தினங்கள் சென்று ஒரு வீரன் வந்தான்.
குருஜீ நாளை பிற்பகல் வருவதாகச் சொல்லி யனுப்பினார். அவரோடு நாலு பேர் வருகிறார்கள்.
அப்படியா? ரொம்ப சந்தோஷம்.
மறுநாள் காலை போனவுடன் பரபரப்புத் தொடங்கி விட்டது. அறு பேருக்குச் சமையல் தயாராக வேண்டும். ஆசிரமத்தை சுத்தம் செய்ய வேண்டும்.
பூஜை அறைக்குப் போனான்.
இன்று சீக்கிரம் எல்லோரும் கொஞ்சம் உதவி செய்ய வேண்டும். நாலு பரிவாரத் துடன் குருஜி வருகிறார்.
அதற்கென்ன! கூடவும் உதவி செய்கிறோம்.
போனா! நான் வாசலில் கோலம் போடுகிறேன். பிறகு காய்கறி நறுக்கித் தருகிறேன்.
நான் விறகு கொண்டு வருகிறேன்.
நான் காய்கறிகள் பறித்துக் கொண்டு வருகிறேன்.


மாருதி! மாவிலைத் தோரணங்கள் கட்டி இரு மகராஜ் வருமுன் ஆசிரமத்தை அலங்கரிக்க வேண்டும்.
ஸ்ரீ ராமர் பாயசம் தயாரித்தார்!
சமையல் தயாராகி விட்டது! பூஜையறை தனிச் சோபையுடன் மணம் கமழ்ந்தது.
தூரத்தில் ஜனங்கள் வரும் ஆரவாரம்.



இருவரும் சீடர்களும்
வந்தார்கள்!
வந்து பார்த்தவர்கள் வியந்தனர்.
ஓகோகோ!
இது என்ன
ஆச்சரியம்?
காடாக இருந்த இடம்
நந்தவனமாகவும்
தோப்பாகவும்
மாறி விட்டதே!
மாடு கன்றுகள் எல்லாம்
கொழுகொழுவென்று
அழகாக இருக்கிறதே!


ஆசிரம
வாசலில் பாலுடன்
அலங்காரம்
பிரமாதப்படுத்தது!
மன்னுடைய
ஏற்பாடாக இருக்கும்.
நடந்ததை ஊகித்துப் பரவசமான ராமதாஸர் கேட்டார்.
தனியாகஇத்தனை
காரியங்களும்
எப்படிச் செய்தாய்
அப்பா?
சுவாமி! ஹநுமானும்
ராமலக்ஷ்மணர்களும்
சமையல் செய்தார்கள்.
கோலங்கள் போட்டு
ஆசிரமத்தை அழகு
செய்தாள் சீதா
பிராட்டியார்!
சீடர்கள் கேலி செய்தனர்.
சரியான
போனா இவன்
சீதா பிராட்டி
கோலம்
போட்டாளாம்
உளறுகிறான்!


சுவாமி இந்த முட்டாளிடம் தாங்கள் எவ்வளவு அன்பு காட்டி வருகிறீர்கள்! தங்கள் கருணையே கருணை.
தோட்டத்திலிருந்து ஆசிரமத்துக்குள் நுழைந்தபோது யாரோ வேகமாகச் சென்று பூஜையறையில் மறைவதைச் சீடர்கள் உணர்ந்தார்கள். உண்மையறிந்து மனம் திருந்தினார்கள்.
சீடர்கள் மன்னிப்பு வேண்ட, ராமதாஸர் போளாவின் சிறப்பை அவர்களுக்கு எடுத்துரைத்தார்.
போளாஜி! எனக்குக் குரு உபதேச மில்லாத படியால் நான் ராம பிரானைத் தரிசிக்க படாத பாடு பட்டேன். நீயோ குருவிடம் வைத்த பக்தியினால், ராமலட்சு மணர்களும், சீதையும் அனுமாரும் உனக்குத் தொண்டு செய்யும் பாக்கியம் அடைந்தாய். நீ என்னை விடப் பெரியவன்!

சார், ஒரு டிக்கட்!

வே.சபாநாயகம்

பஸ் கிளம்ப இன்னும் நேரம் இருந்தது. என்னைத் தவிர ஒரிருவரே பஸ்ஸில் அமர்ந்திருந்தனர். நான் சன்னல் வழியே வெளியே பார்த்துக் கொண்டிருந்தேன். நான் அமர்ந்திருந்த அந்த நீண்ட இருக்கையில் நான் மட்டும்தான்.

'சார்' என்ற மணிக்குரல் ஒன்று என்னைத் திரும்ப வைத்தது. அரிசிப் பல் தெரிய ஒரு சின்னஞ் சிறு பையன் நின்று கொண்டிருந்தான். அவனையும் அவனது சிரிப்பையும் பார்க்கப் பரவசமாக இருந்தது.

நெற்றியில் மூன்று வரியில் சன்னமான திருநீற்றுக் கோடுகள் நூல் வைத்து இழுத்த மாதிரி இருந்தன. புருவ மத்தியில் புள்ளி வைத்த மாதிரி ஒரு சின்ன சந்தனப் பொட்டு. களையான முகம். சின்னஞ் சிறிய கறுப்புத் திராட்சைகள் மாதிரி கண்ணின் மணிகள் பளபளத்தன. சற்றே பழசான கால் சட்டையும், அரைக்கைச் சட்டையுமாய், குழந்தை முருகன் தற்கால உடையில் நிற்கிற மாதிரி இருந்தது. ஒரு கோலிக் குண்டு உருண்டு வந்த மாதிரி நின்று கொண்டிருந்தான்.

''என்னப்பா?'' என்றேன் கனிவுடன்.

''ஒண்ணுமில்லே..'' என்று அவன் தலையைச் சாய்த்து அழகாகச் சிரித்தான். அவனது இடுப்புயரத்திற்கும் சற்றே உயரமாக இருந்த 'சீட்'டின் மீது எம்பி அமர்ந்தான்.

'' 'சார்'னு கூப்பிட்டியா?''



''ஆமாம்.'' அரிசிப் பற்கள் மறுபடியும் பளிச்சிட்டன.

''என்ன வேணும்?''

''இதோ இந்த லாட்டரிச் சீட்டு ஒண்ணு வாங்குங்களேன்'' என்று இடது கையை முன்னே நீட்டினான்.

அப்போதுதான் அவனது வலது கக்கத்தில் இடுக்கி இருந்த ஒரு பெரிய பிளாஸ்டிக் பர்ஸ் மாதிரி இருந்த பையையும், பின்புறமாய் மறைத்துக் கொண்டிருந்து நீட்டிய இடது கையையும் பார்த்தேன். நாலைந்து லாட்டரி டிக்கெட்டுகள் பல வண்ணங்களில், விசிறி போலப் பிரித்து வைக்கப்பட்டிருந்தன.

அவனது அணுகுமுறை ஒரு பக்கம் மனத்துக்கு இதமாக இருந்தாலும், 'பாவம்' இந்தச் சின்ன வயதில் இப்படிச் சம்பாதிக்கிற நிலையா?' என்று வேதனையாக இருந்தது.

''ஏம்ப்பா நீ படிக்கலியா?''

''ஓ படிக்கிறேனே! இன்னிக்கு லீவு. ஞாயிற்றுக்கிழமை இல்லியா?'' என்று வெள்ளிமணி கிணுகிணுக்கிற மாதிரி பேசினான்.

''எத்தனாவது படிக்கிறே?''

''ஒண்ணாவது''

''ஏன் நீ இதெல்லாம் விக்கிறே?''

''அப்பா பொட்டிக் கடையிலே வச்சு அதோ அங்கே விக்கிறாரு. நான் லீவு நாளிலே பஸ்ஸிலே எல்லாம் ஏறி விப்பேன். ஒரு டிக்கெட் வாங்குங்க சார்!''— பழையபடி சிரிப்பு.

''நான் முன்னமேயே ஒண்ணு வாங்கிட்டேனே!''

''எல்லாரும் அப்படித்தான் சார் சொல்றாங்க... ஒரு டிக்கெட் எங்கிட்டே வாங்குங்க சார்!'' —முகத்தில் நம்பிக்கை குறையவில்லை.

''ஒரு டிக்கெட் வித்தா உனக்கு என்னப்பா கிடைக்கும்?''

''பத்து பைசா.''

''தினமும் எவ்வளவு கிடைக்கும்?''

''ஒரு ரூபா. ஒரு டிக்கெட் வாங்குங்க சார்.''

''நான்தான் சொன்னேனே —முன்னமேயே ஒண்ணு வாங்கிட்டேன்னு!''

''என் கையாலே ஒண்ணு வாங்குங்க சார்! என் 'கை' ராசியான கை சார்!'' என்று இடது கையில் இருந்த விசிறி போன்ற டிக்கெட்டுகளை என் நெஞ்சுக்கு நேரே நீட்டினான்.

''நீ இடது கையாலே கொடுக்கறியே — எனக்கு வேண்டாம்!'' என்றேன் வேடிக்கையாக.

அவன் பதறிப் போனவனாக டிக்கெட்டுகளை உடனே வலக் கரத்துக்கு மாற்றி, ''தப்பு! தப்பு! இதோ இந்தக் கையாலே தர்றேன். வாங்கிக்குங்க சார்!'' என்றான்.



எனக்குப் பரிதாபமாக இருந்தது. 'இந்தப் பிஞ்சு வயதில் பிழைப்பதற்காக எத்தனை சாகசம் வேண்டி இருக்கிறது!'

''ஒண்ணு செய் — இந்தா இந்தப் பத்து பைசாவை வச்சுக்கோ! எனக்கு டிக்கெட்டு வேண்டாம்'' என்று ஒரு பத்து பைசாவை எடுத்து அவனிடம் நீட்டினேன்.

இதைக் கேட்டதும், அவனது மலர்ச்சியான முகத்தின் பிரகாசம் சற்றே குறைந்தது. சற்று வாட்டம் தென்பட, ''எனக்கு இந்தக் காசு வேண்டாம் சார்! ஒரு டிக்கெட்டு எடுத்துக்குங்க சார்!'' என்று இறைஞ்சுகிற குரலில் சொன்னான்...

''ஏனப்பா! ஒரு டிக்கெட்டுக்கு உனக்குக் கிடைக்கிற காசைத்தான் நான் தர்றேனே! உனக்கு லாபம் தானே?''

''வேணும் சார்! எனக்கு இனுமா வேணும் சார்! ஒரு டிக்கெட்டு வாங்கிக்குங்க சார்!''

''பரவாயில்லேப்பா! இந்தக் காசை எடுத்துக்கோ! இன்னொருத்தரிடம் இந்த டிக்கெட்டை வித்தா இன்னொரு பத்து பைசா உனக்குக் கிடைக்குமே!'' என்றேன்.

''இனுமா யாருக்கிட்டேயும் எதையும் வாங்கிக்கக் கூடாதுன்னு எங்கப்பா கண்டிப்பா சொல்லியிருக்கார் சார்!

காக வேணும் — டிக்கெட் ஒண்ணு வாங்கிக்குங்க சார்!''

எனக்குச் சிலிர்த்தது. அவனை நிமிர்ந்து பார்த்தேன். அதே முல்லைச் சிரிப்பு; கண்களில் பிரகாசம். குழந்தை முருகனே தத்துவம் பேசுகிற மாதிரி தோற்றம்.

''அடேடே! அப்படியாவிஷயம்?சரி நீ உன்அப்பா சொன்னபடியேசெய்.இந்தா ஒரு ரூபா — நீயே உன் ராசிக் கையாலே ஒரு டிக்கெட் கொடு'' என்று அவனைப் பாராட்டிவிட்டு ஒரு ரூபாயை எடுத்து நீட்டினேன்.

அவனது முகத்தில் பழைய பிரகாசம் மீண்டும் பூரணச்சந்திரன் போல் ஆயிற்று. மகிழ்ச்சியோடு ஒரு டிக்கெட்டை எடுத்துப் பணிவுடன் கொடுத்துவிட்டு ஒரு ரூபாயை வாங்கிக் கொண்டான்.


''நன்றி சார்'' என்று சொல்லிச் சிரித்தபடியே நகர்ந்தான்.

நான் மன நிறைவோடு அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

சிரிப்புக் கொத்து







முகமூடித் திருடர்கள்

• எம். ஆர். ராஜன் •



ஊரெங்கும் இதே பேச்சு! கடைகளிலெல்லாம் பத்திரிகைகள், செய்தித் தாள்கள் விற்றுத் தீர்ந்தன. வானொலியை முடுக்கினால் இதே செய்தி. எங்கும் ஒரே பரபரப்பு! பஸ் ஸ்டாண்டு, சினிமாக் கொட்டகை, ரயிலடி, பலகாரக் கடைகள் எங்கு திரும்பினாலும் எங்கு கேட்டாலும் முகமூடிக் கொள்ளைக்காரர்களைப் பற்றிய பேச்சுத்தான்!

''என்னங்க இது அக்கிரமமாயிருக்குது. நட்ட நடு நிசியிலே கதவைத் தட்டுறானுகளாம். கதவைத் திறந்தால் மண்டையிலே ஒரே போடா போடுறானுகளாம்; திறக்காட்டி கதவுகளை வெட்டிச் சாய்ச்சுட்டு உள்ளே நுழைஞ்சு விளக்கை எல்லாம் அணைச்சுப்புட்டுக் கிடச்சதைச் சுருட்டிக்கிட்டு ஓடுறானுங்களாம். தொடர்ந்து நாலு நாளா இங்கொண்ணும் அங்கொண்ணுமா நடந்துக்கிட்டே இருக்குதேய்யா...''

''அதுக்குத்தான் வாத்தியாரய்யா, நம்ம நாட்டாண்மை இன்னிக்கு ரகசியக் கூட்டம் கூட்டியிருக்காரு. பொதுவா கிராமத்திலே ஒரு ஒத்துமை வேணும்? இந்த மாதிரித் திருட்டு, கொள்ளை, கொலையெல்லாம் நம்ம ஊருக்குள்ளே வராமத் தடுக்கத்தான் முன்னேற்பாடா, நாமெல்லாம் எச்சரிக்கையா இருக்கணும்னு ராத்திரி கூட்டியிருக்காரு.''

கோயில் பட்டாச்சாரி ராகவாச்சாரியார், வீட்டுக் கூடத்தில் ஊர்ப் பெரிய மனிதர்கள் கூடியாயிற்று.

கோயில் பட்டாச்சாரியார் ராகவாச்சாரியார் தலைமையில் ஆலோசனைக் கூட்ட துவங்கியது.

ராகவாச்சாரியார் பேசினார்:

''இது நமது கிராமத்து மக்களின் பாதுகாப்புக்கும், கோயில் பாதுகாப்புக்கும் மட்டுமில்லை. பட்டணத்திலே ஒதுக்குப் புறத்திலே புதுசு புதுசாத் தோன்றியிருக்கிற குடியிருப்புக்களிலே கொஞ்ச நாளா ஒரே கொள்ளையும், கொலையுமா இருக்குதாம். அங்கே கொள்ளை – திருட்டு செய்திருக்கிற முகமூடிக் கூட்டம் வெளி மாநிலத்திலேயிருந்து வந்தவங்களாகத்தான் இருக்கும்னு போலீஸ் அதிகாரிங்க பத்திரிகையிலே அறிக்கை கொடுத்திருக்காங்க. மேலும், அந்த முகமூடிக் கொள்ளைக்காரங்க மலை – காடு, தோப்பு போன்ற ஆள் நடமாட்டமில்லாத பகுதியிலே ஒதுங்கி – பதுங்கியிருக்கக் கூடும்னு சந்தேகப்படறாங்க. நம்ம சுற்றுப் பகுதியிலே புதுசா யாராவது சந்தேகத்துக்குரிய முறையிலே நடமாடினால், அவங்களைப் பிடிச்சு, விசாரிச்சுப் போலீசிலே ஒப்படைக்கிறது நம்ம கடமை. அது தேசத்துக்கு நாம செய்கிற பொதுச் சேவையும் ஆகும். அதற்கு உண்டான யோசனைகளைச் சொல்லும்படி நாட்டாண்மைக்காரங்களையும், மத்த பெரியவங்களையும் கேட்டுக்கறேன்.''

ஆளுக்கொரு யோசனை சொன்னார்கள்.

"ஒவ்வொருத்தர் வீட்டிலும் ஒரு விசில் வைத்திருக்கவேண்டும்" என்றார் ஒருவர். "ஒவ்வொருவரும் ஒரு டார்ச் விளக்கு வைத்துக் கொள்ள வேண்டும்" என்றார் இன்னொருவர். "இரவு நேரம் — அதிகாலை நேரங்களிலே நாம் சேர்ந்து போக வேண்டும்" என்றார் மற்றொருவர்.

எவ்வளவோ சிக்கலான வழக்குகளிலே தீர்ப்புச் சொன்ன சின்னான்— ஊரையே பயமுறுத்திக் கொண்டிருந்த புலியைப் பிடித்துவந்த சின்னானைப் பற்றி யாருக்குமே நினைவில்லை. கூட்டத்திற்குச் சின்னான் அழைக்கப்படவேயில்லை. இந்த நாட்டாண்மையார்கூட அல்லவா சின்னானை மறந்து விட்டார்!

ஒரு வாரம் சென்றது.

ஒருநாள் —

விடியற்காலை நான்கு மணி இருக்கும். சின்னான் பெருமாள் கோவிலின் பின்புற மதில் சுவர் ஓரமாய் ஏரிக்கரைக்குப் போய்க் கொண்டிருந்தான். சுவரின் பின்புறம் வந்ததும் கீழே எதையோ பார்த்து அப்படியே சிறிது நேரம் நின்றான். உடனே விருட்டென்று திரும்ப நடையைக் கட்டினான். நேராக நாட்டாண்மைக்காரர் வீட்டுக்குப் போய் அவரை எழுப்பினான்: அழைத்துக் கொண்டான். கோவில் பட்டாச்சாரியாரையும், நிர்வாக அதிகாரியையும் அழைத்தான்; நேராகக் கோயிலுக்குப் போனான். எல்லோருமாகக் கதவைத் திறந்து கோயில் முழுவதும் ஒவ்வொரு இடமாக விளக்குப் போட்டுப் பார்த்தார்கள். நல்ல காலம்; எல்லா இடங்களும் பூட்டியபடியே இருந்தன. நகை அறை, உக்கிராண அறை, மற்றும் இதர பூஜை, நிவேதன, திருமஞ்சன சாமான்கள், வெள்ளிப் பாத்திரங்கள் வைக்கப்படும் அறை எல்லாமே சாத்தியது சாத்தியபடியே இருந்தன.

சின்னான் எல்லோரையும் அழைத்துக் கொண்டு வெளியே வந்தான். கோயிலின் பின்புறம் மதில் சுவர் ஓரம் அழைத்துச் சென்று தான் கண்ட பொருள்களாகிய சில பீடித் துண்டுகள், அணைந்த தீக்குச்சிகள்— நிறையக் காலடி அடையாளங்களைக் காட்டினான். இரகசியமாக அவர்களிடம் ஏதோ சொன்னான். கீழ்வானம் வெளுப்பதற்குள்ளாகவே ஊர் திரும்பி விட்டார்கள்.

அன்றிரவு—

ஒன்றரை மணி இருக்கும். மல்லிகா டூரிங் டாக்கீசில் படம் முடிந்து மக்கள் வீடு திரும்பி விட்டார்கள். சந்தடி அடங்கிய நேரம். பெருமாள்



உடைகளைப் பாதுகாக்க...

1. உடைகளை மடித்து வைக்கும் போது ஒரே இடத்தில் திரும்பத் திரும்ப மடிக்காமல், சற்றுத் தள்ளி மடிக்க வேண்டும்.
2. அழுக்கு சேர விடக் கூடாது.
3. அடிக்கடி சலவைக்குப் போட்டால், துணி நீடித்து உழைக்காது.
4. பெட்டிக்குள்ளே வைத்திருக்கும் துணிகளுக்கு அந்துருண்டை போட்டு வைக்கவும்.
5. பாலியஸ்டர், சில்க் சட்டையாயிருந்தால், உள்ளே பனியன் அணிந்த பின்பே அணிய வேண்டும்.
6. சிறு கிழிசல் என்றாலும், உடனே தைத்துவிட்டால் அதிகம் கிழியாது.
7. கால் இஞ்ச் ஊளாகவே தைத்துக் கொண்டால் வளரும் பிள்ளைகளுக்கு நல்லது.
8. பாலியஸ்டர் துணிகளைப் பிழியக் கூடாது.
9. துணிகளை அதிக நேரம் தண்ணீரிலோ, சோப்பு நீரிலோ ஊற வைக்கக் கூடாது.
10. கலர்த்துணிகளை வெயிலில் போட்டால், நிறம் வெளுத்து விடும். வெள்ளை நிறத் துணிகளை மட்டும் வெயிலில் காயப்போடலாம்.

—ஆர். நாச்சியப்பன், (75) திருச்சி-17



கோயிலின் பெரிய மணி 'டாண், டாண்' என்று பல தடவை ஒலித்தது.

ஊர்ப் பெரியவர்கள் எல்லாம் ஓடோடியும் வந்து தர்மகர்த்தாவையும் பட்டாச்சாரியாரையும் தேடினார்கள். பெருமாள் கோவில் மணி திடீரென்று அர்த்த ராத்திரியில் ஒலிப்பானேன்? அதை ஒலித்தது யார்? ஏன் அடிக்க வேண்டும்? மணியை அடித்ததும் ஊர் ஜனங்கள் என்னவோ ஏதோ என்று கோவிலுக்கு ஓடி வரும்போது வீடுகளில் புகுந்து கொள்ளையடிக்கவா? யாருக்கும் எதுவும் புரியவில்லை. எல்லோருமாக ஓடினார்கள். பட்டாச்சாரியார், தர்மகர்த்தா மற்றும் கோயில் பணியாட்களும் உடன் வந்தார்கள்.

கோயிலின் உள்ளே பெரிய மணி அருகே கதவின் வெளிப்புறம் பூட்டு உடைக்கப்பட்டுக் கீழே சிதறிக் கிடந்தது. ஆனால், வெளிப்புறம் தாழ்ப்பாள் போடப்பட்டிருந்தது. சின்னான் அங்கே நின்று கொண்டிருந்தான். எல்லோரும் சின்னானையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''என்ன காரியம் செய்துட்டேப்பா? கோயில் கதவை உடைத்துத் திருடப் போயிட்டியே!'' என்றான் ஒரு முரட்டு ஆசாமி...

''என்னங்க இப்படி யோசனையில்லாமே பேசறீங்க. சின்னான் திருடப் போனதாகவே வச்சுப்போம். அப்படி யாரு தொடர்ந்து மணி அடிச்சது யாராம்? இந்தக் கோயில் உள்ளே இதுவரை அவன் மட்டும்தானே இருந்தான்? கொஞ்சம் யோசனை பண்ண வேண்டாமா?''

பட்டாச்சாரியார் இப்படிக் கேட்டதும், எல்லோரும் யோசிக்க ஆரம்பித்தார்கள். பட்டாச்சாரியார் மேலும் சொன்னார்:

''உள்ளுக்குள்ளே ஒரு திருடன் மாட்டிக்கிட்டிருக்கான். அவன்தான் பட்டணத்திலே கொள்ளையடிச்ச முகமூடி. அவனை உள்ளே வச்சுத் தாழ்ப்பா போட்டுக்கிட்டு நம்ம சின்னான்தான் நம்ம எல்லோரையும் அழைக்கிறதுக்காக மணி அடிச்சிருக்கான்.''

''என்ன பட்டரே... என்ன புதிசாய்ப் புதிர் போடறீர்? — உம்ம ஞான திருஷ்டியிலே தெரிந்ததோ?''— என்று நாராயணசாமி கிண்டலாகக் கேட்டார்.

இதற்குள் கோயில் வாசலில் போலீஸ் ஜீப் வந்து நின்றது. நிறைய போலீஸ்காரர்கள், இன்ஸ்பெக்டர்கள் இறங்கினர். மூன்று முகமூடித் திருடர்கள் கைகள் கட்டப்பட்டு ஜீப்பிலிருந்து இறக்கப் பட்டார்கள். இதற்குள் சின்னான் வெளிப்புறம் தாளிட்டிருந்த கதவைத் திறந்துகொண்டு உள்ளே போய் — நான்காவது முகமூடித் திருடனையும் பிடித்து வந்தான்.

''சபாஷ் சின்னான்! ரொம்ப அழகாகச் சாக்கச்சிதமாக முகமூடிகளைப் பிடிச்சுக் கொடுத்துட்டே. பட்டணத்தையே ஒரு கலக்குக் கலக்கி, போலீசுக்குச் சவாலா யிருந்த இவங்களைப் பிடிச்சுக் கொடுத்ததுக்கு எங்கள் நன்றி. உன்னுடைய இந்த வீரச் செயலுக்கு உனக்கு எங்கள் பாராட்டும் வெகுமதியும் உண்டு'' என்றார் இன்ஸ்பெக்டர்.

எப்படி முகமூடியைப் பிடிக்க முடிந்தது என்பதை நாட்டாண்மைக்காரரே ஊர் மக்களுக்குத் தெரிவித்தார்.

''ஒருநாள் சின்னான் விடிகாலே ஏரிக் கரைக்குப் போகையிலே கோயிலின் பின்புறம் மதிற் சுவரோரம் சில பீடித் துண்டுகளும் எரிந்து போன தீக்குச்சிகளும் கிடந்ததையும், அங்கே நிறையக் காலடிகள் பதிந்திருந்ததையும் பார்த்தானும். எங்களைக் கூட்டிக்கிட்டுப் போய்க் காட்டினான். கோயில் பட்டாச்சாரியார், தர்மகர்த்தா உட்பட நாங்கள் நான்கு பேரும் போய் அன்னைக்கே கோயில் முழுவதும் சுற்றிப் பார்த்தோம். நல்ல காலம்; நஷ்டம் ஒண்ணும் ஏற்படல்லே. ஆனால் — கோயிலைக் கொள்ளையடிக்க முயற்சி நடக்குதுன்னு தெரிஞ்சுக்கிட்டோம்.

''மேலும் சின்னான் அவன் வழக்கமாக மாடுகளை மேய்க்கிற மாந்தோப்பு ஓரமா யாரோ சில வெளி மாநில-வேறு பாஷை பேசற ஆசாமிகள் காலை வேளையிலே மட்டும் வந்து நாடோடிகள் மாதிரி நடமாடறதாச் சொன்னான். அந்த ஆசாமிகள் அந்த மரத்தடியில் புகைத்துப் போட்டிருந்த பீடித் துண்டுகளும் — கோயில் பின்னால் கிடந்தவையும் ஒரே மாதிரியாக இருந்ததும், மேலும் எங்க சந்தேகத்தை அதிகப்படுத்திச்சு. அதனாலே நாங்கள் வெளியே விஷயம் பரவிப்போயிட்டால், திருடங்க எச்சரிக்கை யாயிடுவாங்களேன்னு — ரகசியமாவே வச்சுக் கிட்டுப் போலீசிலே சொல்லி ஊர் எல்லையிலே பலத்த காவல் போடச் சொன்னோம். மேலும், சின்னான் கோயிலிலே இரவில் தங்கி, அங்கு திருடர்கள் வந்தால், உடனே பெரிய மணியை அடிப்பதாகவும், அப்போது எங்களை வரச் சொல்லியும் சொன்னான். கோயிலுக்கு வெளியே காவல் காத்து நின்னுக்கிட்டிருந்த திருடனுங்க மணி ஓசை கேட்டதும், தப்பி ஓடப் பார்த்த போது, ஊர் எல்லையில் தயாராகக் காவல் காத்துக்கிட்டிருந்த போலீஸ்காரங்க பிடிச்சுக்கிட்டாங்க. கோயில் பூட்டை உடைச்சு உள்ளே திருடப் போனவன் உள்ளே போனதும் லபக்கென்று சின்னான் வெளியே தாழ்ப்பாள் போட்டுட்டான். உள்ளே போனவன் வெளியே தப்பிப் போக வழியில்லாமல் மாட்டிக்கிட்டான். இது தான் நடந்த விஷயம்'' என்றார் நாட்டாண்மை.

எல்லோரும் ஆச்சரியத்துடன் சின்னானைப் பார்த்தார்கள். சின்னானுக்குப் பாராட்டுக்களும், வெகுமதிகளும் குவிந்தன. அதேசமயம், நான்காவது திருடனையும் சேர்த்து நான்கு திருடர்களையும் பிடித்து விட்ட கர்வத்தில் ஜீப் வெகுவேகமாகப் பறந்து சென்றது!



ஓடி விளையாடு.. மாமி..

விமலா ரகுநாதன்

பக்கத்து வீட்டில் புதிதாகக் குடி வந்துவிட்டார்கள். அமளி துமளி சப்தங்கள். காற்றுட வாசல் வராந் தாவில் நாற்காலியைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தேன்.

லாரியிலிருந்து சாமான்களை இறக் கிய வண்ணம் இருந்தனர். அதை மேற்பார்வை பார்த்துக் கொண் டிருந்த அந்தப் பெண்மணியைப் பாடாய்ப் படுத்திக் கொண்டிருந்தான் அந்தச் சிறுவன்.

அப்பப்பா... என்ன விஷமம்!

ஆட்கள் சாமான்களை எடுத்துப் போகும் சமயம் குறுக்கே அங்கும் இங்கும் ஓடி அமர்க்களம் செய்து கொண்டிருந்த அந்தச் சிறுவன், தன் அம்மாவுக்கு அடங்கக் கூடியவனாக எனக்குத் தோன்றவில்லை.'

எப்படி இருந்தால் என்ன? என் வம்புக்கு வராமல் இருந்தால் போதும் என்று தோன்றியது.

மாலை மயங்கும் நேரம். ஒருவழி யாக, சாமான்களை இறக்கிவிட்டுப் புறப் பட்டது லாரி. அந்தப் பெண்மணி நட்புணர்வுடன் என்னைப்பார்த்துவிட்டு, குறும்பு செய்த சிறுவனுக்கு நாலு அடி கொடுத்துத் தரதரவென்று இழுத்துக் கொண்டு சென்றுள். அவரவருக்கு ஆயிரம் வேலைகள் இருக்கும்!

என் வீட்டு வாசலில் பெரிய டென்னிஸ் கோர்ட் கட்டியிருந்தார் என் கணவர். தினமும் சாயங்கால மானுல், தெரிந்தவர் வீட்டுப் பையன்கள் எல்லாம் அங்கு வந்து விளையாடுவது வழக்கம். நான் வாசலில் உட்கார்ந்து அவர்கள் ஆடுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பேன். சில சமயம் வெய்யில் எக்கச்சக்கமாக இருந்தால், குளிர்பானம் தயாரித்து, வராந்தாவில் போடப்பட்டிருந்த மேஜைமேல் வைத்துவிட்டால் அவ ரவர் எடுத்துச்சாப்பிட்டுவிட்டு என் னுடன் ஓரிரு வார்த்தைகள் பேசு வதும் உண்டு.

இரண்டு மூன்று நாட்கள், பக்கத்து வீட்டுச் சிறுவனின் தலை, காம்பவுண்டுச் சுவரின் அந்தப் பக்கம் தெரிந்தது. சிலசமயம் அவர்கள் விளையாட்டையே ஊன்றிப் பார்த்துவிட்டுச் சிரித்துக் கையை உயர்த்துவான்.

ஒருநாள், அவர்கள் விளையாட்டின் நடுவில் கல் ஒன்றை எறிந்துவிட்டு அவர்களிடம் திட்டு வாங்கி ஓடியதைக் கொஞ்சம் கவலையுடன் பார்த்தேன்.

என்ன துடுக்குத்தனம்! வீட்டினுள் அவன் அம்மாவின் குரல் ஓங்கி ஒலித்தது.

அன்று மாலை லேசாக மழைத் தூறல் இருந்ததால் கோர்ட்டில் விளை யாட யாரும் வரவில்லை. வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. காம்பவுண்டுச் சுவர் ஓரமாக வளர்ந் திருந்த கொய்யாமரத்தின் மேலே தேன்சிட்டுகள் உற்சாகமாகக் கத்திக் கொண்டிருந்தன. யதேச்சையாகச் சுவ ரின் பக்கம் என்னுடைய பார்வை திரும்பியது.

அந்தச் சிறுவன்! மெதுவாகச் சுவ ரின்மேல் ஏறி உட்கார்ந்து கொண் டான்.

''ஓடி விளையாடு மாமி-நீ
ஒய்ந்திருக்க லாகாது... மாமி.''

அவன் பாடியதைக் கேட்டு எனக்கு ஒரு பக்கம் சிரிப்பு வந்தாலும், மறு பக்கம் ஆத்திரமும், கோபமும் பொத்துக்கொண்டு வந்தன. மிரட்ட எண்ணி வாயைத் திறந்தபோது,

''கூடி விளையாடு மாமி... இந்தக் குழந்தையை வையாதே, மாமி...'' என்று அவன் சுவரின் மேல் நின்று இடுப் பில் கைவைத்து ஆடியபடி பாடினுன். என்மனம் மெதுவாகத் துவண்டது.

''சுரேஷ்...'' உள்ளிருந்து அவன் தாயின் குரலைக் கேட்டவுடனேயே எனக்கு ஒருமுறை அழகு காட்டிவிட்டு, அந்தப் பக்கமாகப் 'பொத்' என்று குதித்து ஓட்டம் பிடித்தான்.

நான் சாதாரணமாகவே யாரிடமும் எந்த வம்பும் வைத்துக் கொள்வ தில்லை. அக்கம் பக்கத்துச் சிறுவர் களிடம் அன்பாகப் பழகினுலும், வீட் டுக்கு வரும் பெண்களுடன் இணக்க மாக நடந்து கொண்டாலும், அனு வசியமாக யார் வீட்டுக்கும் போவ தில்லை. ஆனுல் குழந்தைகள் என்ருல் எனக்கு உயிர். நான் பழகிய குழந் தைகளும் என்னிடம் ஒட்டுதலாக இருப்பார்கள். ஆனுல், இந்த சுரேஷ்..

என்ன பொல்லாத்தனம்! அதே சமயம் அறிவும் உண்டு என்பந்த

ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும்... அடுத்த நாள் சாயந்திரமாக, அவன் தலை, வாசல் கேட் பக்கம் தெரிந்தது. ரொம்ப அலட்சியமாக, டென்னிஸ் விளையாட்டையும் என்னையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடன் பழக ஆசை இருந்தாலும், அவன் குறும்புத்தனம் நினைவுக்கு வர மௌனமாக அமர்ந்திருந்தேன்.

விளையாடியவர்கள், குளிர்பானம் பருகும் போது, ஏதோ ஓர் உந்துதலில் அவனையும் வாவென்று அழைத்தேன். அவன் மெதுவாக உள்ளே நுழைந்து, நான் கொடுத்த பானத்தைப் பருகினான். போகிற போக்கில், பாக்கெட்டில் வைத்திருந்த ஒரு கொய்யாப் பிஞ்சை என் முன் எறிந்துவிட்டு, என்னைப் பார்த்துக் கொண்டே, வேண்டுமென்றே நொண்டி நொண்டி நடந்து சென்றான்.

அவன் அன்னை, சுரேஷ் ஸ்கூலுக்குப் போயிருந்த சமயம், ஒருநாள் என் வீட்டுக்கு வந்திருந்தாள். வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தாள். அதில் பாதி சுரேஷின் பொல்லாத்தனம் பற்றித் தான், அவள் கவலை எனக்குப் புரிந்த போது, எனக்கும் வருத்தம் ஏற்பட்டது.

அடுத்து ஒரு வாரம் போல் அவனைக் காணவில்லை. அதற்குப்பின் நாலைந்து நாட்கள் கழித்து, எனக்கு அடுத்த வீட்டிலிருந்து அழைப்பு வந்தது.

அன்று மாலை, வழக்கத்திற்கு விரோதமாக நான் அவர்கள் வீட்டுக்குச் சென்றேன்.


படுக்கை அறையில் காற்றோட்டமாக ஜன்னல் கதவுகள் திறந்திருக்க, கட்டிலில் சுரேஷ் படுத்திருந்தான். அருகில் கவலையுடன் அவன் அம்மா இருந்தாள். என்னைக் கண்டதும் சுரேஷ், புதிய முறையில் கண்கள் அகலச் சிரித்தான். புன்முறுவலுடன் வரவேற்ற அவன் அம்மாவின் அருகில் நான் மெதுவாகச் சென்று அமர்ந்துகொண்டேன்.

''வாருங்கள்! சுரேஷ், ஒரே பிடிவாதமாக இந்த நேரமே உங்களைப் பார்க்க வேண்டுமென்று...''

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அவன் உடல்நிலையைப் பற்றி விசாரித்தேன். காலில் விளையாட்டுப் போக்கில் ஏதோ முள் தைத்ததாம். அதைச் சரியாகக் கவனிக்காமல் விட்டதால் சீழ் பிடித்ததாம். அதனால், ஜுரம் வந்து நடக்க முடியாமல் இருந்ததாம். இதையெல்லாம் அவன் அம்மா விவரித்த போது, பாவமாக இருந்தது.

''இரண்டு நாட்களாக ஒரே அழுகை! உங்களைப் பார்க்க வேண்டுமாம்...''

சுரேஷ் தளர்ந்த முகத்துடன் கண்ணீர் மல்க என்னைப் பார்த்தான். பிறகு வெட்கமும் சந்தோஷமும் போட்டியிட, தயாராய் வைத்திருந்த சாக்கலேட் டப்பாவை நீட்டினான்.



நான் மறுப்பின்றி வாங்கிக் கொண்டேன்.

பிறகு அவன் அம்மா என்னை முன் அறைக்கு அழைத்துச் சென்றாள்.

சுரேஷின் மனமாற்றத்திற்குக் காரணம் எனக்கு மெல்லப் புரிந்தது. அதில் அவன் அன்னையின் பங்கும் இருந்திருக்கிறது.

காலில் முள் தைத்ததன் விளைவாக, டாக்டர் அவனைப் பரிசோதித்திருக்கிறார். அதன் பிறகு அவன் அம்மா, ''நீ கால் ஊனமானவர்களையெல்லாம் கேலி செய்தாயல்லவா? அதனால், டாக்டர் உன் காலையே எடுக்கப் போகிறார். நீ நொண்டியாகி விடுவாய்'' என்று விளையாட்டாகப் பயமுறுத்தி இருக்கிறாள்! அவன் அதை உண்மையென்று நம்பி மிகவும் பயந்துவிட்டான்! அவன் சுபாவமே அடியோடு மாறிவிட்டது.

இன்று அவன் என் செல்லப்பிள்ளை! ஸ்கூல் போகும் நேரம் தவிர, மற்ற நேரமெல்லாம் என்னையே சுற்றிச் சுற்றி வருகிறான். சிலசமயம் அவன் மெதுவாக என் கையைப் பிடித்துத் தோட்டத்துப் பக்கமெல்லாம் அழைத்துப் போவான். அவன் பெரியவனான பிறகு ஒரு டாக்டராகி, என்னைப் போல் கால் ஊனம் உள்ளவர்களையெல்லாம் சரி ஆக்கப் போகிறானாம்! உணர்ச்சி பொங்க, கையுயர்த்தி அவன் பேசும் போது, நான் மனம் நிறைந்து அவனுக்கு முத்தமாரி பொழிகிறேன்! உண்மையில், பிஞ்சு உள்ளம்தான் எத்தனை விதங்களில் உரு மாறுகிறது! வேடிக்கையாக இல்லை!



பட்டமோ பட்டம்!

ஜப்பானில் பட்டம் விடுவது ஒரு முக்கிய பொழுதுபோக்கு. வயதானவர்களும் விரும்பும் விளையாட்டு!

விளையாட்டு மட்டுமல்ல: சமயச் சடங்காகவும் சிலர் பட்டம் விடுகிறார்கள். அந்த நாட்டின் தனிவகை மூங்கில் குச்சிகளும், சிறப்பான தாளும் கொண்டு நல்ல பட்டங்கள் தயாரிக்க முடிகிறது.

வட்டமான பட்டம், சதுரமான பட்டம், நீண்ட பட்டம், ஆறுகோணப் பட்டம், தோரணப் பட்டம், ராட்சஸப் பட்டம், தேவதைப் பட்டம், கார்ட்டூன் பட்டம் என்று எத்தனையோ வகைப் பட்டங்கள்! எல்லாவற்றிலும் வண்ண வண்ணச் சித்திரங்கள்! ஐம்பது அடி நீளம், ஐம்பது அடி அகலம்கொண்ட மிகப் பெரிய்...ய பட்டம்கூட எப்போதாவது தயாரிப்பார்களாம்!

வானத்தில் பட்டம் பறக்கும் போது எப்படித் தோன்றுகிறது? பூமியையும் வானுலகையும் பட்டம் இணைக்கிறது. எனவே, பட்டத்தில் துதிப் பாடல்களை எழுதி வானத்துத் தேவதைகளிடம் ஜப்பானியக் குடியானவர்கள் வேண்டிக் கொள்வதுண்டாம், 'நல்ல மழை பொழிய வேண்டும்: விளைச்சல் வர வேண்டும்' என்று.

ஜப்பானியப் புத்தாண்டு சமயத்தில் பட்டம் விடுவதற்கு ஏற்றவாறு காற்று வீசும். அப்போது பலவித வடிவங்களில், பலவகை வண்ணச் சித்திரங்களுடன் நாட்டிலும் நகரிலும் பட்டம் விடுவார்கள். அப்போது, வானத்திலே ஆடி வரும் சித்திரக் காட்சி எப்படி இருக்கும்! கற்பனை செய்து பாருங்கள்!

—சீனு.

புகைப்பட உதவி: ஜப்பானிய தகவல் நிலையம், புது டில்லி.



பூக்கள் பேசுகின்றன!

வ.தேனப்பன்

பூங்காவிற்குள் ஓர் அம்மா, தன் குழந்தையைத் தூக்கிக்கொண்டு வந்தாள்.

அங்கு நின்ற ஒருவர், ''குழந்தை மிகவும் அழகாக இருக்கிறதே! ஆப்பிள் கன்னம்! திராட்சைக் கண்கள்! மல்கோவா உடம்பு! ஆஹா! எவ்வளவு அழகான குழந்தை! கொஞ்ச நேரம் உங்கள் குழந்தையைத் தாருங்களேன். வைத்திருந்து முத்தம் கொஞ்சிவிட்டுத் தந்துவிடுகிறேன்!'' என்று கெஞ்சினார்.

அந்த அம்மாள் குழந்தையை அவரிடம் கொடுக்கச் சம்மதிக்காமல் திரும்பிப் போய் விட்டாள்.

கொஞ்ச தூரம் சென்றதும்தான், வந்த வேலை நினைவுக்கு வந்தது. பூப் பறிப்பதற்குத்தான் அந்த அம்மாள் வந்தாள்.

பத்து ரோஜாப் பூக்களையும், கொஞ்சம் முல்லைப் பூக்களையும் பறித்துக் கூடையில் போட்டுக்கொண்டு பூஜை அறைக்குச் சென்றாள்.

வெகு நேரம் அழுகையை அடக்கிக் கொண்டிருந்த முல்லைப் பூவால், மேலும் அழுகையை அடக்கிக்கொள்ள முடியவில்லை. பன்னீர்த் துளிகளைக் கண்ணீர்த் துளிகளாகச் சிந்தி அழ ஆரம்பித்தது.

பக்கத்திலிருந்த ரோஜாப்பூ, ''முல்லைப் பூவே, நீ ஏன் அழுகிறாய்?'' என்று கேட்டது.

''வேறு என்ன செய்வது? இந்த மனிதர்கள் செய்வது எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை'' என்று முகத்தைத் திருப்பிக் கொண்டது முல்லை.

''ரொம்ப பிகு பண்ணாமல் சொல். மனிதர்கள் என்ன கெடுதல் செய்துவிட்டார்கள்?'' என்று ஆர்வமாகக் கேட்டது ரோஜா.


''அவர்கள் தங்கள் குழந்தையைத் தாங்களே வைத்துக்கொண்டு அழகு பார்க்கிறார்கள். மற்றவர்கள் ஆசையாகக் கேட்டாலும், சிறிது நேரத்திற்குக்கூடக் குழந்தையைக் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். ஆனால், நம்மை மட்டும் நம் தாயான செடி கொடிகளிலிருந்து பறித்துவிடுகிறார்கள். இது நியாயமா?'' என்று விசும்பிக் கொண்டே கேட்டது முல்லை.

''வேறு என்ன செய்ய வேண்டும் என்று நீ நினைக்கிறாய்?'' என்று பரிவோடு கேட்டது ரோஜா.

''பூக்களைச் செடி கொடிகளிலிருந்து பறிக்கக் கூடாது என்று சட்டம் போட வேண்டும். பூக்கள் செடியுடன்தான் இருக்க வேண்டும்!''

''முல்லையே! மரம், பழம் பழுக்கிறது. அதைத்தானே வைத்துக்கொள்கிறதா? கார்மேகம், கஷ்டப்பட்டுக் கடலிலிருந்து தண்ணீரை எடுத்துக் கொண்டு வருகிறதே, அதைத் தானே குடித்து விடுகிறதா? பிறருக்குத் தானே கொடுக்கிறது? அது போலத்தான் நாமும். பிறருக்கு அழகூட்டுவதற்காகவும், மணம் கொடுப்பதற்காகவும்தானே பூமியில் வந்து பூத்திருக்கிறோம்?...''

''ஆமாம்! இந்தப் பொல்லாத 'தியாகி' பட்டத்தைத் தூக்கிக்



குப்பையிலே போடு! இதனால் என்ன பயன்?'' என்று சலித்துக் கொண்டது முல்லை.

''ஏய்! வார்த்தையை அளந்து பேசு. உன் மூதாதையரின் கதை தெரியுமா? ஒரு முல்லைக் கொடிக்காகப் பாரி என்ற அரசன், அது பற்றிப் படருவதற்காகத் தன் தேரையே பரிசாகக் கொடுத்திருக்கிறான்! முல்லைக்கு உதவியதால் பாரியின் புகழ் உயர்ந்தது. வள்ளல் என்று பெயர் பெற்றான். அதுபோல் நாமும் மனிதர்களுக்கு உதவுவதால்தான் நமக்குப் புகழ் கிடைக்கிறது!'' என்றது ரோஜா.


''ம்... யார் நம்மைப் புகழ்கிறார்கள்?'' என்று ஈன ஸ்வரத்தில் கேட்டது முல்லை.

''என்ன, இப்படிக் கேட்டுவிட்டாய்? ரோஜாப்பூ, செடியிலேயே இருந்திருந்தால், இன்றைக்கு யார் அதைப் புகழப் போகிறார்கள்? மதிக்கப் போகிறார்கள்? ஒருவரும் தீண்டக்கூட மாட்டார்கள். ஆனால், ஜவஹர்லால் நேரு தினமும் தமது சட்டையில் ஒரு ரோஜாப்பூவைச் சூடிக் கொண்டதால், நேரு மாமாவை நினைக்கும் போதெல்லாம் ரோஜாவை நினைக்கிறார்கள். ரோஜாவைப் பார்க்கும் போதெல்லாம் நேரு நினைவு வருகிறது என்று சொல்கிறார்கள். இப்படிப் பெரும் புகழைப் பெறுவதற்காக நாம் செடியை விட்டுப் பிரிந்தாலும் கவலையில்லை....! இன்னொன்றையும் நீ நினைத்துப் பார்க்க வேண்டும். மனிதர்கள் நம்மைப் பறிப்பதனால் நாம் பயன்படுகிறோம். அவர்கள் பறிக்காமலே விட்டால், நாம் என்ன ஆவோம்? மண்ணிலே விழுந்து வாடி வதங்கி யாருக்கும் பயனில்லாமல் போவோம்'' என்றது ரோஜா.

முல்லை சிறிது நேரம் மௌனமாயிருந்தது. பிறகு, ''சரிதான். என்னைக் கொடியிலிருந்து பிரித்தாலும், நான் எத்தனை பேர் கூந்தலுக்கு மணம் தருவதாகக் கூறுகிறார்கள்? உண்மையில் அது நமக்குப் புகழ்தானே?'' என்று ஒத்துக்கொண்டது முல்லை.

''பூக்களுக்கு ம் சரி, மற்றவைகளுக்கும் சரி, நாம் பிறருக்கு உதவுவதற்காகத்தான் பூமியில் தோன்றியிருக்கிறோம் என்ற நினைப்பு வர வேண்டும். இந்த நினைப்பால், நமது உதவி அனைவருக்கும் கிடைக்கும். அதனால் அவர்கள் நம்மை நன்றாக வளர்ப்பார்கள் அல்லவா? நாம் ஒருவருக்கு உதவினால் நமக்கும் பலர் உதவுவார்கள் என்பது. இதனால் புரிகிறதா? நாம் வாழ்வது பிறருக்கு உதவி செய்வதற்காகத்தான்'' என்று கூறிச் சிரித்தது ரோஜா.

''நீ சொல்வது நூற்றுக்கு நூறு உண்மைதான்!'' என்று சந்தோஷமாகத் தலையாட்டியது முல்லை.



ஹெலிகாப்டரில் போவது ஏன்?


சமீபத்தில் வெள்ளத்தால் தமிழ்நாட்டில் பெரும் சேதம் ஏற்பட்டது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை முதல் அமைச்சர் ஹெலிகாப்டரில் சென்று பார்த்து வந்தார்.

ஆகாய விமானத்தில் ஏன் அவர் போகவில்லை?

விமானங்கள் போக முடியாத பகுதிக்குக் கூட ஹெலிகாப்டரால் செல்ல முடியும். விமானத்திற்கு ஒரு நீண்ட ஓடுபாதை தேவைப்படும். ஆனால், ஹெலிகாப்டர் இறங்க ஒரு சிறு இடம் போதும் தரையிலிருந்து நேராக மேலே கிளம்பவும், மேலேயிருந்து நேராகத் தரையில் இறங்கவும் ஹெலிகாப்டரால் முடியும். இவை மட்டுமா? முன்னோக்கிப் பறப்பதோடு, பின்னோக்கியும், பக்கவாட்டிலும்கூட பறக்கும்! ஆகாயத்தில் நிலையாக நிற்கவும் அதனால் முடியும்!

இதனால்தான் ஹெலிகாப்டரை விமானங்கள் செல்ல முடியாத மலைகளுக்கும், தீவுகளுக்கும், வெள்ளம், பூகம்பம் முதலியவற்றால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கும் செல்வதற்குப் பயன்படுத்துகிறார்கள்.

முயலுக்குக் கிடைத்த பொற்காசுகள்!



பொன்மலை சந்துரு

மரப்பொந்திற்குள் வசித்து வந்த ஒரு முயல் வெளியே தலையை நீட்டிப் பார்த்தது. அதன் சிவந்த கண்களுக்கு எதிரே தங்க நாணயம் ஒன்று பிரகாசித்துக் கொண்டிருந்தது தெரிந்தது. ஒரே துள்ளாகத் துள்ளி அந்தத் தங்க நாணயத்தை எடுத்துக்கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தது. தன்னை யாரும் பார்க்கவில்லையென்ற மன நிம்மதியுடன் கையில் மறைத்து வைத்திருந்த தங்க நாணயத்தைத் திருப்பித் திருப்பிப் பார்த்து மனம் மகிழ்ந்தது.

'அந்தத் தங்க நாணயம் இங்கே எப்படி வந்தது? இதேபோல் வேறு தங்க நாணயம் வேறு எங்கேயாவது கிடைக்குமா?' என்ற நப்பாசையில் மெதுவாக நடை போட்டது.

சிறிது தூரம் சென்றதும் ஒரு பழைய சுருக்குப்பை கீழே கிடந்ததைப் பார்த்தது. தனக்குக் கிடைத்ததைப் போல் தங்க நாணயம் இருக்குமோ என்ற ஆசையில் சுருக்குப் பையை அவிழ்த்துப் பைக்குள் கையை விட்டுப் பார்த்தது. காய்ந்த வெற்றிலையும் ஒரு துண்டுப் பாக்குமே அதில் இருந்ததைக் கண்டு ஏமாற்றமடைந்த முயல், வழியில் எடுத்த தங்க நாணயத்தை அந்தச் சுருக்குப் பைக்குள் போட்டுப் பத்திரப்படுத்திக்கொண்டு, பையுடன் மறுபடியும் அந்தப் பக்கமாகச் சென்றது. அப்பொழுது அதற்கு எதிரே அணில் ஒன்று வருவதைக் கண்டதும் பையை மறைத்துக்கொண்டு, ''என்ன அணில் அண்ணா? மிகவும் சந்தோஷமாக வருகிறாயே, என்ன விஷயம்?'' என்று கேட்டது முயல்.

''ஆமாம் முயல் அண்ணா, இன்று ஒரு மனிதனுக்கு நான் உதவி செய்தேன். அந்த மனிதன் என்னை மனமார வாழ்த்தினான். அவன் வாழ்த்தியதை நினைக்கும்பொழுது எனக்கு ஆனந்தமாக இருக்கிறது'' என்றது அணில்.

''அப்படி நீ என்ன உதவி செய்தாய்?'' என்று விசாரித்தது முயல்.

காட்டு வழியாக ஊரை நோக்கிச் சென்ற அந்த மனிதன், தன் சுருக்குப் பையில் இரண்டு தங்க நாணயங்களை வைத்திருந்தானாம். அந்தச் சுருக்குப் பையில் வெற்றிலை பாக்கும் வைத்திருந்திருக்கிறான். வெற்றிலை போடும் அவசரத்தில் அந்தத் தங்க நாணயங்கள் எப்படியோ கீழே விழுந்துவிட்டன. அவன் தங்க நாணயங்களைத் தவற விட்டதை அறிந்ததும் இந்தப் பக்கம் தேடிக்கொண்டு வந்தான். அவன் முகவாட்டத்தை அறிந்து விவரத்தைக் கேட்டேன். பிறகு, நான் வழியில் எடுத்த ஒரு தங்க நாணயத்தை அவனிடம் கொடுத்தேன். அவனுக்கு ரொம்ப சந்தோஷம். ஆனால், இன்னொரு தங்க நாணயம் மட்டும் கிடைக்கவில்லை. நீ வரும்



ஆச்சரியம் தான்

ராமு: டேய் ரங்கா, இவர் தாண்டா பூரியிலிருந்து வந்த மாமா!

ரங்கா: அடே, நாமெல்லாம் அம்மாவிடமிருந்து வந்தோம். இவரு பூரியிலிருந்து வந்தவரா! ஆச்சரியம்தான்!

—எஸ். எம். சரவணன்

போது வழியில் பார்த்தாயா?'', என்று கேட்டது அணில்.

''நானு! பார்க்கவே இல்லையே!'' என்று சுருக்குப் பையைப் பின் பக்கமாக மறைத்துக் கொண்டவாறே கூறியது முயல்.

''அந்த இன்னொரு நாணயத்தைத் தான் நான் தேடுகிறேன். பாவம், அதோ கவலையோடு போகிறான். கிடைத்தால் கொண்டு போய்க் கொடுத்து விடலாம்'' என்று அந்த மனிதனுக்காகப் பரிதாபப்பட்டது அணில்.

''ஆமாம்... ஆமாம். கிடைத்தால் கொடுத்து விடலாம்'' என்று சொன்ன முயல்... ''சரி... சரி, நீ எதற்கும் அந்தப் பக்கம் தேடிப்பார்'' என்றது. அணிலும் தங்க நாணயத்தைத் தேடிக் கொண்டு வேறு பக்கம் ஓடியது.

இனி இங்கிருந்தால் உண்மை வெளிப்பட்டு விடும் என்று எண்ணிய முயல், தான் வசித்து வந்த மரப் பொந்திற்குள் புகுந்தது. சுருக்குப் பையை அவிழ்த்துத் தங்க நாணயத்தைமுன்னும் பின்னுமாகத் திருப்பித் திருப்பிப் பார்த்தது. தங்க நாணயம் தன்னிடம் இருப்பது யாருக்காவது தெரிந்தால், ஆபத்து வந்து விடும் என்ற நோக்கத்துடன் அதைப் பத்திரப் படுத்தப் பொந்து அருகிலேயே ஒரு குழி பறித்து அதற்குள் புதைப்பதற்காக மண்ணைத் தோண்ட ஆரம்பித்தது. பொந்திற்குள் குழி பறித்துக் கொண்டிருந்த முயல், பூமிக்கு அடியில் ஓர் ஓட்டை இருப்பது போல் தோன்றவே, அந்த ஓட்டையைப் பெரிது படுத்திப் பார்த்தது. என்ன ஆச்சரியம்! பூமிக்கு அடியில் ஒரு நந்தவனம் இருப்பது அதன் கண்களுக்குத் தெரிந்தது!

அங்கு பறவைகளும், மிருகங்களும் ஒற்றுமையாக மகிழ்ச்சியுடன் துள்ளித் திரிவதைக் கண்டது. அங்கிருக்கும் ஜீவராசிகளின் மேனியின் அழகு தங்கம் போல் ஜொலித்தது. அப்பொழுது தங்கநிறம் கொண்ட முயல் ஒன்று, ''என்ன. ஆச்சரியமாக இருக்கிறதா? இதுதான் பொன்னகரம். இங்கு வசிக்கும் எங்கள் உடல் எல்லாம் தங்கத்தினால் ஆனவை. ஏன் இப்படி ஆச்சரியத்துடன் பார்க்கிறாய்? இந்தா, இந்த ஏணியின் வழியாகக் கீழே இறங்கி வா'' என்று ஓர் ஏணியை எடுத்து வந்து காட்டு முயல் கீழே இறங்கி வர வழி செய்து கொடுத்தது.

அந்தஏணிகூடத்தங்கத்தினால் செய்யப் பட்டதாக இருந்ததைக் கண்டு காட்டு முயல் வியப்புடன் மறக்காமல் சுருக்குப் பையுடன் தங்க ஏணியின் வழியாகப் பூமிக்குக் கீழே இறங்கிப் பொன்னகரத்தை அடைந்தது.

''நீ என் விருந்தாளி. நீ இங்கு என் வீட்டில் மூன்று நாட்கள் தங்கலாம். அதற்குப் பின் நீ உன் உலகத்திற்குப் போய்விட வேண்டும். மறுபடியும் நீ இங்கே வர முடியாது'' என்று கூறிய தங்க முயல், தன்வீட்டிற்கு அதை அழைத்துச் சென்றது. அங்கு எல்லாமே தங்கத்தினால் ஆனவையாக இருப்பதைக் கண்ட காட்டு முயல், ''நானும் உங்களைப் போல் தங்க மேனியுடன் திகழ முடியுமா?'' என்று தன் சந்தேகத்தைக் கேட்டது.

''ஓ! தாராளமாக. உன் உடல் கூடத் தங்க நிறமாக மாறும். ஆனால், ஒரு நிபந்தனை. நீ ஆசையை அறவே ஒழித்துவிட வேண்டும். பிறருடைய சொத்துக்கு ஆசைப்படக் கூடாது. ஆசையைத் துறக்க உன்னால் முடியுமா? சரி... சரி... வா எங்கள் ராஜாவிடம் உன்னை அழைத்துச் செல்கிறேன். அவர் சர்வ வல்லமை படைத்தவர். உனக்கு வேண்டிய பரிசுகள் கொடுப்பார். எல்லாம் தங்கத்தினால் ஆனவையாக இருக்கும்.''

தங்கத்தினால் ஆன பரிசுகள் நிறையக் கிடைக்கப் போகிறது என்ற பேராசையால், ''உங்கள் ராஜாவை வெறுங்

கையுடன் போய்ப் பார்ப்பது அவ்வளவு நன்றாக இருக்குமா? இதோ பார், நான்கூட ஓர் அழகான தங்க நாணயம் வைத்திருக்கிறேன். இதை உங்கள் ராஜாவுக்குப் பரிசாகக் கொடுத்தால் கோபித்துக் கொள்ள மாட்டாரே!'' என்று கருக்குப் பையை அவிழ்த்து அது வைத்திருந்த தங்க நாணயத்தைக் காட்டியது. ராஜாவுக்குப் பரிசு கொடுத்தால் நிறைய வெகுமதிகள் பெறலாம் என்ற பேராசையால்தான் அப்படிக் கூறியது.

''அடே, இது புது மாதிரியாக இருக்கிறதே! சரி, உன் விருப்பம் போல் கொடு'', என்று காட்டுமுயலை ராஜாவிடம் அழைத்துச் சென்றது தங்க முயல்.

பொன்னகரத்தின் ராஜாவான சிங்கம், தங்க சிம்மாசனத்தில் வீற்றிருந்தது. அதன் பக்கத்தில் சேனாதிபதி புலியும் இருந்தது. அதன் மேனியும் தங்கமாக ஜொலித்தது. காட்டு முயல், தங்க மேனி கொண்ட சிங்க ராஜாவிடம் கையோடு கொண்டு வந்திருந்த கருக்குப் பையிலிருந்து தங்க நாணயத்தை எடுத்துக்கொடுத்துவிட்டு, வணங்கியது.

''மிக்க மகிழ்ச்சி. நீ கொடுத்த தங்க நாணயம் மிகவும் அழகாக இருக்கிறதே! எனக்குப் பரிசு கொடுத்த உனக்கு வேண்டிய அளவு பொற்காசுகளைக் கொடுக்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. அந்தப் பொற்காசுகளை நீ மறதியாகக்கூட மண் தரையில் வைக்கக் கூடாது. அது தரையில் விழுந்தால் கற்களாக மாறிவிடும்!'' என்றது சிங்கம்.

''அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம் மகாராஜா. இதோ நான் கையுடன் கருக்குப் பை ஒன்று கொண்டு வந்திருக்கிறேன்'' என்றது காட்டு முயல்.



''கருக்குப் பை மிகவும் பழைய தாக இருக்கிறதே! பொற்காசுகளின் கனத்தைத் தாங்குமா? வழியில் பை கிழிந்து விட்டால், எல்லாம் பாழாகி விடுமே!'' என்று எச்சரித்தது சிங்கம்.

''அப்படியெல்லாம் ஆ கா ம ல் பார்த்துக் கொள்கிறேன்.''

''சரி, இந்தக் காட்டு முயலுக்கு வேண்டிய பொற்காசுகளைக் கொடுத் தனுப்புங்கள்'' என்று சேனாதிபதிக்கு உத்தரவிட்டது சிங்கம்.

சேனாதிபதியான புலி, பொற்காசுகள் இருக்கும் கஜானாவிற்குக் காட்டுமுயலை அழைத்துச் சென்று, அது தூக்கக் கூடிய கனத்தையும் அந்தச் கருக்குப் பை தாங்கும் அளவையும் தம் மதி நுட்பத்தால் நிர்ணயித்து, பத்து பொற்காசுகளை முயலுக்குக் கொடுத் தது.

''என்ன சேனாதிபதி அவர்களே, உங்கள் ராஜா நிறையக் கொடுக்கச் சொன்னார்கள்.'' என்று கெஞ்சியது காட்டுமுயல்.

''எனக்கு ஒன்றும் ஆட்சேபனை யில்லை. இந்தச் கருக்குப் பை அதிக கனத்தைத் தாங்காது. அதுவுமன்றி, உன்னால் இதற்கு மேல் அதிகச் சுமை யைத் தூக்க முடியாதே'' என்றது சேனாதிபதி.

''எல்லாம் நான் கொண்டு போய் விடுவேன்.'' என்றது காட்டு முயல்.

சேனாதிபதி புலியும், ''போதுமா?... போதுமா?'' என்று கருக்குப் பையில் பொற்காசுகளைக் கொட்டியது.

''இன்னும் கொஞ்சம், இன்னும் கொஞ்சம்'' என்று முயல் கெஞ்சிச் கருக்குப் பையை நிறைத்து விட்டது. 'இன்னும் பெரிய பையாக இருந்தால் நிறையக் கொண்டு செல்லலாமே!' என்றும் எண்ணியது.

பைநிறையப் பொற்காசுகளைக் கட்டிக் கொண்டு தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு பொந்துக்குச் செல்லக் கூடிய இடத்திற்கு வந்தது.

''பார்த்து ஜாக்கிரதையாக ஏணி யில் ஏறிப்போ. ராஜா சொன்னது நினைவில் இருக்கட்டும். பொற்காசுகள் மண் தரையில் விழுந்தால் கற்களாகி விடும்!'' என்று கூறி விடை கொடுத் தது தங்க முயல்.

காட்டு முயல் தூக்க முடியாமல் திணறியதைக் கண்ட தங்க முயல் பொற்காசுகள் அடங்கிய அந்தச் கருக்குப் பையைக் காட்டுமுயலின் தலையில் ஏற்றி வைத்து உதவியது. ஏணியில் ஏறும்போது கீழே விழாதவாறு 'ஏணியைப் பிடித்துக் கொண்டது. ஏணியில் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க மெதுவாகக் கஷ்டப் பட்டு ஏறித் தன் பொந்திற்கு வந்தது காட்டுமுயல்.

பொன்னகரத்தின் வாயிலும் தன் னால் மூடிக் கொண்டது.

தலையிலிருக்கும் மூட்டையைக் கீழே இறக்க முடியாமல் காட்டு முயல் தனியாய்த் தவித்தது. அந்தப் பழைய கருக்குப் பை ஒரு பக்கத்தில் புடைத்துக் கொண்டு வேறு இருந்தது. எவ்வளவு நேரம்தான் தலையில் சுமந்து கொண்டிருப்பது? பாரம் அதை அழுத்தியது. யாரையாவது அழைக்கலாமென்றால் விஷயம் அவர் களுக்குத் தெரிந்து விடுமே என்ற பயம் வேறு! தாங்க முடியாத கழுத்து வலியால் துடிதுடித்த முயல் தலையை ஓர் ஆட்டு ஆட்டியது. அவ்வளவுதான்! தலையிலிருந்த கருக்குப் பை கீழே விழுந்தது. விழுந்ததும் கனம் தாங்காது பைகிழிந்து பொற் காசுகள் அனைத்தும் நாலா பக்கமும் சிதறி ஓடின.


''ஐயோ... பொற்காசுகள்.. பொற்காசுகள்!'' என்று மண்தரையில் விழுந்த எல்லாவற்றையும் ஒன்று திரட்டப் பார்த்தது, அந்த முயல். ஆனால், என்ன ஆச்சரியம்! தங்க ராஜா சிங்கம் சொன்னது போல் எல்லாப் பொற்காசுகளும் கற்களாக மாறிக் கிடந்தன!

''ஐயோ, பொற்காசுகளெல்லாம் போச்சே, போச்சே! என் தங்க நாணயமும் போச்சே!'' என்று அலறிக் கொண்டு பைத்தியம் போல் இங்கு மங்கும் ஓடியது காட்டு முயல்!

பாம்பின் கால்

''பாம்பின் கால் பாம்பு அறியும்'' என்கிறார்களே, எனக்கு எத்தனை கால் என்று எண்ணிச் சொல், பார்க்கலாம்.''

—கீதா



புகைப்பட ஆல்பம்



ராதா - கிருஷ்ணன் கல்யாணம்
நாங்கள் அடிப்போம் டும், டும், டும்.
(விஜயலட்சுமி, மகேஷ்— புகைப்படம்
சரோஜா சிவராம்.)






உன் விளையாட்டுத் துப்பாக்கிக்குப்
பயப்பட வேறே ஆளைப் பாரப்பா!

புகைப்படம்: பி. சுந்தரம்.



அப்பாவுக்கு போன் பண்ணினால்
அசரீரி ஏதோ கேட்குதே!

புகைப்படம்: கல பதி



நாங்கள் இருவர் - எங்கள்
நண்பரும் இருவர்!

—புகைப்படம்: கோவை சீதாராம்.

குடைக்குக் கீழே இருக்கிறேனே,
கொட்டும் மழை என்ன செய்யும்?

புகைப்படம்: சயம்.





சின்னச்சாமி மகனின் சின்னச் சின்ன...

மகாகவி பாரதியாரின் தந்தையார் பெயர் சின்னச்சாமி ஐயர் என்பது உங்களுக்குத் தெரியும். சின்னச்சாமி ஐயரின் புதல்வராகப் பிறந்த அவருக்குச் சின்னஞ் சிறுசுகளிடம் கொள்ளை ஆசை!

சின்னக் குழந்தையை, 'கண்ணே, மூக்கே, கிளியே' என்று கொஞ்சுகிறோம். கண்ணனைக் குழந்தையாகப் பாடும் பாரதியாரும் 'கிளியே' என்று கண்ணனைக் கொஞ்சுகிறார். கிளி என்றால் சாதாரணக் கிளி இல்லை. 'சின்னக் கிளி!' இல்லை, இல்லை, சின்னஞ்சிறு கிளி!

சின்னஞ் சிறு கிளியே — கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே!

என்று 'கண்ணம்மா — என் குழந்தை' பாடல் துவங்குகிறது.

கிளியைப் போலவே, குருவியிலும் சின்னஞ்சிறு குருவிதான் சின்னச்சாமியின் புதல்வருக்குப் பிடித்தமானது!

சின்னஞ் சிறு குருவிபோலே — நீ
திரிந்து பறந்துவா பாப்பா!

என்று 'பாப்பாப் பாட்'டில் அவர் குழந்தையிடம் கூறுவது எவ்வளவு நன்றாக இருக்கிறது!

சின்னக் குழந்தைக்குச் சிங்காரப் பாட்டிசைத்தே
ஆட்டங்கள் காட்டி அழாதபடி பார்த்திடுவேன்.

என்கிறான் பாரதி படைத்த சேவகக் கண்ணன்.

இப்படிச் சின்னஞ் சிறுவர்கள் மேல் கொள்ளை ஆசை கொண்டிருந்த கவிஞருக்கு, நாடகப் பேராசிரியர் சம்பந்த முதலியார் பிறந்த பம்மல் என்ற ஊரில் 1.1.84 புத்தாண்டு தினத்தன்று மிகச் சிறப்பாக ஒரு விழா நடந்தது.

பம்மல் எல். ஐ. சி. மக்கள் நல சங்கத்தார் ஏற்பாடு செய்திருந்த இந்த விழாவில் பல சிறுவர், சிறுமியர் கலந்து கொண்டு கலைநிகழ்ச்சிகளை நடத்தினர். பாரதியார் பாடல், பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப் பெற்றன. 'பம்மல் பாரதி' எனப் போற்றப்படும் வி. ச. வாசுதேவன் தயாரித்த ஒரு சிறு புத்தகம் விழாவுக்கு வந்திருந்த அனைவருக்கும் நினைவுப் பரிசாக வழங்கப்பெற்றது. பாரதி புகழ் பரப்பிவரும் அன்பர்களான எதிரொலி விசுவநாதன், மணிபாரதி இருவரும் பாராட்டப் பெற்றார்கள்.



பழைய கதை;

புதிய பாடல்!



தோசையும் ஆசையும்!

குழந்தைக் கவிஞர்

தோசை மேலே ஆசை கொண்டார்
சொக்க நாதர்; ஆயினும்,
காசில் லாமல் தோசை எந்தக்
கடையில் பெறலாம், சொல்லுவீர்?

வீட்டில் தோசை சுட்டுத் தின்ன
விருப்பம் இருந்த போதிலும்,
ஆட்டுக் கல்லில் போட்டு ஆட்ட
அரிசி, உளுந்து வேணுமே!

''அரிசி, பருப்பு கொண்டு வந்தால்
அருமை யாகத் தோசையும்
விரைவில் சுட்டுத் தருவேன்'' என்றாள்
வீட்டுக் காரி அவரிடம்.

அரிசி, பருப்பு விற்கும் கடைகள்
ஐம்ப தற்கும் அதிகமாய்
இருக்கும் தெருவில் சொக்க நாதர்
ஏதோ நினைத்துச் சென்றனர்.

''பெரிய சாமிப் பிள்ளை யுடைய
பெரிய மகளின் திருமணம்.
அரிசி, உளுந்து வாங்க வேண்டி
அனுப்பி வைத்தார், என்னையே.

அரிசி மூட்டை ஆறு; மேலும்
ஐந்து மூட்டை உளுந்துமே
தரமாய் வேண்டும். மாதி ரிக்குத்
தருவீர் கொஞ்சம்'' என்றனர்.

அரிசி கொஞ்சம், உளுந்து கொஞ்சம்
அழகாய் வைத்துத் தாள்களில்
சிறிதும் தயக்கம் இன்றிக் கடையில்
சிரித்த வாறே தந்தனர்.

அரிசி, உளுந்துக் கடைகள் முழுதும்
அந்த விதமாய் அவருமே,
சிறிது, சிறிதாய்ப் பொட்ட லங்கள்
சேர்த்து விட்டார், நிறையவே!
வீடு வந்த சொக்க நாதர்
மிகவும் பெருமை யாகவே

''தேடி இவற்றைக் கொண்டு வந்தேன்
செய்வாய் தோசை'' என்றனர்.

மறுநாள் காலை சொக்க நாதர்,
மனைவி தோசை சுடுகையில்
அருகில் உள்ள ஆற்றில் மிகவும்
ஆனந்த மாய்க் குளித்தனர்.

ஆசை யோடு திரும்பி வந்தார்,
ஆற்றில் குளித்து முடித்ததும்.
தோசை தின்னத் தரையில் அமர்ந்தார்
சுறுசு றுப்பாய் அவருமே.

''ஒன்றே ஒன்று உங்க ளுக்கு''
என்று கூறி மனைவியும்,
கொண்டு வந்தாள் தோசை ஒன்றை
கோபம் கொண்டார் சொக்கரும்.

கொண்டு வந்து அரிசி, உளுந்து
கொடுத்தேன் நிறைய, நிறையவே.
நன்கு நூறு தோசை சுடலாம்.
என்ன செய்தாய்?'' என்றனர்.

''சுட்டேன் நூறு. ஆன போதும்
சுடச்சுட நான் தின்றபின்
விட்டு வைத்தேன், ஒன்றை மட்டும்
விரும்பி நீங்கள் தின்னவே.''

என்று மனைவி கூறக் கேட்டே
எழுந்தார் சொக்கர் கோபமாய்.
''உன்னைப் போல மனைவி இந்த
உலகில் யாரும் இருப்பரோ?

மீதம் ஒன்றை வைத்து விட்டு
மொத்த மாகத் தின்றநீ
மாதி ரிக்கு வைத்த தைப்போல்
வைத்தாய் இந்தத் தோசையை!

எப்ப டித்தான் தின்று தீர்த்தாய்?''
என்றே கேட்க, அவளுமே,
''இப்ப டித்தான்'' என்று வாய்க்குள்
எடுத்துப் போட்டாள், அதையுமே!



இதுவல்லவா நட்பு!

மகிமைநாதன்

மணி, குமார், ரகு ஆகிய மூவரும் இணைபிரியா நண்பர்கள். இதில் மணி வசதியான குடும்பத்தில் பிறந்தவன்.

குமார் சற்று நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவன். ரகு மிகவும் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவன். ரகுவின் தந்தை அதிகம் படிக்காததால் பகலில் கூலி வேலை செய்து அதில் வரும் பணத்தைக் கொண்டு குடும்பத்தை மிகுந்த சிரமத்துடன் நடத்திக் கொண்டு வருகிறார்.

இரவில் ஒரு பிரபல கம்பெனிக்கு இரவு காவல்காரராகப் பணி புரிந்து அதில் வரும் பணத்தை ரகுவின் படிப்புக்காகச் செலவு செய்கிறார்.

'நான்தான் படிக்கவில்லை. என் மகனும் அப்படி இருக்கக் கூடாது. நன்றாகப் படித்து, பெரிய பட்டம் பெற்று நாலு பேர் புகழும்படி நல்ல வேலை செய்யவேண்டும்.' என்று அவர் ஆசைப்பட்டு ஒரு தனியார் பள்ளியில் சேர்த்துவிட்டிருந்தார்.

'பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடும்' என்பது போல் திடீர் என ரகுவின் தந்தை குளிர் ஜுரம் வந்து படுத்த படுக்கையாய்க் கிடந்துவிட்டார். இதனால் ரகு தனது பள்ளிக் கூடக் கட்டணத்தைக் கட்ட முடியாமல் மிகவும் தவித்துப் போனான்.

இதைக் கேள்விப்பட்ட குமார் தனது நண்பன் மணியிடம் சென்று, ''டேய், மணி! நம் நண்பன் ரகு பள்ளிக்கூடக் கட்டணம் செலுத்த முடியாமல் தவிக்கிறான். ஏனென்றால் அவனுடைய தந்தை வேலைக்குப் போக முடியாமல் படுத்த படுக்கையாக இருக்கிறார். ரகு நாளைக்குப் பணம் கட்டவில்லையென்றால் அவனைப் பள்ளியிலிருந்து நீக்கி விடுவார்களாம். பாவமடா ரகு!'' எனக் கூறினான்.

அதற்கு மணி, 'பாவம்! அவன் தலையெழுத்து அப்படி இருக்கிறது. நாம் என்ன செய்ய முடியும்? அதற்குத்தான் பெரியவா சொல்லுவா, 'விரலுக்குத் தகுந்த வீக்கம் வேண்டும்', 'காலுக்குத் தகுந்த செருப்பு வேண்டும்' என்று. கூலிக்காரன் பிள்ளை கூலி வேலைசெய்ய வேண்டும். நம்மைப் போல் படிக்க ஆசைப்படக் கூடாது' என்றான்.

இதைக் கேட்டதும் குமார் மிகவும் அதிர்ச்சியடைந்தான். 'மணியா இப்படிப் பேசுகிறான்! இவனும் ஒரு நண்பனா?' எனக் கோபம் அடைந்து, ''டேய் மணி! நீயா இப்படிப் பேசுவது? எனக்கு வெட்கமா இருக்குடா, உன்னை என் நண்பன் என்று சொல்லிக்கொள்ள. உன் தந்தை பெரிய பணக்காரர் ஆயிற்றே! அவர் உன் செலவுக்கு நிறையப் பணம் தருகிறாரே! அதில் உன் வீண் செலவுகளை ஒழித்து, அதைக் கொண்டு நீ ரகுவுக்கு உதவி செய்யடா'' என்று கூறினான்.

''இது என்ன வம்பாய்ப் போச்சு! டேய் குமார், நீ சும்மா இருக்க மாட்டாய்? இது யார் வீட்டு அப்பன் பணம்? கண்டவனுக்கு எல்லாம் வாரி வாரிக் கொட்ட, நான் என்ன அனாதை விடு

தியா, அல்லது பிச்சைக்காரவிடுதியா?'' என்று மணி கோபமாகக் கத்தினான்.

''டேய் மணி! நீ இதுவரை எங்களுடன் நெருங்கிப் பழகியது எல்லாம் வெறும் நடிப்புத்தானா? உனது சுயநலத்துக்குத்தான் எங்களைப் பயன்படுத்திக் கொண்டாயா? உனக்குக் கஷ்டமோ நஷ்டமோ வந்தால் நாங்கள் உதவி செய்ய வேண்டும். ஆனால், எங்களுக்கு ஏதாவது வந்தால் உதவி செய்ய மாட்டாய். கேட்டால் தலைவிதி, மலைவிதி என்று பெரிய வேதாந்தம் பேசுகிறாய். நீ இப்படிப் பேசுவதற்குக் காரணம் உன் பணத் திமிர்தான். பணம் இன்று வரும்; நாளைக்குப் போகும். ஆனால் அன்பு என்றும் மாறாதது என்பதைநினைவில்நிறுத்திக்கொள்'' என்று குமார் கூறி, அவனது பதிலுக்குக் கூடக் காத்திராமல் விடு விடு என வீடு நோக்கி நடந்தான்.

வீடு நோக்கி நடந்து கொண்டிருந்த குமாருக்குப் பெரும் ஏமாற்றமாக இருந்தது. ரகுவின் பள்ளிக்கூடக் கட்டணத்துக்கு மணியைத்தான் குமார் உறுதியாக நம்பிக் கொண்டிருந்தான். மணி இப்படித் துரோகம் செய்வான் என்று குமார் கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை.

மணிக்கு அவன் தந்தை தினமும் தரும் பணத்தை அவன் வீணாகத் தானே செலவு செய்கிறான்? அந்தப் பணத்தைக் கொண்டு நண்பனுக்கு உதவ மாட்டானா என்ற நினைப்பில் தான் மணியிடம் குமார் உதவி கேட்டான்.

குமார் வீட்டுக்குப்போகாமல், தான் வழக்கமாக நண்பர்களுடன் செல்லும் காந்தி பூங்காவுக்குச் சென்று வழக்கமாக அமரும் இடத்தில் அமர்ந்தான்; அப்படியே வேதனையில் ஆழ்ந்துவிட்டான்.

குமார் எவ்வளவு நேரம் அப்படி இருந்தான் என்று அவனுக்கே தெரியாது. திடீரென்று ஒரு கரம் அவனைத் தட்டி எழுப்பியது. குமார் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். மணிதான் எதிரில் நின்றான்.

உடனே குமார், 'துஷ்டனைக் கண்டால் தூர விலகு' என்பது போல மணியை விட்டு விலகி நின்றான். 'எதற்காக இவன் இங்கு வந்தான்?' என்று புரியாமல் விழித்தான். நெற்றிக் கண்ணால் அவனைச் சுட்டு எரிப்பதுபோல் பார்த்தான்.

ஆனால் மணியோ, குமாரின் கரத்தைப் பிடித்துக் கொண்டு ''டேய், குமார்! தயவு செய்து என்னை மன்னித்து விடுடா! நான் உன்னிடம் அப்படிப் பேசியதற்கு மிகவும் வருத்தம் அடைகிறேன். உண்மையிலே நீ ரகுவுக்கு உதவி செய்யும்படி என்னைக் கேட்டபோது உன்மேல் எனக்கு மிகுந்த கோபம் ஏற்பட்டது'' என்று கூறி மணி சிறிது நிறுத்தினான்.

குமாரைத் தேடி மணி ஓட்டமாய் ஓடிவந்தபடியால் மூச்சு வாங்க ஆரம்பித்தது. சிறிது நேரத்தில் தொடர்ந்து பேசினான்.

''நான் வீட்டுக்குச் சென்றதும் நீ பேசிய ஒவ்வொரு வார்த்தையும் என்னைச் சிந்திக்க வைத்தது. நீ கடைசியாக ஒன்று கூறினாயே, அது என்னை மிகவும் உலுக்கி விட்டது.'' என்று மணி கூறியபோது, குமார் குறுக்கிட்டு ''நான் என்ன அப்படிக் கூறிவிட்டேன்?'' என்று கேட்டான்.

''பணம் இன்று வரும்; நாளைக்குப் போகும். ஆனால் அன்பு என்றும் மாறாதது என்று நீ சொன்ன அருமையான ஒரு சொல் என் மனத்தை ஆழமாகத் தைத்தது. இதைப் பற்றிச் சிந்திக்கச் சிந்திக்க, என் மனம் முற்றிலும் மாறியது. உன்னிடம் நான் அப்படிப் பேசியது தவறு எனவும் தெரிந்தது. இந்தா, நீ கேட்ட ரகுவின் பள்ளிக்கூடக் கட்டணம்.''என்றுகூறித் தேவையான பணத்தைக் குமாரின் கையில் மணி கொடுத்தான்.

குமாருக்கு நடப்பது எல்லாம் கனவு போல் தோன்றியது. சற்று முன் எள்ளும் கொள்ளுமாக வெடித்த மணியா இப்படிச் சாந்த சொரூபியாக வந்து நிற்கிறான்! அவனாலே நம்ப முடியவில்லை. திகைத்து நின்றுவிட்டான்.

''குமார், நீ பணம் கேட்டபோது, தினமும் ஐஸ்கிரீம், பட்டாணி, மிட்டாய், பிஸ்கட் மற்றும் இன்னும் பல தின்பண்டங்கள் நான் வாங்கிச் சாப்பிடுவதற்கு வெடி வைக்கிறாய் என்று நினைத்து அப்படிப் பேசி விட்டேன். நான் இப்போது திருந்தி விட்டேன். இனிமேல் நான் இப்படி இரக்கமற்றவனாக நடக்க மாட்டேன்'' என்று கூறி மணி குமாரைக் கட்டி அணைத்துக் கொண்டான். இதுவரையும் நடந்ததை யெல்லாம் பார்த்த வானமும் இதுவல்லவா உத்தமமான நட்பு என மகிழ்ந்து வண்ணப் பூமாரி பொழிந்தது!



இப்புவி உன்னைப் பாராட்டும்

◄ சிவல்புரி சிங்காரம் ►

படரும் கொடியின் துயர்போக்கப்
பரம்பின் 'பாரி' தேர்தந்தான்!
நடன மயிலின் குளிர்நீக்க
நல்லோன் 'பேகன்' முன்வந்தான்!

'தா'எனச் சொன்ன புலவனுக்கே
தலைதரக்'குமணனும்' சம்மதித்தான்!
வாயிலில் கதறிய பசுவினுக்கே
மகனைச் 'சோழன்' சாகடித்தான்!

பற்பல வள்ளல்கள் அவதரித்த
பாரத பூமியில் பிறந்தவனே,
எப்பொழு தேனும் நீஇங்கே
எவரின் துயரும் போக்கினையோ?

அப்படி நீயும் பிறர்துயரை
அறிந்ததும் உதவிடச் சென்றாலோ,
இப்புவி உன்னைப் பாராட்டும்!
'இனியவன்' என்றே பேர்சூட்டும்!

தந்தை: டேய், போன் யாருக்குடா வந்திருக்கு?
மகன்: நர்சரி ஸ்கூலிலேயிருந்து தம்பிக்கு வந்திருக்கு. அவன் கிளாஸ்மேட் பேசுறான்!



ஹலோ, மசால்வடை

தங்கமணி



(முற்பகல் 12 மணி. ஆறும் வகுப்பில் படிக்கிற மாசிலாவதி, தனது வகுப்புத் தோழி சுந்தரியுடன் தெருவிலிருந்து வீட்டுக்குள் ஓடி வருகிறாள்.)

மாசிலா: அம்மா... அம்மா...

(வீட்டுக்குள் சென்றதும், மாடிப் படியில் ஏறிச் செல்லும் வேலைக்காரி முனியம்மாளை நோக்கி—)

மாசிலா: முனீமா ... அ ம் ம ா எங்கே...?

முனியம்மா: (தமாஷாக) ஸ்கூலிலேயிருந்து பசி பொறுக்காமே ஓடியாந்திட்டியா?...

மாசிலா: (அதட்டலாக) ஏய்! அதெல்லாம் உனக்கெதுக்கு...? அம்மா எங்கேன்னு கேட்டால், அதுக்கு மட்டும் பதில் சொல்லு.

முனியம்மா: எதுக்கு மட்டும்?

மாசிலா: அப்பா எங்கேன்னு கேட்டேனே, அதுக்கு மட்டும்...

முனியம்மா: அப்பா எங்கேன்னு கேட்டே...?

மாசிலா: (திணறலுடன்) இல்லே, இல்லே! அம்மா எங்கேன்னு கேட்டேன்...

முனியம்மா: உங்கம்மா... சமையல் ரூம்லே இருக்காங்க.

மாசிலா: (வெறுப்புடன்) அப்படிச் சொல்லிட்டுப் போயேன், வாயாடி!

முனியம்மா: (சிரிப்புடன்) அப்படிக் கேட்டுட்டுப் போயேன், கிறுக்கு!...

மாசிலா: (ஆத்திரமாக) ஏய்! கிறுக்கு குறுக்குன்னு பேசினால், வாய் கொள்ளாமே நாலு முறுக்கைத் தினிச்சுப் பல்லையெல்லாம் நொறுக்கிடுவேன், ஜாக்கிரதை!...

(எனச் சீறிவிட்டுச் சுந்தரியுடன் சமையல் அறையை அணுகுகிறாள்.)

மாசிலா: அம்மா...

(குரலைக் கேட்டதும், சமையல் அறைக்குள்ளிருந்து கரண்டியுடன் வெளியே அம்மா வருகிறாள்.)

அம்மா: (வியப்புடன்) என்னடி, மாசிலா...., மணி இன்னும் பன்னிரண்டு கூட ஆகல்லே. அதுக்குள்ளே ஸ்கூல்லேருந்து ஓடி வந்துட்டே...? என்னடி சமாசாரம்...?

(என்றவாறே முந்தானைத் தலைப்பால் முகத்தின் வியர்வையைத் துடைத்துக் கொள்கிறாள்.)

மாசிலா: (கொஞ்சலாக) இல்லேம்மா. வந்தும்மா... எங்க இங்கிலீஷ் டீச்சரம்மாயில்லேம்மா... அவங்க வந்தும்மா... என்னமோ சொல்லி அனுப்பினாங்க...

அம்மா: என்ன சொன்னாங்க...?

மாசிலா (சுந்தரியைப் பார்த்து) டீச்சரம்மா என்னடி சொன்னாங்க...?

சுந்தரி (வெடுக்கென்று) என்ன சொன்னாங்களோ! யாருக்குத் தெரியும்...? நீயும் டீச்சரம்மாவும் வகுப்பு ஜன்னலண்டை நின்னு என்னமோ கிசுகிசுன்னு பேசிக்கிட்டீங்க....நான் அதை ஒட்டுக் கேட்கலையே! ஒட்டுக் கேட்டிருந்தால் சொல்லுவேன் எனக்கு ஒட்டுக் கேட்கிறதெல்லாம் பிடிக்காதே!...

அம்மா: (திகைப்புடன்) டீ... யம்மா! இந்தப் பொண்ணு யாருடீ...?

ஒண்ணு கேட்டால் ஒன்பது சொல்றாளே!

மாசிலா: (திடீரென்று) அம்மா! எனக்குத் தெரிஞ்சு போச்சு!....

அம்மா: என்ன தெரிஞ்சு போச்சு...? டீச்சரம்மா என்ன சொல்லி அனுப்பிச்சாங்கன்னு...?

மாசிலா: அதில்லேம்மா... வந்தும்மா... இன்னிக்கி சாப்பாட்டிலே ஸ்பெஷல் அயிட்டம் என்னன்னு எனக்குத் தெரிஞ்சு போச்சு!...

அம்மா: (புரியாமல்) ஸ்பெஷல் அயிட்டமா...?

மாசிலா: ஆமாம்... கமகமன்னு மூக்கைத் தொளைக்குதே, மசால் வடை வாசனை!

(அவளது பேச்சைக் கேட்டுக் கொண்டே வந்த மாசிலாவதியின் அண்ணன் பூபதி, கையிலிருந்த புஸ்தகங்களைக் கீழே வைத்த படியே சிரிக்கிறான்.)

பூபதி: கரும்பை யானை மறந்தாலும், தேனைக் கரடி மறந்தாலும், பாலைப் பூனை மறந்தாலும், மசால் வடையை மாசிலாவதி மறக்கவே மாட்டாளே!...

அம்மா: அப்படியில்லாட்டா அவளுக்கு மசால் வடைங்கிற பேர் சும்மா கிடைக்குமா....?

(எல்லோரும் சிரிக்கிறார்கள். அடுத்த நொடி, எதிர் வீட்டுச் சிறுவன் ராஜன் வேகமாக வருகிறான்—)

ராஜன்: ஹலோ மசால் வடை! நீ என்னமோ... சிங்கப்பூர்க் கலர்ப் பேனா வைச்சிருக்கியாமே, அதை எங்க அக்கா வாங்கி வரச் சொன்னாள், நாலைஞ்சு நிமிஷங்களில் பார்த்துட்டுக் கொடுத்திடறாளாம்...

பூபதி: சிங்கப்பூரிலிருந்து எங்க மாமா வந்தாலும் வந்துட்டுப் போனார்.... மாசிலாவதிக்கு ஒரு கலர்ப் பேனாவைக் கொடுத்தாலும் கொடுத்துட்டுப் போனார்.... அமெரிக்காக்காரன் நிலாக் கல்லைக் கொண்டாந்து ஊருக்கெல்லாம் காட்டினாப் போலவே, இவள் அந்த அதிசயப் பேனாவை எல்லோருக்கும் காட்டிக்கிட்டு..

மாசிலா: (படபடப்புடன்) அது என்னோட பேனா... அதை ஊருக்கெல்லாம் காட்டுவேன். உலகத்துக்கெல்லாங்கூடக் காட்டுவேன்... உனக்கெதுக்கு வயித்தெரிச்சல்?...

(எனச் சீறிவிட்டு, ஓடுகிறாள். எதிரிலுள்ள அறைக்குள் நுழைந்து, மேசை டிராயரைப் பார்க்கிறாள். துருவித் துருவித் தேடுகிறாள்.)

மாசிலா: (திகைப்புடன்) அம்மா! அம்மா!....

(எனக் கூவியபடியே ஓடிவருகிறாள்.)

மாசிலா: அம்மா! அம்மா! மேசை டிராயரில் வைத்திருந்த மசால் வடையைக் காணோம்!

அம்மா: (திகைத்து) என்ன!...மசால் வடையைக் காணோமா...?

மாசிலா: (திடுக்கிட்டு) தப்பு! தப்பு! கலர்ப் பேனாவைக் காணவே காணோம்!

(எல்லோரும் சிரிக்கிறார்கள்.)

பூபதி: அதானே பார்த்தேன்..... மசால்வடை உன்னை மறந்தாலும், மசால்வடையை நீ மறக்க மாட்டியே...!

(மீண்டும் சிரிப்பு)

அம்மா: (அதட்டலாக) என்னடா பூபதி, அவளைச் சும்மா கிண்டல் பண்றே...?

மாசிலா: (ஆத்திரத்துடன்) இல்லேம்மா... அவன் என்னைச் சும்மா சும்மா கிண்டல் பண்ணிக்கிட்டே வரட்டும்... ஒரு நாளைக்குப் பெரிய அண்ணனிடம் சொல்லி, இவன் கன்னம் உப்புறாப்பலே அறை வாங்கித் தர்றேன் பார்!...

பூபதி: ஹே, என்னை என்ன நினைச்சிருக்காய், ஏய்,... மாங்காப் பிஞ்சுத் தொக்கு! மனக்கணக்கிலே மக்கு! மசால் வடையை மொக்கு!....

(எல்லோரும் சிரிக்கிறார்கள்.)

சுந்தரி: (அம்மாவைப் பார்த்து) மாமி, ஒரு கேள்வி...

அம்மா: என்னடி கேள்வி....

சுந்தரி: மாசிலாவதிக்கு மசால் வடைன்னு எப்படிப் பேர் வந்தது...?

பூபதி: அது எப்படீன்னு...

அம்மா: (சட்டெனக் குறுக்கிட்டு) டேய்... நீ வாயை அடக்கு. அதைப்பத்தி உனக்கு ஒண்ணும் தெரியாது. நான் சொல்றேன், நாலைஞ்சு மாசத்துக்கு முந்தி தீவாளி வந்து போச்சே....

சுந்தரி: ஆமா, தீவாளி வந்து போச்சு...

அம்மா: அந்தத் தீவாளிக்கு முந்தி ஒரு தீவாளி வரல்லே...

பூபதி: ஏன் வரல்லே... வந்துதே... அந்தத் தீவாளிக்குப் பிறகுதான் இந்தத் தீவாளி வந்துச்சு...

அம்மா: (ஆத்திரமாக) டேய், வாயாடி... நீ சும்மா கெட... அப்புறம்... அந்தத் தீவாளி யன்னைக்கி... வீட்டிலே விதம்

விதமாப் பலகாரங்களைச் செஞ்சேன். லட்டு, மைசூர்ப் பாகு, தோசை, இட்லி, வெங்காயவடை, மசால்வடை...

மாசிலா: (பொங்கும் மகிழ்ச்சியுடன்) ஆ!... எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு... அந்தத் தீவாளிப் பலகாரங்களிலேயே, மசால் வடை தான் ஏ—ஒன்!...

அம்மா: (குறும்புச் சிரிப்புடன்) ஞாபகம் இருக்காதா என்ன...! ஒண்ணு, ரெண்டா... சமையல் அறையிலே எனக்கு உதவி செய்கிற சாக்கிலே, சுட்டுப் போட்ட பதினறு பதினேழு மசால் வடைகளிலே, பன்னிரண்டு மசால் வடைகளைப் பேசிக் கிட்டே உள்ளுக்குத் தள்ளிப்புட் டியே!

(எல்லோரும் சிரிக்கிறார்கள்.)

சுந்தரி: அய்யோ! பன்னிரண்டு மசால் வடைகளா...?

பூபதி: (கிண்டலாக) பன்னிரண்டு மசால் வடைகளென்ன, பன்னிரண்டு மூணு முப்பத்தாறு மசால் வடைகளை இருபது இருபத்தைஞ்சு நிமிஷங்களிலே நறுக்கு முறுக்குன்னு நொறுக்கித் தள்ளிடுவாளே!

(எல்லோரும் சிரிக்கிறார்கள். அவர்களது சிரிப்பையெல்லாம் மிஞ்சிக் குபீரெனக் குலுங்கிச் சிரிக்கிறான், எதிர் வீட்டு ராஜன்.)

மாசிலா: (ராஜனைப் பார்த்து) டேய், நீ போடா... கலர்ப் பேனாவைச் சாயந்திரமாகக் கொண்டாந்து காட்டுறேன்...

(ராஜன் ஓடிய பிறகு—)

அம்மா: அன்னிக்குத்தான் முதல் முதலா, 'அடி மசால்வடை!'—ன்னு என் வாயாலே கூப்பிட்டேன்!...

(சுவர்க் கடிகாரத்தில், டங் கென்று ஒரு மணி அடிக்கிறது. அதைத் தொடர்ந்து—)

அப்பா: அது தப்பு!

(என்றவாறே துறைமுகத்தில் உத்தியோகம் பார்க்கிற அவர் வேட்டி, கோட்டு, தலைப்பாகையுடன் வீட்டுக்குள் வந்து, தலைப் பாகையைக் கழற்றுகிறார்.)

அம்மா: எது தப்பு...?

அப்பா: (புன் சிரிப்புடன் நாற்காலியில் அமர்ந்து) பன்னிரண்டு மசால் வடைகளைத் தின்னுட்டதுனலே தான் மாசிலாவதியை மசால் வடைன்னு கூப்பிடறாங்கன்னு சொன்னியே, அது தப்பு! தீபாவளிக்கு முன்னே வந்த சுதந்திர நாள் அன்னிக்கு, ஒரு ரஷ்யக் கப்பலிலே உத்தியோகம் பார்க்கிற ஒரு வெள்ளைக்காரரை வீட்டுக்கு விருந்தாளியா அழைச்சுக்கிட்டு வந் தேனே, ஞாபகம் இருக்கா...?

அம்மா: ஆமா, ஆமா!...

மாசிலா: எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு... அந்த வெள்ளைக்காரன் என்கிட்டே இங்கிலீஷிலே என்னென்னமோ கேட்கலே...?

பூபதி: (குறும்பாக) நல்ல வேளை! அந்த வெள்ளைக்காரனோட நான் என்னென்னமோ இங்கிலீஷிலே பேசினேன்னு புளுகாமல் விட்டியே!...

(சிரிப்பு, குபீரிடுகிறது.)



அப்பா: அந்த வெள்ளைக்காரனுக்கு மாசிலாவதியை அறிமுகப்படுத்தி வைச்சேன். அவர், இவளைப் பார்த்து, 'வாட் இஸ் யுவர் நேம்?'—னு தெளிவாகவே கேட்டார். இவள் மாசிலாவதி—ன்னு சொன்னாள். அவருக்கு அந்தப் பெயரைச் சொல்லத் தெரியவில்லை. இவளை ஒரு காகிதத்தில் பெயரை இங்கிலீஷில் எழுதிக் காட்டச் சொன்னேன்.. இவள் தமிழிலேயே நூத்துக்குப் பதினேழு மார்க்! இங்கிலீஷில்... என்னமோ கொட்டைஎழுத்துக்களில்கோணலும் மாணலுமாக எழுதிக் காட்டினாள். என்னன்னு எழுதினாள்...? இவள் எழுதியதை வெள்ளைக்காரன் படிச்சான். என்னன்னு படிச்சான்.... மசாலாவடை—ன்னு படிச்சுப் புட்டு, 'வெரி நைஸ் நேம்!'—ன்னு வேறு புகழ்ந்து சொன்னான். எனக்குச்சிரிப் பானசிரிப்பு...குமுறிக்கின்னுவந்தது! இவள் எழுதியது தப்பா? அவர் படிச்சதுதப்பாங்கிறசந்தேகத்தோடே சிரிப்பை அடக்கிக்கிட்டு, இவள் எழுதிய காகிதத்தை வாங்கிப் பார்த்தேன். அந்தவெள்ளைக்காரன்படிச்சாப் பலேதான் இவள் எழுதியிருந்தாள். எம் ஏ எஸ் ஏ எல் ஏ வி ஏ டி ஏ ஐ— இதை மசாலாவடைன்னு படிக்...

(எல்லோருடனும் சேர்ந்து சிரித்து விட்டு—)

அப்பா: அன்னியிலேர்ந்துதான் அந்த வெள்ளைக்காரர் படிச்ச மசாலா வடை சற்றே திரிந்து மசால் வடைன்னு இவளுக்குப் பெயராச்சு...!

மாசிலா: (திடீரென்று) அம்மா!...

அம்மா: என்னடி?...

மாசிலா: எனக்கு ஞாபகம் வந்துடுச்சு...

அம்மா: என்ன ஞாபகம்... மசால் வடையைப் பத்தியா...?

(எல்லோரும் சிரிக்கிறார்கள்.)

மாசிலா: அதில்லேம்மா... வந்தும்மா. கப்பல், வெள்ளைக்காரன்னு அப்பா சொன்னதைக் கேட்டதும், டீச்சரம்மா என்ன சொல்லி அனுப்பிச்சாங்கிறது ஞாபகம் வந்துடுச்சு...

அம்மா: டீச்சரம்மா என்ன சொல்லி அனுப்பிச்சாங்க...?

மாசிலா: வந்தும்மா... துறைமுகத்துக்குள்ளே வேடிக்கை பார்க்கிறதுக்காக அப்பாகிட்டே சொல்லி ஒரு பாஸ் வாங்கியாறச் சொன்னாங்கம்மா...

அப்பா: (பரபரப்புடன்) ஆமாம், ஆமாம்... மறந்தே போனேன்... நம்ம ஆர்பருக்குள்ளே ஒரு ரஷ்ய நாட்டுச் சண்டைக் கப்பல் வந்து நிக்குது. ஞாயிற்றுக்கிழமை காலையிலிருந்து சாயந்திரம் வரைக்கும் அந்தக் கப்பலை வேடிக்கை பார்க்கிறதுக்காக ஜனங்களை அனுமதிக்கறாங்க... எனக்கு ஒரு பத்து பாஸ் கெடைச்சது. இந்தா...

(கோட்டுப் பையிலிருந்து பத்து அனுமதிச் சீட்டுகளை எடுத்து அம்மாவிடம் கொடுக்கிறார்.)

அம்மா: (ஒரு பாஸை மாசிலாவதியிடம் கொடுத்து) இந்தாடியம்மா ஒரு பாஸ். உங்க டீச்சரம்மாவுக்கு மறந்துடாமல் கொடுத்துடு... சரி, நேரமாச்சு... வாங்க சாப்பிடப் போவோம்...

(எல்லோரும் கூடத்துக்குப் போகும் சமயம், பெண்களுக்குத் தேவையான சிங்காரப் பொருள்களை விற்கும் கடையில் பணியாற்றும் ஒரு பெண் உள்ளே வருகிறாள்—)

பெண்: ஹலோ, மசால் வடை!

(அவளைக் கண்டதும் துள்ளியோடி—)

மாசிலா: வா, அக்கா! வாக்கா, சாப்பிடலாம்.

பெண்: சாப்பிடத்தான் வீட்டுக்குப் போறேன். அப்படியே உன்னைப் பார்த்து, காலையில் என்னிடம் கொடுத்துட்டு மறந்து போய்...

(கைப் பையைத் திறந்து கலர்ப் பேனாவை எடுத்துக் கொடுக்கிறாள்.)

மாசிலா: (மகிழ்ச்சியுடன்) ஆமாக்கா, கலர்ப் பேனாவை உங்கிட்டே கொடுத்ததை மறந்தே போய்த் தவியாய்த் தவிச்சு...

அம்மா: இதை மட்டுமா... இப்ப மட்டுமா...? எப்போதும், எல்லாத்தையுந்தான் மறந்து போய்க் குதிக்கறே!

பூபதி: (குறும்பாக) அம்மா, ஒரு திருத்தம்... அதாவது மசால் வடையைத் தவிர—ன்னு சொல்லுங்கோம்மா...

(எல்லோரும் சிரிக்கிறார்கள்.)

விஞ்ஞான விளையாட்டு

ஆர்.பி.சாரதி



எலக்ட்ரோஸ்கோப்

'எலக்ட்ரோஸ்கோப்' என்றால் என்ன?

மின்சார சக்தி வெளிப்படுவதைக் கண்டறியும் சாதனம் அது. கம்பளம் அல்லது ஃப்ளானலில் சீப்பு அல்லது கண்ணாடியைத் தேய்த்து 'மின்சாரம் வெளிப்படுத்துவது பற்றி நாம் பல விஞ்ஞான விளையாட்டுக்களில் குறிப்பிட்டிருக்கிறோம்.


இதையே இப்போது சோதித்துப் பார்ப்போமா?

தேவையானவை:

ஒரு கண்ணாடி ஜாடி — கார்க் அல்லது ரப்பர் மூடியுடன், 15 செ.மீ. நீளம் உள்ள கம்பி, 7. 5. செ. மீ. x 2.5 செ. மீ. அளவில் அலுமினியத் தகடு, சீப்பு அல்லது டெஸ்ட் ட்யூப், பட்டு, கம்பளம் அல்லது ஃப்ளானல்.

ஆரம்பிக்கலாமா விளையாட்டை?

முதலில் அலுமினியத் தகட்டை இரு புறம் இரு சிறு தகடுகளாகவும் அவை மிக மெல்லிய அலுமினியக் கம்பிநூல் போன்ற சிறு தகட்டால் இணைவது போலவும் - இங்கு உள்ளது போல்



வெட்டிக் கொள்ள வேண்டும். விளையாட்டின் வெற்றியே இதைச் சரியாகச் செய்து கொள்வதில்தான் இருக்கிறது என்பதை மறந்து விடக் கூடாது!

கம்பியையும் குடைக் காம்பு போல் கீழே வளைத்து வைத்துக் கொள்ளலாம். இந்த வளைந்த கம்பியின் வளைவுப் பகுதியில்தான் அலுமினியத் தகடு ஊசலாடப் போகிறது. ஜாடிக்குள்ளே! எனவே, மெல்ல ஜாக்கிரதையாகக் கம்பி வளைவில் அலுமினியத் தகடு தொங்க, கம்பியின் மறுபுறம், மேல்புறம் ஒட்டையுள்ள கார்க் அல்லது ரப்பர் மூடி வழியாக மேலே நீட்டிக் கொண்டிருக்கும். அதையும் சற்று வளைத்துக் கொள்ளலாம்.

பிளாஸ்டிக் சீப்பை நன்றாகக் கம்பளத்தில் தேய்த்து மேற்புறக் கம்பியைத் தொடு. என்ன ஆகிறது? அலுமினியத் தகடு ஒன்றை ஒன்று தொடாமல் விலகி விலகிச் செல்லும். சரி, சீப்போ டெஸ்ட் ட்யூபோ வேண்டாம். வெறுங் கையால் தொடு. என்ன நடக்கிறது? அலுமினியத் தகடுகள் அருகே வந்து இணைகின்றன. டெஸ்ட் ட்யூபைவிட பிளாஸ்டிக் சீப்பே எளிதாகக் கிடைப்பது மட்டுமல்ல: பயன்படுத்துவதும் எளிது.

ரியோஸ்டாட்

'ரியோஸ்டாட்' என்றால் என்ன?

எலக்ட்ரோஸ்கோப் மின்சாரத்தை வெளிப்படுத்துவதைக் கண்டறிந்தால் ரியோஸ்டாட் மின்சாரத்தைக் கட்டுப்படுத்தும்.

நம் வீட்டு மண்ணெண்ணெய் விளக்குகளின் திரியை உயர்த்தியோ, குறைத்தோ ஒளியை அதிகரிக்கவோ குறைக்கவோ இயலும். ஆனால், நம் வீட்டில் ஸ்விட்சை மட்டும் போட்டு மின் விளக்கின் ஒளியைக் கூட்டவோ குறைக்கவோ முடியுமா?


எளிதாக ரியோஸ்டாட் ஒன்றைச் செய்து விளையாடிப் பார்ப்போமா?

இதற்குத் தேவைகள் வை தெரியுமா?

மேற்புறம் பிளந்த ஒரு 'கிராஃபைட்' பென்சில், 1.5 வோல்ட் செல், மின் சக்தியைக் கடைகளில் சோதிக்கும் சாக்கெட் பல்ப் செட்; 8 செ. மீ. பாதுகாக்கப்பட்ட செப்பு மின்கம்பி—2.

கிராஃபைட் பென்சில் முனையையும் செல்லின் முனையையும் முதலில் மின் கம்பியால் இணைப்போமா

சாக்கெட் லீட்டின் ஒரு முனையையும் செல்லின் இன்னொரு முனையையும் இணைப்போம். சரியாக இணைக்க உதவி செய்ய, படம் தான் இருக்கிறதே!



சாக்கெட் லீட்டின் மறுமுனை இணைப்பின்றி இருக்கிறதா?

இணைப்பின்றி பல்ப் எரியுமா? எரியாது!

படத்தில் உள்ளது போல மின்கம்பியின் ஒரு முனையை சாக்கெட்டில் இணைத்து, இன்னொரு முனையைக் கையிலெடுத்துக் கொள்வோம்.

மின் கம்பியை கிராஃபைட் பென்சிலுக்கருகே கொண்டு போனால் என்ன நேரிடுகிறது?

ஒளி பிரகாசமாக இருக்கிறதா? ஆம்! மின் கம்பியைப் பென்சிலை விட்டுத் தள்ளி எடுத்துச் சென்றால் ஒளி குறையும்!

இதே அடிப்படையில் தான், ரேடியோ, டி.வி.யில் ஒலியோ, ஒளியோ குறைக்கப்படுகிறது.

தியேட்டர்களில் குறைந்த ஒளி அளிக்கப் பயன்படுவதும் இம்முறை தான்!

விடுகதை விளையாட்டு!



1. நிலத்திலே முளைக்காத புல்—அது நிமிர்ந்து நிற்காத புல்.
2. அம்மாளோ கம்மாபடுத்திருப்பாள்; மகன் முன்னும் பின்னும் ஓடிக் கொண்டிருப்பான்.
3. ஒரு குருவிக்கு ஒரே கால்; நாலு இறக்கை.
4. முள்ளு வேலியும் தாண்டி
   மூங்கில் வேலியும் தாண்டி
   உள்ளே சென்று பார்த்தால்
   ஒளிந்திருப்பான் சின்னப் பயல்!
5. கடிவாளம் போட்டால் காலிலே கிடக்கும்.
6. சின்னஞ் சிறு வீட்டில் சிப்பாய்கள் பல பேர்.
7. பச்சைக் கதவு.
   வெள்ளை ஜன்னல்.
   கறுப்பு ராஜா.
8. முதுகை அமுக்கினால் மூச்சுவிடுவான்; பல்லை அமுக்கினால் பாட்டுப் பாடுவான்.
9. அரைச் சாண் குள்ளனுக்குக் கால் சாண் தொப்பி!
10. பறிக்கப் பறிக்கப் பெரிதாகும்.

விடைகள்: 1. தலைமயிர், 2. அம்மியும், குழவியும், 3. அரைக்கீரை, 4. பலாச்சுளை, 5. செருப்பு, 6. தீக்குச்சி, 7. சீத்தாப்பழம் 8. ஆர்மோனியம், 9. பேனா, 10. குழி.

—பப்ளிகேஷன்ஸ் டிவிஷன் வெளியிட்டுள்ள 'விடுகதை விளையாட்டு' என்ற புத்தகத்திலிருந்து.

கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் பட்டியல்—தொடர்ச்சி
உறுப்பினர் எண், பெயர், முகவரி

1254. எஸ். ஜெயஸ்ரீ, சி—3/26, எப். கைலாசபுரம், திருச்சி—14.
1255. வி. இராமச்சந்திரன், 19, பீமராவ் வீதி, சத்தியமங்கலம், பெரியார் மாவட்டம்.
1256. கே. நடராஜன், செம்புளிச்சாம்பாளையம் (போஸ்ட்), பவானி (வழி) பெரியார் மாவட்டம்—638 302.
1257. கே. காஞ்சனராணி, 39, திருநகர், திருவானைக்கோவில், திருச்சி—620 005.
1258. ஆர். சந்திரசேகர், 26, பரமசிவபுரம், 5—வது குறுக்குச் சாலை, லால்குடி—621 601.
1259. எஸ். சிவராமன், 32, மில் ரோடு, சண்முகபுரம், பழனி—624 602.
1260. கே. எஸ். லாவண்யா, 213, கீழ மாரட்டு வீதி, மதுரை—1.
1261. ஏ. புனிதா, 2, கருவேலங்குண்டு தெரு, திருநெல்வேலி—627 006.
1262. வி. துவாரகநாதன், 19, பீமராவ் வீதி, சத்தியமங்கலம், பெரியார் மாவட்டம்.
1263. ஜெ. இளங்கோவன், 24—ஏ, வெங்கட்ரமணா ரோடு, ஆர். எஸ். புரம், கோவை—2.
1264. டி. சரவணன், 4, தேவாங்க தெரு, தர்மபுரி—636 702.
1265. ஸ்ரீ கணேஷ், த/பெ. டாக்டர் எஸ். எஸ்.வி. கிருஷ்ணன், கருமலை பஜார் (போஸ்ட்), கோவை—642 130.
1266. அ. தவமுனி, 5—சி, இயற்பகை நாயனார் தெரு, பாளையங்கோட்டை—627 002.
1267. ப. சத்யன் பாரதி, 53—ஏ, இராசி கொமரி பாளையம் தெரு, மோகனூர், சேலம் மாவட்டம்—637 015.
1268. கே. கணேஷ், 3—ஆர், நெல்லையப்பபுரம், முதல் தெரு, திருநகர், மதுரை—6.
1269. எஸ். ரவி, ஏ—50, விசாலாட்சி நகர், சுப்பராயன் சாலை, சென்னை—4.
1270. எஸ். சுதா, 35, எஸ். வி. தெரு, மணலூர்ப்பேட்டை (போஸ்ட்), திருக்கோவிலூர்.
1271. ந. பாலசுந்தரம், 9, நகரத்தெரு, களக்காடு—627 501.
1272. பி. இந்து, 4, ஜீவன் பீமா காலனி, ராஜசேகர முதலியார் ரோடு, மைலாப்பூர், சென்னை—4.
1273. ரா. நீரஜ்மோகன், 11, 1—வது மெயின் ரோடு, சித்தம்மா காலனி, சென்னை—18.
1274. வா. சா. ரமேஷ், பி. எல். 98, ஜெயநகர், போரூர், சென்னை—602 104.
1275. ஆர். உமா, 2/17, கூனியூர் அக்ரஹாரம், (வழி), சேரன்மகாதேவி, திருநெல்வேலி மாவட்டம்—627 417.
1276. ப. தி. ரமேஷ் பாபு, 3—ஏ, முதலியார் 1—ம் தெரு, சங்கரன்கோயில்—627 756.
1277. என். இராதாகிருஷ்ணன், த/பெ. டி. ஆர். நரசிம்மன், திருமங்கலம் (போஸ்ட்), (வழி) லால்குடி.
1278. கே. சங்கரநாராயணன், 242, பிள்ளையார் கோவில் வீதி, திருபுவனை, புதுவை—605 107.
1279. பி. சித்தார்த்தன், டி—6, டி.என்.ஜி.எஸ். ரெண்டல் ஸ்கீம், கே.கே. நகர், சென்னை 78
1280. சி. கருகணுகரன் 8, காகிதக்காரத் தெரு, திருவாரூர்.
1281. ந. நித்தியானந்தம், 73, பாரதியார் தெரு, நெல்லிக்குப்பம், தென்னார்க்காடு மாவட்டம்.
1282. எஸ். ராம்நாராயணன், 20, ஜானகிராம் காலனி, நெல்லிக்குப்பம்—607 105.
1283. ந. ரவிசங்கர், 27, 2—வது தெரு, ஸ்ரீநகர் காலனி, கும்பகோணம்.
1284. கா. வெகசுப்பிரமணியன், த/பெ. காத்தவராயன், பஸ் டிரைவர், எம்பலம், திருவள்ளுவர் நகர், நல்லாத்தூர் (அஞ்சல்).
1285. ரா. சரவணன், த/பெ. ஆர். ராமச்சந்திரன், ந. மணவெளி, நல்லாத்தூர்(போஸ்ட்).
1286. ஆர். ஜே. ஸ்ரீராம், 48, வி. சி. கார்டன் முதல் தெரு, மந்தைவெளி, சென்னை 28.
1287. ஆர். உஷாபிரியா, 29, கவரைத் தெரு, சைதாப்பேட்டை, சென்னை—15.
1288. பா. ராதாகிருஷ்ணன், 6, தேவதாசன் தெரு, நாகர்கோவில்—629 001.
1289. எம். அமுதாதேவி, 14, முருகப்ப ஆசாரி தெரு, சேப்பாக்கம், சென்னை—5.
1290. பழ. முத்தையா, 10, மெங்கிளிஸ் ரோடு, நாகல் நகர், திண்டுக்கல்.
1291. பி. ரேவதி, 76, சத்தியமூர்த்தி தெரு, சிவகங்கை.
1292. பி. பத்மாசினி, 30, ஆராவமுது கார்டன் தெரு, சென்னை—8.
1293. J. Mahalakshmi, 5, Jai Hari Kunj, Shree nagar Colony, Goregaon (west) Bombay-400062.
1294. ஏ. சி. ஹரிஹரவிஜயன், 3/67, பிராமணத்தெரு, மோரூர்—631 058.
1295. கே. சி. புஷ்பகலா, 3/67, பிராமணத் தெரு, மோரூர்—631 058.
1296. சபா. லலிதா, 85, கடலூர் சாலை, நெட்டப்பாக்கம்—605 106.
1297. டி. வெங்கட்ராமன், 1, வேதாச்சல கார்டன்ஸ், 2—வது மாடி, மந்தைவெளி, சென்னை—28.
1298. வி. ராகவேந்திரன், 84, அப்பு முதலி தெரு, மைலாப்பூர், சென்னை—4.
1299. சே. ஜெயக்குமார், 24, சுவாமி நிலையம், ரகுபதி லே அவுட், சாயிபாபா காலனி, கோவை—11.
1300. தே. அனந்தகிருஷ்ணன், 39, சரோஜினி தெரு, கோவை—9.
1301. எஸ். கவிதா, சி/67, பாரஸ்ட் காலேஜ் குடியிருப்பு, ஆர். எஸ். புரம், கோவை—2.

1302. இரா. சொக்கலிங்கம், 39, என். ஜி. ஒ. காலனி–2, ஈரோடு–9.
1303. பொ. சுரேஷ்பாபு, 41, பண்டரிநாதன் தெரு, கரூர்–1.
1304. ஜெ. குமாரராஜா, த/பெ. டி. ஆர். ஜெயராமன், நூலகர், பள்ளி பாளையம், சேலம் மாவட்டம்.
1305. என். பத்மாவதி, 20, ஆலந்தூர் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை–15.
1306. பி. ஆர். சந்திரசேகர், 13–டி, லட்சுமிபுரம், கோவை–4.
1307. டி. கே. பிரபாகர், எப்–6, ஹவுசிங் யூனிட், கவுண்டம்பாளையம், கோவை–30.
1308. அ. அனீஸ், சி–2–62–பி, கைலாசபுரம், திருச்சி–14.
1309. சா. ஆனந்தன், 14/பி, அருணகிரி முதலி தெரு, புதுப்பாளையம், கடலூர்–1.
1310. ஆர். சத்யநாராயணன், 130, கள்ளத்தெரு, திருச்சி–8.
1311. பி. பாலாஜி, 126/1, லேக் வியூ ரோடு, மேற்கு மாம்பலம், சென்னை–33.
1312. அ. குமரேஷ், 15, பவானி நகர், தஞ்சாவூர்–7.
1313. இ. கண்ணன், 14/13, மறைமலை நகர், (என். எச். II), செங்கற்பட்டு–603 209.
1314. ஆர். ஏ. விஜயக்குமார், 12–பி, கோடியான் தோப்புத்தெரு, பள்ளத்தூர்–623 107.
1315. ந. கோபாலகிருஷ்ணன், 35, பக்தபுரி தெரு, கும்பகோணம்–612 001.
1316. பி. ஜி. வெங்கட்ராமன், 58, அய்யங்கார் தெரு, கும்பகோணம்–612 001.
1317. ஜி. ரவி, 26, என். எஸ். சி. காலனி, என். எஸ். சி. தெரு, அம்பத்தூர், சென்னை–53.
1318. க. ரமேஷ், 39, தாமஸ் தெரு, பெருமாள்புரம், பாளையங்கோட்டை–627 007.
1319. கே. சதீஷ், 30, பழனி ஆண்டவர் கோயில் தெரு, பெரம்பூர், சென்னை–11.
1320. டி. என். எஸ். இரவிகுமார், த/பெ. டி. என். சீனிவாசலு நாயுடு, இராஜாக்குப்பம் கிராமம் (அஞ்சல்), குடியாத்தம் (வழி) – 632 601.
1321. இரா. சி. ஹரிராம், 16, அம்மன் கோவில் தெரு, ஆபத்தாரணபுரம், வடலூர்.
1322. ரா. சுப்பரமு, டி–15, விசிறி சாலை, நெய்வேலி–1, தென்னார்காடு மாவட்டம்.
1323. கே. ஜி. நந்தகுமார், 11, சாந்தி தெரு, டாக்டர் சீதாபதி நகர், வேளச்சேரி, சென்னை–42.
1324. பா. முரளிதரன், 36, பரமத்தி சாலை, நாமக்கல்–637 002.
1325. ஒ. சண்முகசுந்தரம், த/பெ. ஒளிசெட்டி, நாகம்மாள் நிலையம் 53–பி, சந்து வீதி தெரு, இராசிபுரம்–637 408.
1326. வி. பத்ரிநாராயணன், 48–பி, பெருமாள் கோயில் தெரு, திருவேந்திரம்
1327. தோ. ஜெயலக்ஷ்மி, 68, புதுக்கிராமம், தூத்துக்குடி–3.
1328. எஸ். கிரிஜா, 1, தணிகாசலம் முதலியார் தெரு, ஆரணிபாளையம், ஆரணி.
1329. எஸ். வனஜா, 1, தணிகாசலம் முதலியார் தெரு, ஆரணி பாளையம், ஆரணி.
1330. பா. கவுதமன், 101, ஆர். எச். காலனி, வேடசந்தூர் –624 710, மதுரைமாவட்டம்
1331. எம். முரளி, 258, நாராயணநகர், சங்கர்நகர், –627 357, திருநெல்வேலிமாவட்டம்
1332. ஜி. என். கிருபா, 81, கிழக்குத் தெரு, கோபாலசமுத்திரம்–627 451.
1333. ம. ஜெயராஜன், 10, ஆபீஸர்ஸ் இரண்டாவது காலனி, மதுரை–16.
1334. ரா. சந்திரசேகர், 4, குமார்நிவாஸ், நீலகண்டன் தெரு, கணபதி நகர், நாகல்கேணி, சென்னை–44.
1335. செ. சாந்தி, த/பெ. செல்வம், போஸ்ட் மாஸ்டர், மைலாடி 629 403.
1336. ஆர். கணேசன், த/பெ. ஆர். ராஜப்பன், மெயின் ரோடு, சிக்கலம், சிக்கல் (வழி), நாகப்பட்டினம், தஞ்சாவூர்.
1337. ஜி.ஜெயபாரதி, த/பெ. வி.ஏ.கணேசன், ஆதிச்சபுரம், மன்னார்குடிதாலுகா-614 717
1338. டி. பாபு குமார், 42 முத்துப்பட்டினம், 4–வது வீதி, காரைக்குடி–1.
1339. பீ. சண்முக விநாயகர், 16, வைரமுத்து நாடார் தெரு, அருப்புக்கோட்டை-626 101
1340. பி. அமலா, 167, பட்டமங்கல தெரு, மயிலாடுதுறை.
1341. எஸ். ரங்கராஜன், 284, 36–வது தெரு, 7–வது செக்டர், மேற்கு கே.கே.நகர், சென்னை–78.
1342. P.S. Rukmini, 14, 'O' 4th Street, Cavalry Road Cross, Bangalore - 42.
1343. டி. ராம்கிஷோர், 2, கமலீஸ்வரன் கோவில் தெரு, சிதம்பரம்–608 001.
1344. ஓய். சத்யன், 235, என். ஜி. ஜி. ஒ. காலனி, கோவை–22.
1345. எஸ். முரளிதரன், த/பெ. ஆர். ஸ்ரீனிவாசன், தலைமை ஆசிரியர் அரசு உயர்நிலைப் பள்ளி, கிளியனூர்–604 102.
1346. எஸ். பாலசுப்பிரமணியன், திரு. வி. க. தெரு, காவேரிப்பாக்கம், திண்டிவனம்–1.
1347. M. Sumathi, 83, Bashyam Nagar, Shirampuram, Bangalore, - 560021.
1348. ந. சண்முக வரதராஜன், 25/68, அனுமந்தராயன் கோவில் சந்து, உப்பார வீதி, கோவை–1.
1349. ஆர். நந்தகோபால், சித்ரா ப்ராலஸ், குனியமுத்தூர் (அஞ்சல்), கோவை–8.
1350. எஸ். ரவி, 2/45, அக்ரஹாரம், வழுத்தூர்–614 210.
1351. எம். குருமூர்த்தி, 52, பெருமாள் கோவில் தெரு, எட்டயபுரம்.
1352. ஆர். ராஜகோபாலன், 39, பாலாஜி நிலையம், ராஜகோபாலபுரம், குத்தாலம்– –609 801.
1353. என். சங்கர், 69–சி, பி & டி மைக்ரோவேவ் குவார்டர்ஸ், பாம்பே காசில், ஊட்டி–1

(இன்னும் வரும்)

உலகப் புகழ் பெற்ற சிறுவர் கதை-12



தங்க நதியின் அரசன்



மூலம்: ஜான் ரஸ்கின்

தமிழ்ச்சுருக்கம்: எச். கிருஷ்ணமூர்த்தி

ஸ்டிரியன் மலைத்தொடர்களின் நடுவில் ஒரு செழிப்பான பள்ளத்தாக்கு. அதைச் சுற்றிச் செங்குத்தாக உயர்ந்த பனி மூடிய சிகரங்கள். சிகரங்களிலிருந்து சிலிர்த்து ஓடும் சிற்றாறுகள். சிற்றாறுகளில் ஒன்று நீர்வீழ்ச்சியாகத் தவழ்ந்து பள்ளத்தாக்கின் வெளியே நீண்ட நதியாக ஓடிக் கொண்டிருந்தது. அதிகாலையில் சூரியனின் ஒளிக்கதிர்கள் அதில் படும் போது, உருக்கிய தங்கமாக அது காட்சி தந்தது. எனவே, மக்கள் அதைத் 'தங்க நதி' என்று அழைத்தனர்.

ஆறுகள் எல்லாம் வட்டமான மலைத்தொடரின் வெளியிலேயே ஓடின. பள்ளத்தாக்கின் உள்ளே எதுவும் பாயவில்லை. பருவ மழை தவறாது பெய்ததால் அங்கு பயிர்கள் செழித்தன. காய், கனி வகைகள் கணக்கின்றிக் கிடைத்தன. 'பொன் விளையும் பூமி' என அது அழைக்கப்பட்டது.

அங்கு சுவார்ட்ஸ், ஆன்ஸ், கிளக் என்னும் பெயருள்ள மூன்று சகோதரர்கள் வசித்தனர். அவர்களுக்கு அம்மா, அப்பா அல்லது வேறு உறவினர்கள் யாரும் இல்லை. அந்தப் பூமி அவர்களுடைய குடும்பத்தில் பரம்பரையாக வரும் சொத்து. சுவார்ட்சுக்கும் ஆன்சுக்கும் கல்மனது, கெட்ட குணம், கொடூரத் தன்மை. அவர்கள் விவசாயம் செய்தனர். தானியங்களைப் பதுக்கி அதிக விலைக்கு விற்றுப் பணம் தேடினர். அவர்களிடம் சவு. இரக்கம் என்ற பேச்சே கிடையாது. அவர்கள் மாதா கோவிலுக்குப் போவதும் இல்லை. மக்கள் அவர்களைக் 'கறுப்பு சகோதரர்கள்' என்றே அழைத்தனர்.

மூன்றாவது சகோதரனான கிளக் பன்னிரண்டு வயதுச் சிறுவனாக இருந்தான். இனிமையாகப் பேசுவான்; பிறரிடம் அன்பாகப் பழகுவான். மூத்த சகோதரர்கள் இருவரும் அவனிடம் கடுமையாக நடந்து கொண்டனர். எடுத்ததற்கெல்லாம் அவனைத் திட்டி அடித்தனர். வீட்டு வேலைகளைக் கிளக்கின் தலையில் சுமத்தினர். போதாக்குறைக்கு சுவார்ட்சும், ஆன்சும் நன்றாகக் குடித்துவிட்டுக் கிளக்கை உதைத்தனர். துன்பங்களைப் பொறுத்துக் கொண்டு கிளக் தனது கடமைகளை அமைதியாகச் செய்தான்.

ஒருசமயம் மலைத் தொடருக்கு வெளியில் இருந்த பிரதேசங்களில் பெரு மழை பெய்தது. பயிர்கள் அழிந்தன. மக்கள் உணவு கிடைக்காமல் வாடினர். அப்போது பொன் விளையும் பூமியில் அமோக விளைச்சல். ஆனால், சுவார்ட்சும், ஆன்சும் கொள்ளை விலை கேட்டனர். பணக்காரர்கள் மட்டுமே அந்த விலைக்கு வாங்க முடிந்தது. ஏழைகள் பட்டினி கிடந்தனர்.

குளிர்காலத்தில் ஒருநாள் பள்ளத்தாக்கில் பலத்த மழை பெய்தது. பெரிய சகோதரர்கள் இருவரும் வெளியே போயிருந்தனர். அவர்களுக்காகக் கிளக் ஒரு பெரிய மாமிசத் துண்டைச் சமைத்துக் கொண்டிருந்தான். கதவு தட்டும் ஒலி கேட்டது. கிளக்


The following particulars regarding the ownership of 'GOKULAM' the Tamil monthly newspaper, are published, as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. *Place of Publication:* Madras
2. *Periodicity of Publication:* Monthly
3. *Name of Printer:* V. Murali
   Nationality: Indian
   Address: AA-117, Shanthi Colony
   Anna Nagar
   Madras-600 040
4. *Name of Publisher:* V. Murali
   Nationality: Indian
   Address: AA-117, Shanthi Colony
   Anna Nagar
   Madras-600 040
5. *Name of Editor:* K. Rajendran
   Nationality: Indian
   Address: 1, Purushothama Mudaliar Rd.
   Lake Area
   Nungambakkam
   Madras-600 034
6. *Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital*
   Bharathan Publications Private Limited
   84/1-C, Race Course Road, Guindy,
   Madras-600 032

V. Murali
Publisher

1-3-1984



ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான்.

வீட்டு வாசலில் விசித்திரமான ஒரு குள்ள உருவம் நின்று கொண்டிருந்தது. நீண்ட மூக்கு. சிவந்த கன்னம். சுடர் விழிகள். சுருண்ட மீசை. தொங்கும் தலைமுடி. கூரிய குல்லாய். உச்சியில் இறகு. உயரம் நாலடி. உடலைச் சுற்றியிருந்த போர்வை காற்றில் பறந்து கொண்டிருந்தது.

திறந்த வாயை மூடாமல் கிளாக் அந்த உருவத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். "தம்பி! சீக்கிரம் கதவைத் திற. மழையில் நனைந்து கொண்டிருக்கிறேன்" என்று அது அதட்டியது.

"நான் உங்களை உள்ளே விடமுடியாது, ஐயா! விட்டால், என் சகோதரர்கள் என்னைக் கொன்றுவிடுவார்கள். உங்களுக்கு என்ன வேண்டும்?" —கிளாக் கேட்டான்.

"மழைக்கு ஒதுங்க இடம் வேண்டும். உனது கூடத்தில் தணல் அடுப்பு எரிகிறதே, கொஞ்சம் குளிர் காயலாமா?"

கிளாக் அந்த மீசைக்காரன் மீது இரக்கப்பட்டான். அண்ணன் வரும் வரையில் சிறிது நேரமாவது அவர் குளிர் காயட்டுமே என்று எண்ணிக் கதவைத் திறந்தான்.

"கவலைப்படாதே, தம்பி! உன் அண்ணன் வந்தால் நான் பேசிக் கொள்ளுகிறேன்", என்று சொல்லிக் கொண்டே அவன் புயலைப் போல உள்ளே புகுந்தான்.

"சாப்பிட்டு ரொம்ப நாளாச்சு. ரொம்பப் பசிக்குது. ஒரு சிறு துண்டு மாமிசம் கிடைத்தாலும் போதும், தம்பி!" என்று குளிர் காய்ந்து கொண்டே அந்த மீசைக்காரன் கெஞ்சினான். கிளக்கின் மனம் உருகியது. தன்னுடைய பங்கை அவனுக்குக் கொடுக்கத் தீர்மானித்தான்.

அதற்குள் கதவு தட்டப்பட்டது. கிளாக் திறந்தான். சுவார்ட்சும், ஆன்சும் நுழைந்தனர். சமையலறையில் இருந்த மீசைக்காரனைப் பார்த்துக் கோபமாக, "யாரது?" என்று சுவார்ட்ஸ் சீறினான்.

"யார் என்றுதெரியவில்லை. மழைக்கு ஒதுங்கியிருக்கிறார்", என்று கிளாக் பதிலளித்தான்.

சுவார்ட்சின் கோபம் எல்லைமீறியது. அருகில் இருந்த குழவியை எடுத்துக் கிளக்கின் தலையைப் பார்த்து வீசினான். மீசைக்காரன் தன்னுடைய நீண்ட குல்லாயைக் குறுக்கே நீட்டி அதைத் தடுத்தான். மந்திர சக்திக்கு

ஆட்பட்டதுபோல அந்தக் குழவி சுழன்று சுழன்று சென்று ஒரு மூலையில் போய் விழுந்தது.

''யார் நீ? எதற்காக வந்தாய்?'' ஆன்ஸ் கேட்டான்.

''குளிர் காய்வதற்காக வந்தேன். ரொம்பப் பசிக்கிறது. கொஞ்சம் உணவு- கொடுங்கள்'' என்று அவன் பரிதாபமாகக் கேட்டான். ''உணவும் கிடையாது. ஒன்றும் கிடையாது. ஓடு வெளியே!'' என்று அதட்டிக் கொண்டே ஆன்ஸ் அவனை நெருங்கி ஞன். ஆன்சின் கை அவன் மீது பட்டவுடனேயே, ஆன்ஸ் குழவியைப் போலவே சுழன்று போய் மூலையில் விழுந்தான்! சுவார்ட்சும் அதே கதிக்கு ஆளானுன்!

விசித்திரமான அந்த மீசைக்காரன் பம்பரம் போலச் சுழன்ருன். நீண்ட போர்வை அவன் மீது நேர்த்தியாகப் படிந்தது. சுவார்ட்சையும், ஆன்சை யும் பார்த்து, ''நான் இப்போது போகிறேன். இன்றிரவு பன்னிரண்டு மணிக்கு மீண்டும் உங்களைச் சந்திக்க நான் வருவேன். அதுதான் எனது கடைசி வருகையாக இருக்கும். நீங்கள் என்னிடம் அன்பு காட்டவில்லை. அதன்பலனை இனி அனுபவிப்பீர்கள்!'' என்று சொல்லி அவன் மறைந்தான். ஜன்னல்களுக்கு வெளியே ஒரு கார் மேகம் மிதந்து சென்றது. சிறிது நேரத்தில் 'சோ'வென மழை கொட்டி யது.

முன்பின் தெரியாத ஒரு மனிதனை வீட்டுக்குள் அனுமதித்ததற்காக மூத்த வர்கள் கிளக்கைக் கோபித்தனர். தண்டனையாக அன்றிரவு அவனுக்கு உணவு அளிக்கவில்லை. மேலும் கரி, கட்டை முதலியவற்றைப் போட்டு வைக்கும் இருட்டு அறைக்குள் கிளக் கைத் தள்ளிக் கதவைச் சாத்தினர்.


இரவெல்லாம் சூறைக் காற்று வீசி யது. விடாமல் மழை பெய்தது. நடு இரவு. நல்ல இருட்டு. இடிஇடிப் பது போன்ற பயங்கரச் சப்தம். வீடு அதிர்ந்தது. கதவுகள் தாமாகத் திறந்து கொண்டன. வீட்டுக்குள் யாரோ நுழை வது போலத் தோன்றியது.

சுவார்ட்சும், ஆன்சும், திடுக்கிட்டு விழித்தனர். ''யார் அது?'' என்று கேட்டனர். ''நான்தான்'', என்று மீசைக்காரனின் குரல் பதிலளித்தது.

சகோதரர்கள் இருட்டில் உற்றுநோக் கினர். மேலே கூரையைக் காண வில்லை. அறையில் தண்ணீர் நிறைந் திருந்தது. தண்ணீரின் மேல் ஒரு பெரிய உருண்டையான நுரை பம்பரம் போல் சுழன்றது. நுரையின் மீது அந்த மீசைக்காரன் நீண்ட குல்லாயுடன் உட்கார்ந்திருந்தான். ''நினைவு இருக்கட்டும். இதுதான் எனது கடைசி வருகை. என்னுடைய பெயர்ச் சீட்டைச் சமையலறையில் வைத்திருக்கிறேன்'', என்று சொல்லி விட்டு அவன் மறைந்தான்.

சுவார்ட்சும் ஆன்சும் பயந்து நடுங் கினர். கிளக்கின் அறைக்கு ஓடி இரவை அங்கு கழித்தனர். விடிந்த தும் அறைக்கு வெளியே எட்டிப் பார்த்தனர். புயலும், மழையும் பயங்கரச் சேதத்தை விளைவித்திருந் தன. ஆடு, மாடுகளையும் பயிர்,பச்சை களையும் அடித்துச் சென்றிருந்தன. பொன் விளையும் பூமி, வெறும் கட்டாந்தரையாகி மண் படிந்து கிடந்தது. வீட்டுப் பொருள்களையும் வெள்ளம் அடித்துச் சென்றிருந்தது. சமையல் அறையில் ஒரு சில பொருள் களும், ஒரு மேசையும் மட்டுமே பாக்கி இருந்தன. மேசை மீது ஒரு சீட்டு காணப்பட்டது. அதில் ''தென் மேற்குப் பருவக்காற்று'' என்று காணப்பட்டது.

ஆண்டுகள் பல ஆகியும் தென் மேற்குப் பருவக்காற்று மறுபடியும் வீசவில்லை. மழை பொழியவில்லை. செழிப்பான பூமி சீர்குலைந்து போயிற்று. அந்தச் சகோதரர்களால் இயற்கையை எதிர்த்துப் போராட முடியவில்லை. மலைத்தொடருக்கு வெளியே இருந்த நகரத்திற்குச் சென்று ஏதாவது வேலை செய்து பிழைக்க எண்ணினர்.



மகன்: அம்மா, என் பக்கத்து சீட்டிலே இருக்கிற மாமா பாப் கார்ன் சாப்பிடுறார்.
அம்மா: சாப்பிடட்டுமே, அதைப் பற்றி உனக்கென்ன?
மகன்: இல்லேம்மா, அவர் என் பாப்கார்ன் பாக்கெட்டி லிருந்துதான் எடுத்து எடுத்துச் சாப்பிடுறார்.

அதிர்ஷ்டவசமாக அவர்களிடம் சில பொன் பாண்டங்கள் மிச்சம் இருந்தன. அவை மிகப் புராதனமானவை. அரிய வேலைப்பாடு வாய்ந்தவை. அவற்றை உருக்கிப் புதுப் பாண்டங்கள் செய்யும் பொற்கொல்லர்களாக வாழத் திட்டமிட்டனர். அடுத்த ஊருக்குச் சென்று ஒரு பட்டறை அமைத்தனர்.

சுவார்ட்சும், ஆன்சும் பேராசைப் பட்டனர். தங்கத்துடன் நிறையச் செம்பைக் கலந்து விற்றனர். மக்கள் அவர்களை ஆதரிக்கவில்லை. மேலும் புது ஊருக்குப் போன பிறகு, மூத்த சகோதரர்கள் அதிகமாகக் குடித்தனர். வீட்டுப் பொருள்களை விற்றுச் சாராயம் பருகினர். வீட்டு வேலைகளையும், பட்டறை வேலைகளையும் கிளாக் தனியாகக் கவனித்தான்.

கிளாக்கிடம் ஒரு பெரிய தங்கக் கிண்ணம் இருந்தது. அவன் குழந்தையாக இருந்த போது அவனுடைய மாமா அதைப் பரிசாக அளித்திருந்தார். அது அழகானது; நுண்ணிய வேலைப்பாடமைந்தது. தங்கக் கிண்ணத்தில் பயங்கரமான ஒரு சிலப்பு முகம். முகத்திலிருந்து உற்று நோக்கும் இரு பிரகாசமான விழிகள். முகத்தைச் சுற்றி இருந்த தாடி, மீசை, தலைமுடி முதலியவை இரு கைப்பிடிகளாக முறுக்கி விடப்பட்டிருந்தன. அந்தக் கிண்ணத்தில்தான் கிளாக் தினமும் பால் பருகினான். அந்தக் கிண்ணமும், அதிலிருந்த தாடிக்காரனும் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தன.

சுவார்ட்சின் பார்வை அந்தக் கிண்ணத்தின் மீது விழுந்தது. அதை உருக்கிப் பல கரண்டிகளாகச் செய்து விற்க விரும்பினான். கிளாக் அழுதான்; கெஞ்சினான்; கூத்தாடினான்; ஆசைக் கிண்ணத்தை உருக்க வேண்டாம் என்று அண்ணனிடம் மன்றாடினான். அவன் இணங்கவில்லை. கிளாக்கைக் கீழே தள்ளினான். கிண்ணத்தை உலை நெருப்பிலிருந்த பானையில் எறிந்தான். ''நன்றாக உருகியதும் அதை வெளியே எடுத்து ஊற்று'', என்று அதட்டிவிட்டு சுவார்ட்ஸ் சாராயக் கடையை நோக்கி நடை போட்டான். ஆன்சும் உடன் சென்றான்.



✿ பரிசும் பாராட்டும்! ✿

ஒவ்வொராண்டும் பல்வேறு துறைகளில் எழுதப்பெற்ற சிறந்த புத்தகங்களுக்குத் தமிழக அரசு பரிசுகளை வழங்கி வருகிறது.

1981, 1982 ஆகிய இரு ஆண்டுகளுக்கும் குழந்தைகளுக்காக வெளிவந்த சிறந்த புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து, அப்புத்தகங்களை எழுதிய எழுத்தாளர்களுக்குப் பரிசுகளும், பாராட்டுப் பத்திரங்களும் வழங்கப் பெற்றன.

சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் திருவள்ளுவர் திருநாளில் (16.1.84) தமிழக முதல்வர், சிறந்த குழந்தைப் புத்தகங்களை எழுதிய பி.வி. கிரி, ஃ. எஸ். ஹரிஹரன் (ரேவதி), குறிஞ்சி. ஞான வைத்தியநாதன், ர. சண்முகம், பட்டுக்கோட்டை குமாரவேல், ர. சண்முகம் ஆகிய அறுவருக்கும் பரிசுகள் வழங்கினார்.

பி.வி. கிரி பரிசு பெறும் காட்சியை மேலே காணலாம். பரிசு பெற்ற எழுத்தாளர்களுக்கு, கோகுலத்தின் நல்வாழ்த்துக்கள்.



கிண்ணத்தில் இருந்த தாடிக்காரனை கிளக் கடைசி முறையாக ஆசையோடு பார்த்தான். தாடியும், தலை முடியும் உருகத் தொடங்கின. அதைக் கண்ட கிளக்கின் உள்ளமும் பாகாய் உருகியது. வேதனை தாங்காமல் கிளக் ஜன்னலோரம் சென்று தொலைவிலிருந்த மலைச் சிகரங்களை நோக்கினான். தங்கநதி சூரிய ஒளிபட்டுத் தகதகவென ஒளிமயமாக விழுந்து கொண்டிருந்தது.

"அந்த நதி உண்மையிலேயே உருக்குத் தங்கமாக இருந்தால், எவ்வளவு நன்றாக இருக்கும்!" எனக் கிளக்கின் வாய் முணுமுணுத்தது.

"இருக்காது, தம்பி. ஒரு போதும் இருக்காது!" என்று அறையிலிருந்து ஒரு குரல் அழுத்தமாக ஒலித்தது.

கிளக் திடுக்கிட்டு அறை முழுவதும் பார்த்தான். வீடு முழுவதும் தேடினான். யாரையும் காணவில்லை. "தான தந்தனத் தான" என்று அதே குரல் உற்சாகமாகப் பாடியது. அந்தப் பாட்டு பட்டறை நெருப்பிலிருந்து வருவதைக் கிளக் உணர்ந்தான். அருகில் போய்க் கவனித்தான். கிண்ணம் நன்றாக உருகிக் கொண்டிருந்தது. தங்க நதியைப் போலவே அதுவும் தகதகவெனப் பிரகாசித்தது. தாடி நண்பனின் சிவந்த மூக்கு அதில் துருத்திக் கொண்டிருந்தது. கண்கள் வழக்கமான ஜொலிப்புடன் கிளக்கை ஊடுருவிப் பார்த்தன.

"கிளக்! நான் நன்றாக உருகியாச்சு. என்னை வெளியே போடு, தம்பி!" என்று அந்தக் குரல் கணீரென்று கூறியது.

கிளக் உலையிலிருந்து பானையை இறக்கிக் கீழே சரித்தான். தங்கம் திரவமாக வெளிப்படும் என எதிர் பார்த்தான். ஆனால் வெளிப்பட்டது வேறு. முதலில் இரண்டு சிறிய கால்கள்! பிறகு, மேல் சட்டை, கைகள். அதற்குப் பிறகு அவனுக்கு மிகவும் பிடித்த முகம். அதாவது தாடிக்கார நண்பனின் சிவப்பு முகம்! பானையிலிருந்து அவன் 'தொபுக்' கென்று கீழே குதித்தான். குறுக்கும், நெடுக்குமாக அறையில் நடைபோட்டான்.

தாடிக்காரனின் உருவம் குள்ளம். உயரம் ஒன்றரை அடி. ஆடை தங்க நூல். தலைமுடியும், தாடியும் முழங்கால் வரை நீளம். உடல் பொன் நிறம். மூக்கு சிவப்பு. கண்கள் அதே ஜ்வலிப்பு. கிளக் அதிசயத்தில் ஆழ்ந்தான். "ஐயா! நீங்கள் நான்



சாகாத வீட்டில் விபூதி

ஓர் ஊரில் கந்தன் என்று ஒரு சிறுவன் இருந்தான். அவன் மிகவும் கெட்டிக்காரன். ''ஒருநாள் இதுவரை யாருமே சாகாத வீட்டில் விபூதி வாங்கி வந்தால் 1000 பொன் பரிசு'' என்று அரசர் அறிவித்திருந்தார்.

கந்தன் எப்படியாவது பரிசு பெற வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருக்கும்போது, அவன் மனத்தில் ஒரு யோசனை தோன்றியது. நேராகக் கோவிலுக்குச் சென்று விபூதி வாங்கி வந்து அரசரிடம் கொடுத்தான்.

''எங்கிருந்து நீ இந்த விபூதியைக் கொண்டு வந்தாய்?'' என்று கேட்டார் அரசர். ''நான் கோவிலிலிருந்து கொண்டு வந்தேன். இறைவனுக்குத் தான் பிறப்பும் இல்லை; இறப்பும் இல்லையல்லவா?'' என்றான். அரசர் கந்தனை மிகவும் பாராட்டினார். சொன்னபடியே 1000 பொன்னையும் கொடுத்தார்.

—ப. தி. அஷ்வின்.

என் கிண்ணமாக இருந்தீர்களா?'' பணிவோடு கேட்டான்.

''நான்தான் அந்தத் தங்க நதியின் அரசன். ஒரு மந்திரவாதி என்னைச் சபித்துத் தங்கக் கிண்ணமாக மாற்றினான். அந்தச் சாபத்திலிருந்து என்னை நீ விடுவித்தாய்!'' என்று சொல்லி அவன் ஜிளக்கிற்கு நன்றி தெரிவித்தான். ஆச்சரியத்தோடு ஜிளக் அவனுடைய உரையைக் கேட்டான்.

''உன் கெட்ட சகோதரர்கள் உனக்கு இழைக்கும் கஷ்டங்களை நான் பார்த்தேன். உன்னுடைய நல்ல குணத்திற்காக உனக்கு ஓர் உதவி செய்ய விரும்புகிறேன். நன்றாகக் கேள். எந்த ஒரு மனிதன், அதோ அந்த மலைகளின் மீது ஏறித் தங்க நதி ஆரம்பமாகும் இடத்தில் மூன்று துளி தீர்த்தத்தை விடுகிறானோ, அவனுக்கு மட்டும் அந்த நதி தங்கமாக மாறும். முதல் முயற்சியில் தோற்றவன் இரண்டாவது முறை வெல்ல முடியாது. புனிதமில்லாத நீரை அங்கு ஊற்றுபவன் கறுப்புக் கல்லாக மாறுவான்'', என்று எச்சரித்து விட்டு நதி அரசன், உலைநெருப்பில் புகுந்து ஆவியாகி மறைந்தான். பிறகு கிண்ணத்தையும் காணவில்லை! தாடிக்கார அரசனையும் காணவில்லை! ஜிளக் துன்பத்தில் மூழ்கினான்.

சுவார்ட்சும், ஆன்சும் வழக்கம் போல் குடித்துவிட்டு வீடு திரும்பினர். தங்கக் கிண்ணம் மறைந்த கதையைக் கேட்டதும், ஆத்திரத்தோடு ஜிளக்கை அடித்து நொறுக்கினர். போதை தெளிந்ததும் ஓரளவு ஜிளக்கின் பேச்சை நம்பினர். ஆனால், முதலில் யார் மலை மீது ஏறுவது என்று சுவார்ட்சுக்கும், ஆன்சுக்கும் சண்டை வந்தது. வாய்ச் சண்டை வாள் சண்டையில் முடிந்தது. அதைக் கண்டு ஊர் மக்கள் காவல் நிலையத்திற்குத் தகவல் கொடுத்தனர். ஆன்ஸ் ஓடி ஒளிந்தான். சுவார்ட்ஸ் அகப்பட்டுக் கொண்டான். ''அபராதம் அல்லது சிறைவாசம்'' என்று நீதிபதி தீர்ப்பு வழங்கினார். கையில் காசில்லாததால் சுவார்ட்ஸ் சிறையில் அடைக்கப்பட்டான்.

அண்ணனுக்குக் கிடைத்த தண்டனையைக் கேட்டு ஆன்ஸ் இன்புற்றான். தான் முதலில் தங்க நதிக்குச் செல்ல ஏற்பாடுகள் செய்தான். ஆன்ஸ் மதகுருவிடம் தீர்த்தம் கேட்டான். அவனது கெட்ட குணங்களை அறிந்த அவர், தீர்த்தம் அளிக்க மறுத்தார். ஆனால், ஆன்ஸ் மாதா கோவிலிலிருந்து கொஞ்சம் தீர்த்தத்தைத் திருடிக் குடுவையில் ஊற்றிக் கொண்டான். தீர்த்தம், உணவு, ஒயின், மலை ஏறும் கைத்தடி முதலியவற்றை எடுத்துக்கொண்டு ஆன்ஸ் அதிகாலையில் புறப்பட்டான். வழியில் சிறைச்சாலையில் இருந்த சுவார்ட்சைக் கிண்டல் செய்துவிட்டு நதியை நோக்கி நடந்தான்.

தொலைவில் பனிச் சிகரங்களும், தங்கநதியின் நீர் வீழ்ச்சியும் காலைக் கதிரவன் ஒளிபட்டு மின்னிக் கொண்டிருந்தன. ஆன்ஸ் இயற்கை அழகை ரசிக்கவில்லை. அவனுடைய கண்கள் நதியின் மூலத்தையே நோக்கின. அவனது உள்ளம் தங்கமாக மாறும் ஆற்றையே நினைத்தது. கால்கள் வேகமாக நடந்து முதல் மலையைக் கடந்தன.

வழியில் பனிக்கட்டி ஆறு குறுக்கிட்டது. ஆன்சின் கால்கள் சறுக்கின. கால் பட்டுப் பனிக்கட்டிகள் சுக்கல் சுக்கலாக உடைந்தன. உடைந்த பனிக்கட்டிகள் வேகமாக நகர்ந்தன. பிளவின் ஆழத்திலிருந்து தண்ணீர் பயங்கர ஓசையுடன் பீறிட்டது.

முதுகில் இருந்தமூட்டைகள் ஆன்சுக்குப் பெரும் சுமையாக இருந்தன. தீர்த்தக் குடுவையை மட்டும் வைத்துக்கொண்டு ஆன்ஸ் உணவுப் பொருள்களை வீசி எறிந்தான். ஆன்சின் உடல் தளர்ந்தது. ஆனாலும் அவன் உள்ளம் தளரவில்லை. மிருந்த சிரமப்பட்டுப் பனி ஆற்றைக் கடந்து அடுத்த மலைத் தொடரின் அடிவாரத்தை அடைந்தான்..

களைப்பு நீங்கும் வரை வெகுநேரம் ஆன்ஸ் ஓய்வெடுத்தான். நதியின் தங்கத்தை நினைத்ததுமே அவனுக்குப் புதிய தெம்பு வந்தது. மலையில் தொடர்ந்து ஏறினான். பாறை முழுவதும் பாழுங் கற்கள். மலைச்சரிவு வறண்டு கிடந்தது. புல்கூட கண்ணில் படவில்லை. நிழல் தரும் மரங்கள் இல்லை. ஆன்சுக்குத் தாகம் எடுத்தது. தொண்டை வறண்டது. தீர்த்தக் குடுவையை ஆசையாகக் கையில் எடுத்தான்.

''இதில் நிறையத் தீர்த்தம் இருக்கிறது. நதியில் ஊற்ற மூன்று துளிகள் போதுமே! இப்போது கொஞ்சம் குடித்தால் என்ன?'' என்று நினைத்தான். குடுவையைத் திறந்தான். எதிரே ஒரு நாய் தோன்றியது. அதுவும் மிகுந்த தாகத்தால் வருந்தியது. ஆன்சைப் பரிதாபமாகப் பார்த்தது. அவன் கொஞ்சங்கூட இரக்கம் இல்லாமல் அந்த நாயை எட்டி உதைத்தான். பிறகு ஒரு வாய் தீர்த்தம் குடித்துத் தாகத்தைத் தணித்துக் கொண்டான். தொடர்ந்து ஏறினான். ஓர் இருண்ட மேகம் அவனைக் கடந்து சென்றது.

பாதை செங்குத்தாக இருந்தது. மேலே ஏறுவது கஷ்டமாக இருந்தது. நடுப்பகல். நல்ல வெய்யில். ஆன்சுக்குத் தாகம் அதிகரித்தது. இன்னொரு வாய் தீர்த்தம் குடிப்பதற்காகக் குடுவையைத் திறந்தான். அவனுக்கு எதிரே ஒரு சிறு குழந்தை தோன்றியது. அதுவும் தாகத்தால் தவித்துக் கொண்டிருந்தது. ஆன்சிடம் நீர் கேட்டது. அவனுடைய மனம் இளகவில்லை. இன்னொரு வாய் தீர்த்தம் குடித்துவிட்டுக் குழந்தையை வெறுப்போடு பார்த்தான். பயணத்தைத் தொடர்ந்தான். இரண்டாம் முறையாக ஒரு கறுப்பு மேகம் அவனைக் கடந்து சென்றது.

சூரியன் மேற்கில் சாய்ந்தான். நதியை அடைய இன்னும் சுமார் ஐந்நூறு அடி தூரம்தான் பாக்கி. ஆன்சின் உடல் ஒத்துழைக்க மறுத்தது. உடம்பிலுள்ள சக்தி அனைத்தையும் திரட்டிக்கொண்டு கொஞ்சங் கொஞ்சமாக முன்னேறினான்.

''நான், தாகத்தால் சாகிறேன், தண்ணீர்! தண்ணீர்!'' என்று பாதையில் கிடந்த ஒரு முதியவர் முணுமுணுத்தார். பிறருடைய கஷ்டங்களைக் கண்டு அனுதாபப்படவோ, அல்லது அவர்களுக்கு உதவி செய்யவோ ஆன்சுக்குத் தெரியாது. ''தண்ணீரும் இல்லை, ஒன்றும் இல்லை, போ!'' என்று சொல்லிக்கொண்டே ஆன்ஸ் அவரை மிதித்துக் கொண்டு முன்னேறினான்.

திடீரென மின்னல் பளிச்சிட்டது. இடி முழங்கியது. தங்கநதி மிகமிக அருகே பாறைகளுக்கிடையில் பேரிரைச்சலுடன் விழுந்து கொண்டிருந்தது. கதிரவன் மேற்கு விளிம்பில் இருந்தான். அந்த ஒளி பட்டுத் தங்க நதி பயங்கரச் சிவப்பாகத்தோன்றியது. ஆன்ஸ் தீர்த்தக் குடுவையை நதியின் மையத்தில் வீசி எறிந்தான். அப்போது ஒரு பயங்கரக் குளிர் அவனைத் தாக்கியது. உடல் நடுங்கியது. கீழே விழுந்து அழுதான்; அலறினான். நீர் வீழ்ச்சியின் இரைச்சல் அவனுடைய அலறலை அடக்கியது. தாவும் அலைகள் அவனுடைய உடலைத் தழுவிச் சென்றன. மறுநிமிடம் ஆன்ஸ் ஒரு கறுப்புக் கல்லாக மாறினான்!

* * *

ஆன்ஸ் திரும்பவில்லை. கிளக் கவலைப்பட்டான். சிறைச்சாலைக்குச் சென்று சுவார்ட்ஸிடம் பேசினான். ''ஆன்ஸ் கல்லாக மாறியிருப்பான்.

காரிலே வாக்கிங்!

பணக்காரரின் மகன்: (பெருமையாக அவன் நண்பனிடம்) என் அப்பா வாக்கிங் போறுக்கூட காரிலேதான் போவார்.

-ரேணு தமிழ்ச்செல்வன்





அந்த நதியின் தங்கமெல்லாம் இனிமேல் எனக்குத்தான்!'' என்று சுவார்ட்ஸ் மகிழ்ச்சியுடன் கூறினான். அண்ணனுடைய இரக்கமில்லாத பேச்சைக் கேட்டு கிளக் மனம் வருந்தினான்.

கிளக் வேறு ஒரு பொற்கொல்லரிடம் வேலை செய்து, சம்பளத்தைச் சேமித்தான். அபராதம் செலுத்தி அண்ணனைச் சிறையிலிருந்து மீட்டான். சுவார்ட்ஸ் பேராசை பிடித்த ஒரு மதகுருவிடம் போனான். நிறையப் பணம் கொடுத்துத் தீர்த்தம் வாங்கினான். தீர்த்தக் குடுவையையும், உணவுப் பொருள்களையும் எடுத்துக் கொண்டு, அவன் தங்க நதியை நோக்கிப் புறப்பட்டான்.

ஆன்சைப் போலவே அவனும் வழியில் பல துன்பங்களை அனுபவித்து மலைப்பாதையில் மெதுவாக முன்னேறினான். பாதையில் தாகத்தால் தவிக்கும் ஒரு நாயையும், ஒரு குழந்தையையும், ஒரு முதியவரையும் அடுத்தடுத்துச் சந்தித்தான். ஆனால், அவனுடைய மனத்தில் அன்பு சுரக்கவில்லை. அவன் அகராதியில் இரக்கம் என்ற சொல்லுக்கு இடமே இல்லை! அவர்களை அலட்சியமாகத் தள்ளிவிட்டு தங்க நதியே இலட்சியமாக நடந்தான்.

சுவார்ட்ஸ் நதியை அடைந்தபோது மாலை நேரம். வானம் இரத்தக் குழம்பாகக் காட்சி அளித்தது. அவன் தீர்த்தக் குடுவையை நதியில் எறிந்தான். மின்னலும், இடியும் தோன்றின! அவனுக்குத் தலை சுற்றியது! பார்வை மங்கியது. கீழே சரிந்தான். தங்க நதியின் தண்ணீர் அவனைத் தாலாட்டியது. உடனே சுவார்ட்சும் ஒரு கறுப்புக் கல்லாக மாறினான்! தங்க நதியின் அலைகள் அருகருகே இருந்த இரண்டு கறுப்புக் கற்களையும் சுற்றிச் சுழித்துச் சென்றன.

* * *

அண்ணன் இருவரும் திரும்பி வராமல் போகவே கிளக் துயருற்றான். அவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக அவன் தங்க நதியின் பிறப்பிடத்திற்குப் போகத் தீர்மானித்தான். அதில் தெளிப்பதற்காக மதகுருவிடமிருந்து தீர்த்தம் வாங்கிக் குடுவையில் சேகரித்தான். மலைப் பாதையில் நடந்தான். வழக்கமான துன்பங்களையும், பசி தாகத்தையும் பொறுத்துக் கொண்டு முன்னேறினான்.

வெய்யில் காயவே, தாகம் அதிகரித்தது. தீர்த்தக் குடுவையைத் திறந்தான். எதிரில் ஒரு வயோதிகர் தோன்றினர். ''தாகம், தாகம், கொஞ்சம் தண்ணீர் கொடு, தம்பி!'' என்று கெஞ்சினர். கிளக் அவர் மீது இரக்கப்பட்டு, ''கொஞ்சமாகக் குடியுங்கள்'' என்று சொல்லித் தீர்த்தக் குடுவையை அவருடைய கையில் கொடுத்தான். வயோதிகர் அதிலிருந்த முக்கால் வாசித் தீர்த்தத்தையும் குடித்துவிட்டுக் கிளக்கை வாழ்த்திச் சென்றார்.

அதற்குப் பிறகு கிளக் மேலே ஏறுவது எளிதாக இருந்தது. வறண்ட பாறைகள் மாறிப் பூண்டுகள் காணப்பட்டன. தங்கநதியை அடைய இன்னும் சிறிதுதூரமே பாக்கி இருந்தது. கிளக்கிற்குத் தீராத தாகம். சிறிது தீர்த்தம் பருகுவதற்காகக் குடுவையை எடுத்தான். அவன் எதிரில் எங்கிருந்தோ ஒரு குழந்தை வந்தது. அதற்கும் தீராத தாகம். கைகளை நீட்டித் தண்ணீர் கேட்டது. கிளக் தன்னுடைய தாகத்தை அடக்கிக் கொண்டான். குழந்தைக்கு அன்புடன் தீர்த்தத்தைப் புகட்டினன். அது ஒரே மூச்சில் குடித்துவிட்டுச் சந்தோஷமாக ஓடியது. கிளக் பயணத்தைத் தொடர்ந்தான்.

பாதையின் இருமருங்கிலும் செடிகொடிகளும், மரங்களும் தென்பட்டன. செடிகள் மலர்களை விரித்து அவனை வரவேற்றன. கிளக் உற்சாகமாக நடந்தான். மீண்டும் அவனுக்குத் தாகத்தால் நெஞ்சு வறண்டது. தீர்த்தக் குடுவையில் நாலைந்து துளிகள்தான் பாக்கி இருந்தன. அதைக் குடிக்க விரும்பவில்லை. நதியில் ஊற்றலாம் என்று வைத்துக்கொண்டான். ஆனல் சோதனை போல எதிரில் ஒரு நாய் வந்தது. நாயும் தாகத்தால் வருந்தியது. கிளக் நாயைக் கவனித்தான். அருகிலிருந்த நதியையும் கவனித்தான். ''முதன் முறையாகப் போகிறவர்தானே தங்கநதியில் வெற்றியடைய முடியும்?'' என்று கிளக் யோசித்தான்.

''நான் மேலேபோய் வருவதற்குள் இந்த நாய் தாகத்தால் இறந்து விடும் போலிருக்கிறதே!'' என்றுஅதற்காகஅனுதாபப்பட்டான். கடைசியில் குடுவையைத் திறந்து தீர்த்தத் துளிகளை எல்லாம் நாயின் வாயில் ஊற்றினன். நாய் மறைந்தது! அந்த இடத்தில்தங்கநதியின் அரசன் நின்றான்.

''தம்பி, நீ ஏன் முதலிலேயே வரவில்லை? உன் கெட்ட அண்ணன் இருவரையும் கல்லாக மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டதே!'' என்றான் அந்த அரசன்.

''அவ்வளவு கல் மனத்தவரா நீங்கள்?'' கிளக் ஆச்சரியத்தோடு கேட்டான்.

''நான் கல் மனத்தவனு? அல்லது புனிதமில்லாத நீரை ஊற்றிய உன் சகோதரர்கள் கல்மனத்தவர்களா?''

''மாதா கோவிலிலிருந்துதானே அவர்கள் தீர்த்தம் கொண்டு வந்தனர்?''


''எவ்வளவு தூய இடத்திலிருந்து வந்தாலும், தாகத்தால் தவிக்கும் ஓர் உயிருக்கு உதவாத நீர் புனிதமல்ல, தம்பி. இரக்கத்தோடு பிறருக்கு அளிக்கும் நீரே என்றென்றைக்கும் புனிதத் தீர்த்தமாகும்'', என்று இனிய குரலில் பேசிக்கொண்டே அந்த அரசன், அருகில் பூத்திருந்த ஒரு சிறிய மலரைப் பறித்தான். அதிலிருந்த மூன்று பனித்துளிகளைக் கிளக்கின் குடுவையில் தெளித்தான்.

''இதை நதியில் போட்டுவிட்டு, நீ ஏறி வந்த பாதைக்கு எதிர்ப்புறமாக உள்ள பாதை வழியே உன் ஊருக்குப் போ. எல்லா நன்மைகளும் உனக்கு உண்டாகும்'', என்று அன்போடு அவனை வாழ்த்தி அந்த நதி அரசன் மறைந்தான்.

கிளக் அவ்வாறே நதிக்குச் சென்று பனித் துளிகளை அதில் தெளித்துவிட்டு ஆவலோடு பார்த்தான். தண்ணீர் வட்டமாகச் சென்று உள்ளே இறங்குவது போலத் தோன்றியது. நதியில் மாற்றம் ஏதும் காணப்படவில்லை. கிளக் ஏமாற்றமடைந்தான்.

குறிப்பிட்ட பாதை வழியே கிளக் ஊருக்குத் திரும்பினன். அங்கு ஓர் அதிசயம் காத்திருந்தது. மலைப்பாறையில் ஒரு புதிய பிளவை ஏற்படுத்திக் கொண்டு அந்த நதி பள்ளத்தாக்கில் பாய்ந்து கொண்டிருந்தது! வறண்ட நிலம் நனைந்தது! பயிர்கள் செழித்தன! பெயரளவில் ''பொன் விளையும் பூமி''யாக இல்லாமல் உண்மையிலேயே பொன்னிறத் தானியங்கள் விளையும் பூமியாக அந்தப் பள்ளத்தாக்கு மறுபடியும் மாறியது!

John Ruskin ஆங்கிலத்தில் எழுதிய The King of the Golden River என்ற ஆங்கிலக் கதையின் சுருக்கமே இது



1869—ம் வருஷம் முதன் முதலில் சைக்கிள் பந்தயம் பாரீஸிலிருந்து ரூயனுக்கு (எண்பத்தி மூன்று மைல் தூரத்துக்கு) நடைபெற்றது. இந்த நீண்ட தூரப் பந்தயத்தில் ஜேம்ஸ் மூர் என்பவர் வெற்றி பெற்றார். எண்பத்தி மூன்று மைல் தூரத்தை அவர் 10 மணி 25 நிமிஷங்களில் சென்றடைந்து பரிசைப் பெற்றார். சைக்கிள் பந்தயத்துக்கு இதனால் மவுசு பெருகிற்று.

நேஷனல் சைக்கிள் யூனியன் ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜில் தொடங்கப்பட்டது. சர்வ கலாசாலைகளிலும், சைக்கிள் போட்டிகள் பிரபலமாயின. 1879—ம் வருஷம் லாஸன் என்பவர்பாதுகாப்பான சைக்கிளைப்போட்டிகளுக்கென்று தயாரித்துக் கொடுத்தார். 1892—ம் ஆண்டு இங்கிலாந்து நாடு உலக சைக்கிள் கழகம் தோற்றுவித்தது. அதில் இங்கிலாந்து, பெல்ஜியம், டென்மார்க், ஜெர்மனி, பிரான்ஸ் ஹாலந்து, அமெரிக்கா, கனடா அங்கம் வகித்தன.

டன்லப் நிறுவனம் தங்கள் டயர் தயாரிப்புக்களைப் பிரபலப்படுத்துவதற்காக புரொபஷனல் சைக்கிள் பந்தய வீரர்களை ஆதரித்து ஊக்குவித்தது.

1882-ம்வருஷம் எச். எல். கோர்ட்டிஸ் என்பவர் பிரிட்டனில் நான்கு தேசிய சைக்கிள் போட்டி விருதுகளை வென்றார். ஒரு மணி நேரத்தில் இருபது மைல்களைக் கடந்த சைக்கிள் வீரர் இவர்தான்!

1950—ம் வருஷத்துக்குப் பிறகு பெண்மணிகள் சைக்கிள் போட்டிகளில் கலந்து கொள்வது அதிகரித்தது. பிரிட்டனில் பெரில் பர்ட்டன் சைக்கிள் போட்டிகளில் பல ரிகார்டுகள் கண்டதோடு பத்தொன்பது தடவை சாம்பியன் பட்டம் பெற்றிருக்கிறார்!

இத்தாலிய சைக்கிள் புரொபஷனல் பியோரன்ஸி மாக்னி, சைக்கிள் போட்டிகளுக்கு பிரபலம் தேடுவதற்காகப் பல நிறுவனங்களின் பெயர்களைப் பனியன்களில் எழுதி, அவற்றை ஆட்டக்காரர்களை அணிய வைத்தார். தாமும் 'Nivea' என்ற நிறுவனத்தின் பெயரைத் தம் 'ஜெர்ஸி'யில் அணிந்து கொண்டு போட்டியில் பங்கேற்றார். புகையிலை, பெட்ரோல் போன்றவைகளுக்கு விளம்பரம் தேடும் புதிய 'மாதிரி' சுலோகன்கள் கொண்ட பனியன்கள் தயாரிக்கப்பட்டன. பாஸ்டோ கோப்பி என்பவர் சைக்கிள் போட்டியாளர்களில் செல்வச் சீமான்; சாம்பியனும் கூட.

ஆதி நாட்களில் சைக்கிள் பந்தயங்கள் ஞாயிறு அன்று நடு இரவு கழிந்து ஒரு நிமிஷத்துக்குப் பிறகு தொடங்கி வரும் சனிக்கிழமை நடு இரவில் முடியும். 1870—ம் வருஷத்தில் சைக்கிள் ஆறு நாள் பந்தயங்கள் நடைபெறத் தொடங்கின. 1878—ம் வருஷம் லண்டனிலுள்ள இஸ்லிங்டனில் முதல் ஆறுநாள் சைக்கிள் பந்தயம் நடைபெற்றது. 1060 மைல்களைக் கடந்து வெற்றி வாகை சூடியவர் யார்க்ஷயர்க்காரராகிய கார்ன்ஸ்.

1896—ம் வருஷம்தான் சைக்கிள் பந்தயம் ஒலிம்பிக்கில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. சைக்கிள் போட்டி

களில் நாலு தங்கப் பதக்கங்களை அமெரிக்காவைச் சேர்ந்த ஹார்லி 1904—ம் வருஷம் பெற்று ரிகார்டு கண்டிருக்கிறார்.

சைக்கிள் பந்தய வீரர்கள் போதை வஸ்துக்களை உண்டு கெட்ட பெயரையும் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். 1967—ம் வருஷம் டாம் ஸிம் ஸன் என்ற சைக்கிள் போட்டி வீரர் போதைப் பொருட்களை உண்டு, போட்டியில் பங்கேற்றதால் தம் உயிரையே இழக்கும்படி ஆயிற்று.

சைக்கிள் போட்டிகள் இரு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன; ஒன்று Velodrome—லுள்ள டிராக்கில் நடக்கும் போட்டி; மற்றொன்று தெருப் போட்டிகள். சர்வதேச, தேசியப் போட்டிகளில் பல்வகை அயிட்டங்கள் உண்டு.

சைக்கிள் போட்டியாளர் ஜெர்ஸியும் அரைக்கால் சட்டையும் அணிவர். சிலர் தொப்பியும் அணிந்து கொள்வர்.

டிராக்கில் நடக்கும் போட்டிகளுக்கான சைக்கிள் பிரேம், சக்கரங்கள், செயின் ஸெட், விரல்களைப்பிணைத்துள்ள 'கிளிப்' புள்ள பெடல்கள், ஸீட், ஹாண்டில்பாருடன் இருக்கும். தெருப் போட்டிகளுக்கான சைக்கிளில் பிரேக் உண்டு.

எந்த சைக்கிள் போட்டியாளராவது பந்தயத்தின் போது போதைப் பொருளைப் பயன்படுத்துவதாகத் தெரிந்தால் அவரை நீக்கிவிட உரிமை உண்டு.

போட்டியை நிர்வகிக்க பிரதம நீதிபதி, நேரக் கணிப்பாளர்கள், சைக்கிள் கண்காணிப்பாளர், உதவியாளர்கள் இருப்பார்கள்.

நீண்ட தூரப் போட்டிகளில் கண்ட்ரோல் பாயிண்ட்கள் உண்டு. இங்கே, போட்டி நிர்வாகிகள் சைக்கிள் வீரர்களுக்கு வேண்டிய சிற்றுண்டி, பானங்கள் வழங்குவார்கள்.


சைக்கிள் போட்டிகளின் போது முந்திச் செல்லும் ஒருவரை இடித்துத் தள்ளிக் கொண்டு முன்னேறினால் அது செல்லுபடியாகாது. மேலும் முன்னேறிச் செல்லும் ஒருவருக்குத் தடையாகக் குறுக்கிடுவதும் தவறான செய்கை.

சைக்கிள் போட்டிகளுக்காகவே புது தில்லியில் யமுனா நதிக்கரையில் 'யமுனா வெலோடிரோம்' நிர்மாணிக்கப்பட்டிருந்தது. விசேஷ பாதைஅமைப்புக் கொண்ட இந்த ஸ்டேடியத்தில் நாலாயிரம் பேர் வசதியாக அமர்ந்து பார்க்கும்படி இருந்தது. டீ. வி., ரேடியோவுக்கான தனி அமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

மாக்ஸ்வெல் டிரவர் ஒரு மாணவர். இவர்தான் தேசிய சைக்கிள் சாம்பியன். 1000 மீட்டர் ஸ்பிரிண்ட் பந்தயத்திலும் 1000 மீட்டர் Time trial லிலும் ரிகார்டு கண்டவர். பாங்காக்கில் நடைபெற்ற ஆசிய சைக்கிள் போட்டியில் இவர் பங்கேற்றிருக்கிறார். மற்றொரு தேசிய சாம்பியன் சிக்கந்தர் சிங் 4000 மீட்டர் தனி நபர்போட்டியின் வெற்றியாளர். இவரும் பாங்காக்கில் நடைபெற்ற ஆசிய சைக்கிள் போட்டியில் கலந்து கொண்டிருக்கிறார்.

சைக்கிள் ஏழைகளின் போக்குவரத்து சாதனம். விசேஷ சைக்கிள்கள் போட்டிகளுக்கென்று தயாரிக்கப்படுகின்றன. வேகமும் விறுவிறுப்பும் கொண்ட இந்தச் சைக்கிள் போட்டிகளை 1982— ஆசியப் போட்டிகளில் யமுனா வெலோடிரோமில் பார்த்து அதிசயித்தவர் பல்லாயிரக் கணக்கானோர்!

சாமிக்கும் அம்மனுக்கும் தனித்தனிக் கோயில்கள்!



பழங்காலத்தில் ஒரே கோயிலில் சிவனையும் சக்தியையும் காண முடியாதாம்! சிவனுக்கு ஒரு கோயில், சக்திக்கு ஒரு கோயில் என்று தனித் தனியாகக் கோயில்கள் இருக்குமாம்! பிறகு, எப்போதுதான் ஒரே கோயிலில் சிவனையும், சக்தியையும் காண முடிந்ததாம்?

11—ஆம் நூற்றாண்டில் இரண்டாம் இராஜேந்திர சோழன் காலத்தில்தான் சிவன் கோயிலிலே அம்மனின் கோயிலையும் அமைத்தார்களாம்!



பெ.நா. அப்புஸ்வாமி

துள்ளித் திரியும் உங்களின் 93 வயது எழுத்தாளர்!

❋ வருடத்தின் கடைசிநாள் இவரது வாழ்க்கையின் முதல் நாள்! ஆம், 1891–ஆம் ஆண்டின் கடைசி மாதத்தில், கடைசித் தேதியில். – அதாவது 31.12.1891–இல் இவர் பிறந்தார்.

❋ 67 ஆண்டுகளுக்கு முன்பே உங்களுக்காகக் கதைகளையும், கவிதைகளையும், விஞ்ஞான விந்தைகளையும் எழுதத் தொடங்கினார். தொடர்ந்து எழுதி வருகிறார். இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை உங்களுக்காக எழுதியிருக்கிறார். பெரியவர்களுக்காகவும் இவர் பல நூல்கள் எழுதிப் பெரும் புகழும் பெற்றிருக்கிறார்.

❋ அந்தக் காலத்தில் விஞ்ஞானம் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமானால் ஆங்கிலத்தில் படித்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டும். தமிழிலே, புரியும்படியாக விஞ்ஞானக் கட்டுரைகளை எழுதி வழிகாட்டியவர் இவரே!

❋ இவ்வளவு நூல்களை எழுதிய இவர் ஒரு பள்ளி ஆசிரியராக இருக்க வேண்டும் அல்லது ஒரு விஞ்ஞானியாக இருக்க வேண்டும் என்று உங்களில் சிலர் நினைக்கக்கூடும். இரண்டு மில்லை. இவர் பி.ஏ., பி.எல்., பட்டம் பெற்ற ஒரு வழக்கறிஞர்! தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் ஆழ்ந்த புலமை உடையவர்.

❋ பல்கலைக் கழகங்களும், எழுத்தாளர் சங்கங்களும் இவரது தொண்டுகளைப் பாராட்டிப் பட்டங்களும், பரிசுகளும், கேடயங்களும் வழங்கிக் கௌரவித்திருக்கின்றன.

❋ 93 வயதிலும் நல்ல சுறுசுறுப்பாக, இளைஞரைப் போல விளங்கிவரும் இவர், தமது பிள்ளைப் பருவ நிகழ்ச்சிகள் சிலவற்றை இங்கே கூறுகிறார்:

அரைநாள் பள்ளிக்கூடம்

திருவல்லிக்கேணியில் கங்கை மண்டபத் தெருவில் உள்ள ஒரு வீட்டில் நான் பிறந்தேன். தொண்ணூற்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்!

பிறகு, பழைய வீட்டை விட்டு, வேறு ஒரு வீட்டில் வாழ நேர்ந்தது. அது திருவல்லிக்கேணியில் பெரிய தெருவின் தெற்குக் கோடியில் மேற்கு வரிசையில் உள்ளது. அது பெரிய வீடு. பெரிய தெருவின் கிழக்கு வரிசையில் உள்ள ஒரு வீட்டில் ஒரு சிறிய தொடக்கப் பள்ளிக்கூடம்.

அப்போது எனக்குக் கிட்டத்தட்ட ஐந்து வயது ஆகிவிட்டது. 'வீட்டில் அதிக நேரம் விளையாடிப் பொழுது போக்குவதைவிடப் பள்ளிக் கூடத்தில் சேர்ந்து படிப்பது நல்லது. பல குழந்தைகளோடு பழகலாம், எழுதப் படிக்கக் கற்கலாம். நல்ல வாழ்க்கை முறைகளை ஏற்று நடக்கத் தெரிந்து



கொள்ளலாம்.' இவ்வாறு எல்லாம் என் தாய் தந்தையர்கள் எண்ணினார்கள். நல்ல நாள் ஒன்றில் அந்தப் பள்ளிக்கூடத்தில் என்னைச் சேர்ப்பது என்று முடிவு செய்தார்கள். எனக்கு அது மிக்க மகிழ்ச்சி அளித்தது.

அந்த நல்ல நாளின் காலையில் என் தாய் என்னைக் குளிப்பாட்டினாள். என் தலைமயிருக்கு எண்ணெய் தடவி, அதை வாரிப் பின்னினாள். பின்னலை என் முதுகுப் புறத்தில் தொங்கவிட்டாள். என் இடுப்பிலே ஒரு பட்டுக் கரை வேட்டியைக் கட்டினாள். உடலில் ஒரு சொக்காயைப் போட்டு, தலையில் ஒரு குல்லாவை வைத்தாள். புதிய நோட்டுப் புத்தகம் ஒன்றையும், சீவிய பென்சில் ஒன்றையும் என் கையில் கொடுத்தாள். வீட்டின் வெளிவாயில் வரை வந்து, பள்ளிக்கூடத்து வாயிலுக்கு நான் போய்ச் சேரும் வரை அங்கேயே நின்று பார்த்துக் கொண்டிருந்தாள்.

அப்போது, நான் பெற்ற பெருமைக்கும், மன மகிழ்ச்சிக்கும் அளவே இல்லை. நான் தெருவைத் தாண்டி, பள்ளிக்கூடப் படிகளில் ஏறி, அதன் திண்ணைகளைக் கடந்து, உள்ளே சென்றேன். உள்ளே ஒரு தாழ்வாரம். அதன் பிறகு இடது பக்கத்தில் ஒரு கூடம். வலது பக்கத்தில் உயரே கூரை இடப்பட்ட ஒரு முற்றம். அந்த முற்றத்தில் ஒரு வகுப்பு நடந்து கொண்டிருந்தது. பத்துப் பதினைந்து சிறுவர்கள் பெஞ்சுகளில் உட்கார்ந்திருந்தார்கள். அந்த நாளில் சிறுமிகள் பள்ளிக்கூடங்களில் சேர்க்கப் படுவதில்லை.

அந்த வகுப்பில் ஒரு சிறுவன் நின்று கொண்டிருந்தான். அவனை அந்த வகுப்பின் ஆசிரியர் பிரம்பால் அடித்தார். அவன் கதறி அழுதான். உடனே ஆசிரியர் 'கப் சிப்! வாயை மூடு' என்று அதட்டினார். அவன் கதறுவது நின்றது. அவனுடைய கண்களிலிருந்து சொரிந்த கண்ணீர் நிற்கவில்லை.

என் மனம் பதைபதைத்தது. என் மகிழ்ச்சி பறந்து போயிற்று. என் கண்களிலும் கண்ணீர் துளிர்த்தது. அந்த இடத்தைவிட்டு மெல்ல நடந்து, என் வகுப்பறைக்குள் போய்ச் சேர்ந்தேன். அந்த வகுப்பின் ஆசிரியர் மலர்ந்த முகத்தோடு, 'வா! இங்கே உட்கார்' என்று சொன்னார். அங்குள்ள ஒரு பெஞ்சியின் மீது நான் உட்கார்ந்தேன். சிறிது நேரம் சென்றது.

அந்த வகுப்பில் என் வயதே உள்ள ஒரு சிறுவனை ஆசிரியர் ஏதோ கேள்வி கேட்டார். அவன் அளித்த விடை தவறானது. ஆதலால் ஆசிரியர் அவனைப் பிரம்பால் அடித்தார். அவனும் கதறி அழுதான். அவர் என்னை அடிக்கவில்லை. ஆனால் அவனை அடித்த அடி என்மேல் பட்டதைப் போல் நான் துடித்தேன்.

இடைவேளை நேரம் வந்தது. எல்லோரும் வீட்டுக்குப் போகப் புறப்பட்டதைப் போல் நானும் புறப்பட்டேன். கண்ணீரைத் துடைத்துக் கொண்டு வீடு போய்ச் சேர்ந்தேன். என் தாய் தந்தையர்கள் என்னை அன்போடு வரவேற்றார்கள். என் முகத் தோற்றத்தைக் கண்டதும், அவர்கள் ஒன்றும் பேசாமல் சும்மா இருந்தார்கள்.

பள்ளிக்கூடத்தில் நடந்ததை நான் தயங்கித் தயங்கிச் சொன்னேன். 'இனிமேல் பள்ளிக் கூடத்துக்கே போக மாட்டேன்' என்று சொன்னேன். நான் வெளியிட்ட முடிவை அவர்களும் ஒப்புக் கொண்டார்கள். அதன் பிறகு எட்டு வயது நிரம்பும் வரை, என்னைப் பள்ளிக் கூடத்துக்கு அவர்கள் அனுப்பவில்லை. நான் மனம் மகிழ மூன்று ஆண்டுக்காலம் வீட்டிலேயே நிறையப் படித்து வந்தேன்.

பின்நோக்காகப் பார்க்கும் போது அந்த நிகழ்ச்சிகளை இப்படிச் சொல்லலாம் என்று தோன்றுகிறது. ஒருநாள் காலையில் மூன்று மணிநேரம் மகிழ்ச்சியின் இனிய சுவை. அடுத்த மூன்று மணி நேரம் பள்ளிக்கூடத்தில் கசப்புச் சுவை. பிறகு மூன்று ஆண்டுக்கு மேல், மனம் போல வீட்டுப் படிப்பின் மிக இனிய சுவை. கசப்பும் ஒரு சுவை தான் அல்லவா?

அதிசயக் குழாய்!

நான் கைக்குழந்தையாக இருந்த நாளில், என் தாயும் அவளுடைய தோழிகளும், தங்கள் குழந்தைகளோடு திருவல்லிக்கேணிக் கடற்கரைக்குப் போவார்கள். இதைப் பின் நாளில் கேட்டிருக்கிறேன். ஆனால், அது எனக்குச் சிறிதுகூட நினைவில் இல்லை.

சில காலத்துக்குப் பிறகு என் தந்தை திருநெல்வேலியின் மருத்துவ நிலையத்துக்கு மருத்துவராக அமர்த்தப்பட்டார். நாங்கள் அங்கே சென்று, வாழ்ந்து வந்தோம். திருநெல்வேலி உள்நாட்டுப் பகுதியில் உள்ள ஊர். கடலிலிருந்து ஏறத்தாழ நாற்பது கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ளது. ஆதலால், அப்போதும் கடலைப் பார்க்க வாய்ப்பு இல்லை. ஆகவே பார்த்ததில்லை. ஆனால் கடலையும், அதில் எழுந்து கரையில் வந்து மோதும் அலைகளையும், அதில் மிதந்து செல்லும் கப்பல்களையும் பற்றிப் பலர் சொல்லக் கேட்டிருந்தேன். என்னைப் போன்ற குழந்தைகள் சிலரும் அவற்றைத் தாங்கள் பார்த்திருப்பதைப் பற்றிப் பெருமையோடு பேசினார்கள். கடலைப் பார்க்க வேண்டும் என்னும் ஆசை எனக்கு நாளுக்கு நாள் மிகுந்து வந்தது.

அப்போது ஒருநாள் என் தந்தை எங்களை அழைத்துக்கொண்டு தரங்கம்பாடிக்குப் போகத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவித்தார். அதைக் கேட்டதும் என் மனம் துள்ளிக் குதித்தது. முதலாவது, ரயிலில் பயணம் செய்யலாம் என்னும் எண்ணம். ரயில் எஞ்சினின் குப்குப் என்னும் ஓசையும், அதன் புகைப் போக்கியிலிருந்து வீசும் புகையும், கீச்சென்று கத்திக் காதைத் துளைக்கும் அதன் விசிலும், கடகட என்று சுழலும் சக்கரங்களின் ஓசையும் என் மனத்துக்கு மிகவும் பிடித்திருந்தன. தரங்கம்பாடி என்னும் ஊர் கடலின் கரையோரத்தில் உள்ள ஊர். அங்கே போனால் ஆசை தீரக் கடலைப் பார்க்கலாம் என்று நான் எண்ணிய போது என்னுடைய மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.



பிறகு மூட்டைகளைக் கட்டிக் கொண்டு, திருநெல்வேலி ரயிலடிக்கு வந்தோம். ரயிலில் இரண்டாம் வகுப்பு வண்டியில் ஏறினேன். அந்த நாளைய இரண்டாம் வகுப்பு வண்டிக்கு வெளியே பச்சை நிறம் பூசியிருக்கும். முதல் வகுப்புக்கு வெள்ளை நிறம். மூன்றாம் வகுப்புக்குப் பழுப்பு நிறம்.

எங்கெங்கெல்லாமோ ரயிலை மாற்றித் தரங்கம்பாடிக்கு வந்து சேர்ந்தோம். அங்கே ஒரு வீட்டில் தங்கினோம். அந்த வீட்டின் உள்ளே கடலின் ஓசை நன்றாகக் கேட்டது. ஆசையோடு அந்த வீட்டின் பின்பக்கம் போய், அங்கே கடல் இருக்கும் என்று கதவைத் திறந்தேன். அங்கே மற்றொரு தெரு இருந்தது. கடல் இல்லை!

மறுநாள் காலையில் எழுந்திருந்து வெளியே வந்து சுற்றுமுற்றும் பார்த்தேன். கடற்கரை மிக அருகிலேயே இருந்தது. 'அங்கே போய் விட்டு வருகிறேன்' என்று என் தாய் தந்தையரைக் கேட்டேன். 'மணலில் சிறிது விளையாடு. கடலின் நீரில் காலை வைக்காதே!' என்று எச்சரித்து விடை கொடுத்தார்கள். நான் அப்படியே செய்தேன். சில சிப்பிகளைப் பொறுக்கிக் கொண்டு வந்து விளையாடினேன். அன்று பகலில் நாங்கள் எல்லோரும் கடற்கரையில் கட்டப்பட்டிருந்த பெரிய பங்களாவுக்குக் குடிபோனோம். அந்தப் பங்களாவுக்கு 'நாடார் பங்களா' என்பது பெயர்.

அந்த பங்களாவின் மாடியில் சோபாக்கள், நிலைக் கண்ணாடி வைத்த கதவுகள், அதைப் போன்ற கண்ணாடிகளை உடைய பீரோக்கள், நீளவட்டமான பெரிய சாப்பாட்டு மேஜைகள், நாற்காலிகள் முதலியவை இருந்தன. ஒவ்வொன்றும் ஓர் அற்புதமாகத் தோன்றிற்று. நானும் என் தம்பியும், ஒன்றுவிட்ட தங்கைகளும், இன்னும் சில குழந்தைகளும் பகல் முழுவதும் அந்த மாடியில் ஓடி ஆடி விளையாடினோம். அங்கே எதிரே உள்ள கடலில் ஒரு பாய்மரக் கப்பல் சற்றே தொலைவில் மிதந்து சென்றது. என் தந்தையின் நண்பர் ஒருவர் காவல்துறை அலுவலர்.

அவர் குழாயைப் போன்ற ஒரு கருவியை வைத்திருந்தார். அதன்

வழியாக அந்தக் கப்பலைப் பார்த்தார், 'நன்றாகத் தெரிகிறது. குழந்தைகளே, இங்கே வாருங்கள். இதன் வழியாகப் பாருங்கள்' என்று எங்களை அழைத்தார். 'இதைக் கீழே போட்டுவிடாதீர்கள்' என்று எச்சரித்தார். நாங்கள் ஒவ்வொருவராக அதன் வழியாகப் பார்த்தோம். பார்த்த போது, திடீர் என்று பெரிய கப்பல் ஒன்று கிட்ட வந்துவிட்டது! அப்போது நாங்கள் சற்றே பயந்தோம். ஆனால், எங்களுக்கு அச்சத்தைவிட வியப்பே அதிகமாக இருந்தது. மீண்டும் மீண்டும் பார்த்து மகிழ்ந்தோம்.


சிறிது நேரத்தில் அந்தக் கப்பல் ஒருபுறமிருந்து மறுபுறம் வேகமாகச் சென்று அப்பால் போய் விட்டது. 'இன்னும் வேறு ஏதாவது கப்பல் வந்தால், மறுபடியும் காட்டுகிறேன்' என்றார் அந்தப் பெரியவர்.

'அது என்ன குழாய்?' என்று அவரைக் கேட்டோம். ''இது பித்தளையால் செய்த குழாய். முன்னும் பின்னும் கண்ணாடி வில்லை வைத்தது. இதற்கு 'டெலிஸ்கோப்' என்று பெயர்'' என்றார். கடலைப் பார்த்தும், கப்பலைப் பார்த்தும், நாங்கள் அன்று மிகமிக மகிழ்ந்திருந்தோம்.

பழுக்காய் எஞ்சின்

இந்த நாளைக் குழந்தைகள் நல்ல அதிர்ஷ்டசாலிகள். அவர்கள் விளையாடுவதற்கு ரப்பராலும் ப்ளாஸ்டிக்காலும் அழகான பொம்மைகள் செய்யப்படுகின்றன. குழந்தைகளே நேரில் பார்த்து வாங்குவதற்கான கடைகள் பல நகரங்களில் இருக்கின்றன. நான் குழந்தையாக இருந்த நாளில் இவ்வகையான பொம்மைகள் எவையும் செய்யப்படவில்லை.

சுட்ட களிமண்ணால் செய்யப்பட்ட செப்புகள், கிண்ணங்கள், தட்டுக்கள், அவற்றைப் போலவே மரத்தால் செய்தவையும்தான் எங்களுக்கு விளையாடக் கிடைத்தவை. செம்மரத்தால் செய்யப்பட்ட மரப் பாச்சிகளும் இருந்தன. திருப்பதிக்குப் போகிறவர்கள் அவற்றை வாங்கி வருவார்கள். இவற்றின் விலை மிகக் குறைவு. பித்தளையாலும் வெண்கலத்தாலும் செய்யப்பட்ட செப்பு, செம்பு, கூஜா, யானை, மயில் முதலிய பொம்மைகளும் உண்டு. அவற்றுக்கு விலை அதிகம். அழியாத வர்ணம் பூசிய மரப் பொம்மைகள் சில ஊர்களில் கிடைக்கும். அவற்றுக்குப் 'பழுக்காய்ப் பொம்மைகள்' என்று பெயர். இந்த



நாளிலும் வழங்கும் கோலாட்டக் கம்புகள் பழுக்காய் வகையைச் சேர்ந்தவை.

திருவல்லிக்கேணியில் பார்த்தசாரதி கோவிலின் வாசல்புறத்தில் பழுக்காய்ப் பொம்மைக் கடை இருந்தது. என் தாய் எனக்குப் பழுக்காய் எஞ்சின் ஒன்றை வாங்கிக் கொடுத்தாள். அதற்குப் பழுக்காய்ச் சக்கரங்களும், பழுக்காய் உடலும், பழுக்காய்ப் புகைப் போக்கியும் இருந்தன. கறுப்பும், சிவப்பும், மஞ்சளுமாகப் பளபளப்பான வர்ணங்கள் பூசப்பட்ட அந்த எஞ்சினை வைத்துக்கொண்டு நான் ஒருநாள் எங்கள் வீட்டு வாசலில் விளையாடிக் கொண்டிருந்தேன்.

நாங்கள் வசித்த வீட்டின் மற்றொரு பகுதியில் என் தந்தையின் நண்பர் ஒருவர் குடியிருந்தார். அவருக்கு என் வயதுள்ள மகன் ஒருவன் இருந்தான். நான் விளையாடிக் கொண்டிருந்த எஞ்சினை வைத்துக் கொண்டு விளையாட அவன் ஆசைப்பட்டான். அதைத் தரும்படி என்னைக் கேட்டான். நான் 'கொடுக்க மாட்டேன்' என்றேன்.

அவன் தன் தந்தையிடம் சென்று, அந்த எஞ்சினை என்னிடமிருந்து வாங்கித் தரச் சொன்னான். அவர் என்னிடம் வந்து, அதைச் சிறிதுநேரம் அவன் விளையாடக் கொடுக்கும்படி கேட்டார். அவர் எவ்வளவு சொல்லியும் நான் அதைக் கொடுக்க இணங்கவில்லை. அவருடைய மகன் அழத் தொடங்கினான். அப்பொழுதும் நான் இணங்கவில்லை. ஆனாலும், என் மனம் சற்றே வருந்தியது.

அப்போது அவர் தம் வேலையாள் ஒருவனை அழைத்து, அவனிடம் ஏதோ சொன்னார். சில நிமிஷங்களில் அவன் என்னுடைய எஞ்சினைவிடப் பெரியதும்,

புதியதும், நல்ல பளபளப்பு உடையதுமான ஓர் எஞ்சினைக் கொண்டு வந்து, அந்தச் சிறுவனிடம் கொடுத்தான். அந்தச் சிறுவன் அதை ஆவலோடு வாங்கி, அதை வைத்துக்கொண்டு விளையாடத் தொடங்கினான்.

அதைக் கண்டதும் எனக்கு ஒரு பக்கம் பொறாமை ஏற்பட்டது. மற்றொரு பக்கம் அந்த எஞ்சினை வைத்துக் கொண்டு விளையாட வேண்டும் என்னும் ஆசை உண்டாயிற்று. 'நான் என் எஞ்சினைத் தருகிறேன். உன்னுடைய எஞ்சினை நீ கொடு' என்று கேட்டேன். அவன் கொடுக்கவில்லை. நான் என் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, வேறு ஒருபக்கம் போனேன். மனம் கசந்து விளையாடினேன்.

எது நடந்தாலும் அதைப் பற்றி எண்ணிப் பார்க்க வேண்டும் என்று என் தந்தை எனக்குக் கற்பித்திருந்தார். ஆகையால், சிறிது நேரம் சென்றதும், என் மனத்தைத் தேற்றிக் கொண்டேன். 'என்னைப் போலவே அவனும் ஒரு சிறுவன்தானே? நான் தரமாட்டேன் என்றதைப் போலவே அவனும் தரமாட்டேன் என்றான். அது சரிதானே?' என்று தோன்றிற்று.

அப்போது ஒரு தீர்மானம் செய்து கொண்டேன். 'இனிமேல், எந்தக் குழந்தையும் என்னிடம் வந்து எதைக் கேட்டாலும், தயங்காமல் கொடுக்க வேண்டும்' என்பது தான் அந்தப் பிஞ்சு வயதில் நான் கொண்ட முடிவு.

அந்தத் தீர்மானப்படியே, அதன் பின்பு, இந்நாள் வரையிலும் நடந்து வந்திருக்கிறேன். இது கற்பனை அன்று: பொய்யும் அன்று; முற்றும்முழுஉண்மை. நம்முடைய வாழ்வில் நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் நமது மனத்தை விரிவடையச் செய்கிறது; அதைப் பண்படுத்துகிறது என்பதை அந்த நிகழ்ச்சி எனக்கு உணர்த்தியது.

நான் அன்று இளகிய குழந்தை மனத்தை உடையவனாக இருந்தேன். அந்த மனத்தை நான் இன்றளவும் இழக்கவில்லை. அதனால்தான் குழந்தைகளுக்குப் பிடிக்கும் வகையில் கதைகள், பாட்டுக்கள், பாடப் புத்தகங்கள் முதலியவற்றை நான் எழுதி வந்திருக்கிறேன்.

உங்களில் ஒவ்வொருவராலும் என்னைப் போலவே நடக்கமுடியும். அப்படியே நடக்க முயலுங்கள். அப்படிச் செய்து வந்தால் உங்களுக்கும் நல்லது; மற்றவர்களுக்கும் நல்லது.

கதிரவன் வணக்கம் • மு. நாராயணன் •



காலைச் சூரியன் வருகின்றான்—அவன்
கதிர்கள் எல்லாம் விரிக்கின்றான்.
மாலை வரையில் அவனாட்சி — இனி
மனத்தில் எல்லாம் ஒளிஆட்சி!

இரவில் குளிரில் நடுங்குகிற
இளையோர் முதியோர் அனைவர்க்கும்
பகைமை யின்றி ஒளிதந்து—நம்மைப்
பாரில் இனிதே காத்திடுவான்.

பச்சை மரங்களில் பனிநீக்கி—அவை
பாரில் செழித்துப் பயன்தரவே,
உழவர்க் கெல்லாம் உறுதுணையாய்—
அவன்
உயரே நின்று காத்திடுவான்.

நீங்கா நோயை நீக்கிடுவான் — நம்
நிழலை நமக்குக் காட்டிடுவான்.
பாங்காய்ப் படிக்கும் தோழர்களே—நாம்
பண்பால் அவனைத் தொழுதிடுவோம்!

Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032
(Phone: 431543)

Editor: K. Rajendran



REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka

